
# திருக்கோயில்

டிசம்பர் 1974, ரூ. 1

R. R. NO. 958/75
389/55
10/1/75
92





# அருள்மிகு
# சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
# திருத்தணி

**செங்கை மாவட்டம், தமிழ்நாடு.**

தொலைபேசி : { அலுவலகம் : 25   மலைக்கோயில் : 43
மலைப்பாதை : 96   தங்கும் விடுதி : 87

திருமுருகன் உறையுஞ் சிறப்புத் தலங்கள் ஆறுபடை வீடுகளில் ஐந்தாவது படைவீடு திருத்தணிகை. இத்தலம் நக்கீரர், அருணகிரிநாதர், அருட்பிரகாச இராமலிங்க அடிகளார், முத்துசாமி தீட்சிதர் போன்ற பெருமக்களால் பாடல் பெற்றதாகும்.

''நினைத்ததை அளித்திடும், மனத்தினை உருக்கிடும் வழித்துணை வந்திடும்
திருத்தணி முருகனின் இன்னருள் பெற்றிட வாரீர்! வாரீர்!!''

இத்தலம் சென்னை—பம்பாய் இருப்புப் பாதையில் அரக்கோணம் சந்திப்பில் இருந்து வடக்கே 14 கி.மீ. ; சென்னை—திருப்பதிப் பாதையில் 84 கி.மீ. ; திருப்பதியிலிருந்து தெற்கே 54 கி.மீ. ; காஞ்சிபுரத்திலிருந்து வடக்கே 36 கி.மீ.

**தரிசனம் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை**

| | | | |
|---|---|---|---|
| விசுவரூப தரிசனம் | காலை 6 மணி | சாயரட்சை | மாலை 5மணி |
| காலை சந்தி அபிஷேகம் | காலை 8மணி | அர்த்தசாமம் பூசை | இரவு 8 மணி |
| உச்சிக்காலம் | காலை 10 மணி | | |

**விழாக் காலங்கள்**

1. ஸ்ரீ வள்ளித் திருமணப் பெருவிழா ... பிப்ரவரி, மார்ச்சு
2. சிவராத்திரி 1008 சங்காபிஷேகம் ... மார்ச்சு
3. ஸ்ரீ தெய்வானைப் பெருமண விழா ... ஏப்ரல், மே.
4. ஆடிக் கிருத்திகைத் தெப்பப் பெருவிழா ... ஜூலை, ஆகஸ்டு.
5. சஷ்டிப் பெருவிழா ... அக்டோபர், நவம்பர்.
6. திருப்புகழ்த் திருப்படி விழா ... டிசம்பர்.

**வேண்டுதல்**

பாதி நன்கொடைத் திட்டத்தின் கீழ்க் குடியிருப்பு இல்லங்கள் கட்டிக் கொடுக்க விரும்புவோர் ரூ. 10,000 செலுத்த வேண்டுகிறோம்.

தணிகை முருகனுக்குத் தங்கத் தேர்ப் பணி 6 மாத காலமாக நடைபெற்று வருகிறது. பக்தர்கள் தங்கள் காணிக்கையைத் தங்கத் தேருக்குத் தங்கமாகவும், பிற பொருளாகவும் 'திருத் தணிக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

---

95 அறைகளும், 28 குடியிருப்பு இல்லங்களும் யாத்ரீகர்கள் தங்குவதற்கும் பணிச் செலவுக்கும் விடப்படுகிறது.

---

**1974-ஆம் ஆண்டுக் கிருத்திகை நாட்கள்**

*15—7—1974*

*11—8—1974* ஆடிக் கிருத்திகைத் தெப்பப் பெருவிழா
*12—8—1974* ஆடிக் கிருத்திகை 2-ஆம் தெப்பப் பெருவிழா.
*13—8—1974* ஆடிக் கிருத்திகை 3-ஆம் தெப்பப் பெருவிழா
*7—9—1974, 5—10—1974, 1—11—1974, 28—11—1974, 26—12—1974.*

திரு. புலவர் மி. ச. நடேசன்,
அறங்காவலர் குழுத் தலைவர்.

திரு. கலவை. அ. கோபாலகிருஷ்ணன்,
அறங்காவலர்.

திரு. ஊ. ஆறுமுகம், பி.ஏ., பி.எல்.,
உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி.

திரு. வி. எம். துரைசாமி ரெட்டி,
அறங்காவலர்.

முகப்பு :

திருவண்ணுமலை அருள்திரு உண்ணுமுலையம்மை உடனுறை அருணசலேசுவரர் திருக்கோயிற் கோபுரங்களின் அழகிய திருக்காட்சி.

திருக்கோயில்

மாலை 17 | ஆனந்த, கார்த்திகை—டிசம்பர், 1974 | மணி 3


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

* 'திருக்கோயில்' திங்கள் இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விருப்பமுள்ளவர்கள் ''திரு. ஆணையர், அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034'' என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்த்து கொள்ளலாம்.

* அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

* இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

* எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

**ஆண்டுச் சந்தா ரூ. 10-00 தனி இதழ். ரூ 1-00**

## பொருளடக்கம்



1. கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக! —மாண்புமிகு டாக்டர் கலைஞர்
2. கலைப் பெட்டகங்களைக் காத்திடுவோம்! —மாண்புமிகு மு. கண்ணப்பன்
3. தொல்காப்பியரும் திருவள்ளுவரும் —ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
4. என்னிலும் இனியான் ஒருவன் உளன் —டி.என். சுகிசுப்பிரமணியன்
5. பாண்டிமாதேவி —மீனுட்சிமைந்தன்
6. திருப்புல்லாணி —கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்.
7. சமண சமயம் —சீவபந்து டி.எஸ். ஸ்ரீபால்
8. ஜைன சமயத் தமிழ்ப் பெருங்காப்பியம் —பேராசிரியர் தெ.பொ. மீனுட்சிசுந்தரனர்
9. அருள்மிகு அழகிய சிங்கர் பதிகம் —சாரதிதாசன்
10. ஆட்டுவித்தால் யாரொருவர் —கே. எஸ். ஜெகன்னுதன்
11. கச்சியப்ப சிவாச்சாரியார் வரலாறு —திருமுருக கிருபானந்தவாரியார்
12. இறையுண்மையும் இற்றையறிவியலும் —பேராசிரியர் ஞா. தேவநேயப்பாவாணர்
13. திருமந்திரம் —சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
14. தூயநல்லன்பர் துக்காராம் —கவியோகி சுத்தானந்த பாரதியார்



ஆசிரியர்: ந.ரா.முருகவேள் M.A., M.O.L.

துணை ஆசிரியர்: கே.எஸ்.ஜெகன்னுதன்


"என் கடன் பணிசெய்து கிடப்பதே"



# கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக!

## இராமலிங்க வள்ளலார்—காந்தியடிகள் விழாவில் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் பேச்சு

158598

நண்பர் திரு. மகாலிங்கம் அவர்கள், தமிழ் போற்றுகின்ற, தமிழறிஞர்களைப் போற்றுகின்ற செயலைத் தொடர்ந்து செய்துவருவதை, நீதிபதி (மகராசன்) அவர்கள் இங்கே பாராட்டினார்கள். மகாராசரே பாராட்டிய பிறகு, மந்திரி பாராட்டுவது அவ்வளவு பொருத்தமுடையது இல்லையெனினும், தமிழுக்காக—தமிழகத்தின் சிறப்புக்காக வாழ்கிறவர்கள் என்றைக்கும், எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இந்த விழாவை ஒவ்வொரு ஆண்டும் வெறும் நிகழ்ச்சிகளாக மாத்திரம் அமைத்துவிடாமல், நற்பணிகள் நடைபெற வேண்டும் என்ற தூய எண்ணத்தோடு பல முறைகளை வகுத்து நிறைவேற்றும் செயலை நண்பர் மகாலிங்கம் செய்து வருகிறார்கள்.

கவர்னர் மாளிகைத் தோட்டத்திலே அமைந்துள்ள காந்தியடிகளுடைய நினைவாலயத்தை இந்த ஆண்டு பெரியதோர் மண்டபமாக மாற்றியமைத்து அதனுடைய திறப்பு விழா இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் நடைபெற்றது. அதனுடைய செலவில் பாதித் தொகையை அரசு ஏற்றுக்கொண்டது என்று மகாலிங்கம் குறிப்பிட்டார். இன்னொரு பாதியை யார் ஏற்றுக் கொண்டது என்பதை நானே சொல்ல வேண்டுமென்று அவர் விட்டு விட்டார் என்று கருதுகிறேன். மொத்தம் ஆறு இலட்சம் ரூபாய் செலவானதில் தமிழக அரசு



மூன்று இலட்சத்தையும், மகாலிங்கம் நடத்துகின்ற அறக் கட்டளையின் சார்பாக மூன்று இலட்சம் ரூபாயும் அந்தக் கட்டிடத்திற்காக அளிக்கப்பட்டது.

இன்று நாட்டில் ஒரு தன்மை வளர்ந்திருக்கிறது. 'நாடு கெட்டுவிட்டது, நாடு கெட்டுவிட்டது' என்று கெடுத்தவர்களே பேசிக்கொண்டிருக்கிற தன்மை ஒரு புதிய மரபாக ஆகிவிட்டிருக்கிறது. அப்படிச் சொல்வதாலேயே நாம் அவைகளுக்கெல்லாம் நிவாரணம் தேடிவிட்டோம் என்பது பொருள் அல்ல. எல்லோருமே நாடு கெட்டுப் போய்விட்டது, சமுதாயம் ரொம்பவும் கெட்டுப்போய்விட்டது, காந்தியடிகளைப் பின்பற்றவில்லை என்று ஒவ்வொருவருமே பேசிக் கொண்டிருப்பதும், அதற்காக ஆண்டுதோறும் விழா எடுப்பதும், ஒரு எள் முனை அளவாவது அவர்கள் எடுத்துச் சொன்ன வழியிலே நம்மை நாமே நடத்திக் கொள்வதற்கு முனையாமல் இருப்பதும், பேசுவதற்கும், செயலுக்கும் கொஞ்சமும் பொருத்தமற்ற காரியங்களாக அமைந்திடுகின்றன.

எனக்குள்ள ஒரு குறையை இந்த விழாவின் வாயிலாக வெளியிடுவது பொருத்தம் என்று கருதுகிறேன். புத்தரைப் பற்றியும், ஏசுநாதரைப் பற்றியும், நீதிபதி இங்கே எடுத்துச் சொன்னார். அவர்கள் போற்றத்தக்கவர்கள், புகழத்தக்கவர்கள்; அவர்கள் உருவாக்கிய மதம், கொள்கைகள், இன்றைக்கும் வாழ்கின்றன. அவற்றைச் சார்ந்த கோடிக்கணக்கான மக்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள்.

வருகிற நவம்பர் திங்கள் 17-ஆம் நாள் மகாவீரருடைய 2500-வது ஆண்டு விழாவை இந்தியா முழுமையும் நாம் கொண்டாடவிருக்கிறோம். அதற்கு இந்திய அரசின் அளவிலேயே அந்தந்த மாநிலங்களிலே உள்ள அரசுகள் பங்கு பெற்று, அந்த அரசின் தலைவர்கள், அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அந்தக் குழுவில் அங்கம் வகித்து அந்த விழாவைச் சீரோடும் சிறப்போடும் இந்தியப் பூபாகம் முழுவதும் நடத்த வேண்டுமென்ற தாக்கீதுகள் மாநில அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

அதனைத் தொடர்ந்து மகாவீரருடைய கொள்கையை, மதத்தைப் பின்பற்றுகிற மக்கள் இந்தியாவிலே தொகையிலே அதிகமாக இல்லாவிட்டாலும் ஆங்காங்கு சிதறிக் கிடக்கிறவர்கள் அந்தந்த மாநில அரசுகளை அணுகி எப்படி அந்தக் குழுவை அமைப்பது, எப்படி விழாவை நடத்துவது என்றெல்லாம் சிந்தித்து

ஆராய்ந்து முடிவுகளை மேற்கொள்கிருர்கள். தமிழக அரசும் அப்படிப்பட்ட முடிவை மேற்கொண்டு, வருகிற நவம்பர் 17-ஆம் தேதி மகாவீரருடைய திருநாளை நடத்தவிருக்கிறது.

இவைகள் எல்லாம் அகில இந்திய ரீதியில் நடைபெறுகிற நேரத்தில், உலகத்தில் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள் என்று சொல்லிக் கொண்டிருக்கிருேம். அதனை எழுதிய திருவள்ளுவருடைய விழா தமிழக அரசின் அளவிலேதான் நடைபெற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. ஏக இந்தியா பேசுகிருேம், இந்திய ஒருமைப்பாடு பேசுகிருேம், ஆனல் வள்ளுவருக்கு விழா எடுப்பதிலே மாத்திரம் எங்கே அந்த ஒருமைப்பாடு போய் ஒளிந்து கொண்டது என்பது தெரியவில்லை.

நான் அகில இந்திய ரீதியில் மகாவீரருக்கு விழா எடுப்பதை, புத்தருக்கு ஜெயந்தி கொண்டாடுவதை வரவேற்கிறேன். ஆனல் அனைத்து உலகத்திலும் பல்வேறு மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்ட, திருக்குறளின் தலைவன் திருவள்ளுவருக்கு 2000 ஆண்டு விழாவைத் தமிழகத்தின் அளவிலே மாத்திரம்தான் நாம் எடுத்தோமே அல்லாமல் அதனை இந்தியத் துணைக் கண்டத்தின் அளவில் எல்லா மாநிலங்களிலும் எடுப்பதற்கான அந்த ஊக்கத்தையும், உற்சாகத்தையும் மத்தியிலே இருந்து யாரும் எழுப்பாததற்குக் காரணம் என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற இராமலிங்க அடிகளார் விழாவில் என்னென்ன முறையீடுகளை என்பால் வைத்தார்களோ அந்த முறையீடுகள் முடிந்த வரையில் படிப்படியாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே கூறினர்கள். இப்போது ஒரு புதிய முறையீட்டை என்னிடம் தந்திருக்கிருர்கள். வடலூர் வள்ளலார் ஆலய நிர்வாகமும் அதோடு தொடர்பு கொண்ட சித்திவளாகம் பகுதி, அதனுடைய நிர்வாகம் இவைகள் எல்லாம் இன்றைக்கு இருக்கிற அறநிலையத் துறையினுடைய நிர்வாகத்தின்கீழ் இல்லாமல் தனித்தன்மையோடு இருக்க வேண்டுமென்று ஒரு 'சுயாட்சி' கேட்கிருர்கள். அதை நான் மறுத்தால், நான் கேட்பதற்குப் பொருள் இல்லாமல் போய்விடும். ஆகவே அதை ஒரேயடியாக நான் மறுத்துவிடாமல் அதை எவ்வாறு எந்த முறையில் நிறைவேற்றலாம் என்பதை அதிகாரிகளோடு கலந்தாலோசித்து, அறநிலையத் துறையினரோடு பரிசீலித்து, விரைவில் ஒரு முடிவை அறிவிப்பேன்.

இன்றைக்கு வடலூர் தென்னுற்காடு மாவட்டத்திலே இருக்கிறது என்று அந்த மாவட்டத்திலே உள்ளவர்களுக்கே எடுத்துச் சொல்ல வேண்டிய நிலைமையிலும், இராமலிங்க அடிகளுடைய சரித்திரத்தைத் தென்னுற்காடு மாவட்டத்திலே உள்ளவர்களே சரியாகப் புரிந்து கொள்ளாத நிலையிலும் இருப்பதை மாற்றி, இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் குறைந்த பட்சம் தமிழ்நாடு மக்கள் அனைவருமாவது இராமலிங்க அடிகளாரைப் பற்றியும், அவருடைய கொள்கைகளைப் பற்றியும் அறிவதற்கு ஏற்ற வகையில் நாம் செய்தாக வேண்டும். அதற்கு ஒல்லும் வகை எல்லாம் தமிழக அரசு உறுதுணையாக இருக்கும்.

டாக்டர் பட்டம் பெற்றமைக்காக இன்று சிறப்புப் பெற்ற, என்னுடைய நண்பர் அவ்வை நடராசன், எனக்கு எழுதிய ஒரு கடிதத்தில் வள்ளுவருக்குக் கோட்டம் அமைக்கிற நீங்கள், வடலூரிலும் அதைப்போல என்றென்றும் நிலைத்திருக்கத்தக்க, காலத்தால் அழிக்கமுடியாத வள்ளலார் கோட்டம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று எழுதியிருந்தார். வள்ளுவர் கோட்டம் முடிவடைந்த பிறகுதான், அது தொடங்கப்படும் என்று நான் சொல்லமாட்டேன். வள்ளுவர் கோட்டத்தின் வேலைகள் தொடங்கப்பட்டு, அது பாதி நிறைவேறிய அளவில் நண்பர் நடராசன் விடுத்த மடல் செயல் வடிவம் பெறும்.

இங்கே பேசும்போது நீதிபதி அவர்கள் திருமந்திரம் பற்றி விளக்கம் தந்தார்கள். ''அதற்குப் பொருள் தேடி அலையத் தேவையில்லை; ஒருமுறை படித்துவிட்டுத் தூங்கிவிட்டாலே காலையில் புதிய புதிய பொருள்கள் எல்லாம் கிடைக்கும்'' என்று சொன்னர்கள். நீதிபதி சொன்னதை நான் மறுத்துச் சொல்லக் கூடாது. அவர்கள் அதை மிகைப்படுத்திச் சொல்வதற்காகத்தான் அப்படிச் சொன்னர்கள். அவர் சொன்னர் என்பதற்காக ஆளுக்கு ஒரு திருமந்திரம் புத்தகத்தை வாங்கிக்கொண்டு போய் இரவில் ஒரு செய்யுளைப் படித்துவிட்டு, தூங்கிவிட்டுக் காலையில் எழுந்து அதற்குப் பொருள் தெரியவில்லையே என்று நீதிபதியைக் குற்றஞ் சாட்டக்கூடாது. அவ்வளவு எளிய, இனிய முறையில் பழகு தமிழில் அது அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் அவர் இங்கே குறிப்பிட்டார்.

திருமந்திரம் நூலில் எடுத்துச் சொல்லப்பட்ட கொள்கைகள் அனைத்தும், (நான் எதையும் வெளிப்படையாகப் பேசுபவன் என்ற முறையில்) எனக்கு ஏற்புடைய கொள்கைகள் அல்ல. ஆனல் அதிலே இருக்கின்ற தமிழை நான் பாராட்டுகின்றவன். கொள்கைகள் ஏற்புடைதாக இல்லாமல் இருக்கலாம். ஆனல் அந்தக் கொள்கைகள் எழுதப்பட்டிருக்கின்ற தமிழ் இருக்கின்றதே அந்தத் தமிழைப் பாராட்டாமல் போவது பெரும் தவறு.

பெரியாருடைய கொள்கைகள் பலருக்குப் பிடிப்பதில்லை. ஆனல் பெரியார், பெரியாரின் விரோதிகளாலேயே பாராட்டப்படுகின்றவர். மூதறிஞர் ராஜாஜியின் கொள்கைகள் பெரியாருக்குப் பிடிப்பதில்லை. ஆனல் பெரியார் ராஜாஜியைப் பாராட்டத் தவறியது கிடையாது. ''என்னுடைய அன்பார்ந்த பகைவருக்கு'' என்று ராஜாஜி பெரியாருக்கும், ''என்னுடைய அன்புள்ள விரோதிக்கு'' என்று பெரியார் ராஜாஜிக்கும் கடிதம் எழுதுவது வாடிக்கை. ஆகவே கொள்கைகள், அதிலே ஏற்படுகின்ற கருத்து மாறுபாடுகள் வேறு ;

ஆனல் அந்தக் கொள்கைகள் பரவுவதற்காகத் தன்னலம் கருதாமல் ஆற்றிய பணிகள் இருக்கிறதே அவைகளை மதிப்பது என்பது வேறு.

அந்த வகையில் பார்த்தால் திருமந்திரத்தில் எனக்கு ஏற்புடைய கொள்கைகளே இல்லை என்றும் சொல்லிவிட முடியாது. இந்த நூலின் 180-வது பக்கத்தில் 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற வரியோடு ஆரம்பமாகிற செய்யுளை நீதிபதி அவர்கள் இங்கே என்னிடம் எடுத்துக் காட்டினர்.

எங்களை ஆளாக்கிய தலைவர் பேரறிஞர் அண்ணு அவர்கள், அதைத்தான் தான் உருவாக்கிய இயக்கத்தின் கொள்கையாக நாட்டிற்குச் சொன்னர். ஆகவே 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்பது தி.மு. கழகத்தின் கொள்கை மட்டுமல்ல; திருமந்திரக் கொள்கை : அந்தக் கொள்கையைத்தான் நாட்டிலே அண்ணு அவர்கள் எடுத்துச் சொன்னர்கள்.

திருமந்திரத்தைப் படிக்கிற நேரத்தில் எனக்கு ஒரு வியப்புகூட ஏற்படுவதுண்டு. இன்றைக்குத் தமிழில் அர்ச்சனை செய்யலாமா ? செய்யக்கூடாதா? என்பதைப் பற்றித் தமிழ்நாட்டில் பிறந்தவர்கள், தமிழால் வாழ்ந்தவர்கள், தமிழால் பிழைப்பவர்கள் கேள்விக் கணைகளை விடுத்து அதைத் தடுக்க வேண்டுமென்று உச்ச நீதி மன்றம் வரை போய் இருக்கிருர்கள். நீதி மன்றத்து விவகாரம் என்பதால் நான் தலையிட விரும்பவில்லை. ஆனல் தமிழர்கள் இதற்காக வெட்கப்பட வேண்டும்.

ஒரு ஆலயத்திலே அர்ச்சனை செய்கிற நேரமானுலும், அல்லது அபிஷேகம் செய்கிற நேரமானுலும், குடமுழுக்கு நடைபெறுகிற விழாவென்ருலும், புதிதாகக்கூடத் தமிழிலே அர்ச்சிப்பதற்கான அர்ச்சனை மந்திரங்களைத் தயாரிக்கத் தேவையில்லை.

''திருமந்திரம்'' இருக்கும்போது ''ஸ்ரீ மந்திரம்'' ஏன் என்றுதான் எனக்குப் புரியவில்லை. திருமந்திரமே போதும்.

நான் திருமந்திரத்திலே சொல்லப்பட்டு இருக்கிற கொள்கைகள், அதிலே வர்ணிக்கப்பட்டிருக்கின்ற வார்த்தைகள் - காளியைப் பற்றியோ, சக்தியைப் பற்றியோ, சிவனைப் பற்றியோ, அம்பிகையைப் பற்றியோ, அகிலாண்டேசுவரியைப் பற்றியோ, சொல்லப்பட்டிருக்கின்ற அதிலே உள்ள வார்த்தைகள் அல்ல, நான் சொல்வது. தமிழிலே அர்ச்சனை செய்வதற்குத் தமிழ் மொழி தகுதியற்றது என்று கூறுகின்ற தமிழர்களும் இருக்கிருர்கள்; அவர்களுக்கு மத்தியிலே நாமும் தமிழர்கள் என்று வெட்கமில்லாமல் சொல்லிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிருேம். இவைகளை எல்லாம் கரும்பினும் இனிய தமிழ் எடுத்து அருட்பா செய்த வள்ளலார் விழாவில், தமிழ்ப் பெருங்குடி மக்களே! நீங்கள் தயவு செய்து சிந்திக்க வேண்டும்.

அந்த வகையில் கொள்கைகள் எதுவானுலும், கருத்துக்கள் எதுவானுலும் இன்றைக்கு ஆலயங்களிலே இருக்கிற ஆண்டவன்களுக்குத் தமிழ் தெரியாது என்று கூறுவதின் மூலம் நாம் ஆண்டவன்களைப் பழிக்கிருேமா? அல்லது தமிழினைப் பழிக்கிருேமா? அல்லது நம்மை நாமே பழித்துக் கொள்கிருேமா? அல்லது நம்முடைய எதிர்காலத்தை ஒளி மயமாக ஆக்குவதற்குப் பதிலாக இன்னும் ஒரு இருண்டகாலமாக, 5000 அல்லது 6000 ஆண்டு காலத்திற்குப் பின்னேக்கிப் போகிருேமா? சுமார் 2000 ஆண்டு காலத்திற்குப் பின்னல் அதைத் தள்ளினுல்கூடப் பரவாயில்லை. ஏனென்ருல் அப்போது தமிழ் தன்மானத்தோடு வாழ்ந்த காலம். 2000 ஆண்டு காலம் தமிழன் பின்னேக்கிப் போனுல்கூடப் பரவாயில்லை என்று தோன்றுகிறது. காரணம் அந்தத் தமிழன் மானத்தோடு வாழ்ந்தான். தமிழ் மான உணர்ச்சியோடு மதிக்கப்பட்டது. இன்றைக்குத் தமிழில் ஆண்டவனை வணங்கலாமா? என்று கேள்வி கேட்கிற காலம் வந்திருக்கிறது. அதைத் தமிழகம் இன்றைக்குப் பார்த்துப் பரிதாபப்பட்டுக் கொண்டிருக்கிறது. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் என்ன தீர்ப்பு வழங்கவிருக்கிருர்களோ என்று ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறது.

வடலூர் வள்ளலாரைப் பாராட்டுகின்ருேம். அவருடைய வழிதான் சிலாக்கியமான வழி என்று கூறுகின்ருேம். அவர் சைவத்திற்கும், வைணவத்திற்கும், சமணத்திற்கும், பௌத்தத்திற்குமாக எல்லா மதங்களுக்கும் இடையே ஒரு சமரச சன்மார்க்க மதத்தை உருவாக்கினர். அதை மதம் என்று கூடக் கூறவில்லை. சமரச சன்மார்க்க சங்கமென்ருர், சபை என்ருர் என்றெல்லாம் பாராட்டுகின்ருேம். ஆனல் அந்த சமரச சன்மார்க்கத்தில் அர்ச்சனை செய்கின்ற, ஆண்டவனைப் பூசிக்கின்ற தகுதி படைத்த எந்த மனிதனும், அவன் உயர்குடி என்று கருதப்படுகிற குலத்திலே பிறந்திருந்தாலும், தாழ்த்தப்பட்ட குலம் என்று கருதப்படுகின்ற குலத்திலே பிறந்திருந்தாலும், அவன் ஆண்டவனைப் பூசிக்கின்ற தகுதிக்கான அந்தத் தேர்விலே வெற்றி 'பெற்றிருந்தால் அவன் ஆண்டவனைப் பூசிக்கலாம் என்பதை இராமலிங்க அடிகளார் மறுத்தால் நான் அதற்குக் கட்டுப்படுகிறேன். இராமலிங்க அடிகளார் மறுத்தாரா? ஆனல் நாம் மறுக்கிருேம். சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், புராணங்களின் பெயரால், ஆகமங்களின் பெயரால், ஆண்டவன் பெயரால் மறுக்கிருேம். அதற்குப் பிறகும் ''அருட்பெருஞ் சோதி தனிப் பெருங் கருணை'' என்கின்ருேம். நான் நம்மைச் சொல்லவில்லை. இவைகளை எல்லாம் மறுக்கின்றவர்களும் இன்றைக்கு இராமலிங்க அடிகளுடைய பெயரைச் சொல்கிருர்கள் ; வள்ளுவருடைய பெயரை, காந்தியடிகளுடைய பெயரைச் சொல்கிருர்கள். ஆனல் நேர்மாருக இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிருர்கள். இந்த முரண்பாடுகள் களையப்பட்டாக வேண்டும்.

அப்போதுதான் இராமலிங்கருடையவிழா வெடுத்தாலும், காந்தியடிகளுடைய விழா வெடுத்தாலும், புத்தருடைய, மகாவீரருடைய விழாக் கொண்டாடினுலும், எந்த மகாத்மாவின் விழாவைக் கொண்டாடினுலும், அடிப்படையில் நாம் ஏற்ற கொள்கைகளுக்கே மாறுபாடாக நடந்து கொள்கிருேம் என்ற உணர்வு ஏற்பட்டு நம்மை நாமே திருத்திக் கொண்டால்தான் அவர்களை எல்லாம் பாராட்டுவதிலே உண்மையான பொருள் இருக்கமுடியும்.

“குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிட்டோம்” என்றும், ‘மதுவிலக்கை அமுல்படுத்திவிட்டோம்’ என்றும் இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். காந்தியடிகள் விழா கொண்டாடினார்களே; தமிழ்நாட்டில் தலைவர்களும் பேசினார்களே; மற்ற மாநிலங்களில் இருக்கிற தலைவர்களும் பேசினார்களே; அவர்கள் இந்த விஷயத்தில் காந்தியடிகளைத் தமிழ்நாட்டிற்கு மாத்திரம் சொந்தமாக்கிவிட்டுப் போய்விடுகிறார்கள். ஏன் காந்தியடிகளை இந்த விஷயத்தில் மாத்திரம் இந்தியாவிற்குச் சொந்தமாக்க மறுக்கிறார்கள்? காந்தியடிகள் இந்தியாவின் பிதா அல்லவா? தேசத் தந்தையல்லவா? இதிலே மாத்திரம் காந்தியை ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழ் நாட்டிற்கும் குஜராத்திற்கும் மாத்திரம்தான் அவர் சொந்தம் என்று ஆக்கிவிடுகிறார்களே என்ன காரணம்? ஆகவே இவைகளுக்கெல்லாம் இது போன்ற விழாக்களில் நாம் ஒரு நல்ல சூளுரையை மேற்கொண்டாக வேண்டும்.

ஏதோ பதவியில் இருப்பது, அதன் மூலம் பணி புரிவது என்பது வேறு விவகாரம் ; நான் அடிக்கடி கூறியிருக்கிறேன். இப்படிப்பட்ட பெரியவர்களுடைய கொள்கைகள் நாடெங்கும் பரவிட—இராமலிங்க அடிகளார் கூறியதைப் போல “கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக” “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற கொள்கை நிலைத்து நிற்க, மது என்னும் தீமை மாய, குதிரைப் பந்தயம் என்னும் கொடுமை அறவே அகற்றப்பட, மனிதன் மனிதனாக வாழ, மனித சமுதாயத்திலே முளைத் திருக்கின்ற தீங்குகள் அகல, யாராவது தலைமை ஏற்று நடத்துவதற்கு முன் வருவார்களேயானால், அவர்களுக்குப் பின்னால் தொண்டனாகச் செல்ல நான் தயாராக இருக்கிறேன் என்று பல முறை கூறியிருக்கிறேன். அந்த உறுதிப்பாட்டினை இந்த விழாவிலும் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

சென்னை மயிலாப்பூர் இராசேசுவரி திருமண மண்டபத்தில், வள்ளலார்—காந்தியடிகள் விழாக்கள், மாட்சிமிகு நீதிபதி திரு. மகராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றன. வள்ளலார் நற்பணி மன்றத்தின் சார்பில், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு 10 ஆயிரம் ரூபா, முதல்வர் கலைஞர் மூலம் அளிக்கப்பட்டது. பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம் அவர்கள், இத்தொகையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அளித்தார்.

விழாவில் நூலாசிரியர்கள் திரு. வரதராசபிள்ளை, திரு. வன்மீகநாதன், திரு. டி. ஆர். துளசிராம் ஆகியோருக்குப் பாராட்டளிக்கப்பட்டது. நூலாசிரியர்களுக்கு ஆடைகளை அணிவித்துப் பரிசுப் பொருள்களை முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

சங்க காலப் பெண்பாற் புலவர்களைப் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி, டாக்டர் பட்டம் பெற்ற திரு. ஔவை நடராசனுக்கும், முதல்வர் மூலம் பாராட்டளிக்கப்பட்டது. இந்த விழாவில், நல்வாழ்வு நிலையத்தின் சார்பில் பொள்ளாச்சி மகாலிங்கத்திற்கு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால், ‘தமிழவேள்’ என்னும் சிறப்புப் பட்டம் வழங்கப்பெற்றது.
இறுதியில் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் நிகழ்த்திய அரிய சிறப்புரை இங்கு வெளியிடப்பெறுகின்றது. (6-10-64).

—ஆசிரியர்]


## அருள்திரு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்

### பண்ணாரி (அஞ்சல்) கோபி வட்டம் கோவை மாவட்டம்

கோவை மாவட்டத்தில் அருள்திரு பண்ணாரி மாரியம்மன் ஆலயம் புகழ்மிக்க திருக்கோயிலாகும். பண்ணாரி சத்தியமங்கலத்திலிருந்து மேற்கே எட்டுக்கல் (14 கி.மீ.) தொலைவில், மைசூர் செல்லும் நெடுஞ்சாலையில் உள்ளது. தீராத நோயைத் தீர்த்தருளும் அகிலாண்டநாயகி, அன்னை பராசக்தி சுயம்பு வடிவாய் இங்குக் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளாள். தன்னை அண்டியவர்களுக்கும் அடியார்களுக்கும் அருளை வாரி, வாரி வழங்குவதோடு காவல் தெய்வமாகவும் பண்ணாரியில் வீற்றிருக்கின்றாள்.

ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதத்தில் நடைபெறும் குண்டம் திருவிழாவிற்குத் தமிழகம், கன்னடம், கேரளம் எல்லா மாநிலங்களிலுமிருந்தும் லட்சக் கணக்கான பக்தர்கள் கூடுவர். குண்டம் திருவிழா காண்பவர்களை மெய் சிலிர்க்க வைக்கும்.

வழிபடுவோர்கள் வசதியாகத் தங்கிச் செல்ல 5 இலவசச் சத்திரங்களும், குறைந்த கட்டணத்தில் 12 ஒய்வு விடுதிகளும் கட்டப்பட்டு உள்ளன. திருமண மண்டபம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

சி.பி. வீரப்பகவுடர்,
தலைவர், அறங்காவலர் குழு.

கு. சிதம்பரம், பி.ஏ.,
செயல் அலுவலர்.

சி.டி. வெங்கட்ராம நாயுடு,
என். பழனியப்பகவுடர்,
வெ. வீரப்பகவுடர்,
ராமசாமி கவுண்டர்,
சி.ஆர். தங்கவேல்,
பரம்பரை அறங்காவலர்கள்.

எஸ்.ஜி. கண்ணப்பா,
டி.என். இராமசாமி,
வி. வெங்கட்ராமன்,
அறங்காவலர்கள்.

# கலைப்பெட்டகங்களைக்

# காத்திடுவோம்

அறநிலைய அமைச்சர்
மாண்புமிகு மு. கண்ணப்பன்

ஆர்ப்பரிக்கும் கடல் அலைகள் எழுப்பும் ஓசை, அருகேயுள்ள சவுக்கு மரங்களின் வழியாகப் பாய்ந்து துல்லியமான ஒலியை எழுப்பிக் கொண்டிருக்கின்றது. ஓரோர் சமயம் வரும் உல்லாசப் பயணிகளைத் தவிர அநேகமாக வேறு யாரும் அங்கே வருவதில்லை. அமைதியற்ற இந்த உலகத்திற்கும் தனக்கும் தொடர்பே ஏதுமில்லாதது போல் அங்கே ஒரு இளைஞன் கல்லிலே கலைவண்ணத்தைப் படைத்துக்கொண்டிருக்கிறான். ஜல் . . . ஜல் . . . ஜல் . . . ஜல் . . தேர்ந்த இசை வல்லுநர் எழுப்பும் இனிமையான ஒலியைப் போலக் கரடு முரடான கல்லின் மீது இளைஞனின் மெல்லிய கரம் உளி ஓசையை எழுப்பிக் கொண்டிருக்கிறது. தீட்சண்யமான அவனுடைய பார்வை கல்லின் மேல் பதிந்து உள்ளது. வருவோர் போவோரைப் பற்றி அவன் எள்ளளவும் கவலைப்படுவதில்லை. மிகுந்த கவனத்தோடு அவனுடைய கரம் மிகவும் லாவகமாகக் கல்லின் மீது இயங்கிக் கொண்டிருக்கிறது. சற்று நேரத்திற்கு முன்னால் வரை சாதாரண கல்லாய்க் காட்சி அளித்தது இப்போது மெல்ல மெல்ல ஓர் அழகிய உருவம் பெறத் தொடங்குகிறது. ஆரணங்கு ஒருத்தியின் உருவம் அவன் கைவண்ணத்திலே உருவாகிக் கொண்டிருக்கிறது. நீண்ட விழிகள். அவன் இப்போது உண்மையான உயிர்ப்பை உருவாக்கிக்கொண்டிருக்கிறான். ஒரு கண நேரம் கூட அவன் கவனம் வேறு பக்கம் செல்வதில்லை. சிறிது கவனம் மாறினாலும் சிதைந்துவிடும் அந்த உயிரோவியம். சர்க்கஸ் கூடாரத்தில் ஒற்றைக் கம்பியின் மீது நடப்பவனைப் போல் அவன் கைகள் மிகவும் லாவகமாக உளியை இயக்கிக் கொண்டிருக்கின்றன. மனிதனின் உயர்ந்த படைப்பிலே ஒன்றாகச் சிற்பம் இறுதியிலே உருப் பெறுகிறது. நாளை எந்தத் திருக்கோயிலில் இந்தச் சிற்பம் அழகு செய்யப் போகிறதோ நமக்குத் தெரியாது.



மேலே காணும் காட்சி வேறெங்குமல்ல. கடல் மல்லை என்றும், மாமல்லபுரம் என்றும் வழங்கப்படும் ஊரில், நாள்தோறும் காணக் கிடைக்கும் காட்சியாகும். பழமைக்கும் புதுமைக்கும் இணைப்புப் பாலமாக இன்றும் இயங்கிக் கொண்டிருப்பது கடல் மல்லையாகும். அங்கே செயல்பட்டு வரும் சிற்பக் கலைப் பயிற்சி நிலையத்தில் நாம் சென்று பார்க்கும் போதுதான் ஒரு சிற்பம் உருவாகிட எவ்வளவு காலம் தேவைப்படுகிறது. எவ்வளவு கவனம் தேவைப்படுகிறது என்பதை உண்மையில் உணர முடியும். இப்படி நாள் கணக்கில் மாதக்கணக்கில் மற்றும் ஆண்டுக்கணக்கில் சிற்பியின் கற்பனைத் திறம் கொண்டு படைக்கப்பட்ட சிற்பங்களே பல்வேறு திருக்கோயில்களில் இன்றைய தினம் அழகு செய்து கொண்டிருப்பனவாகும்.

இந்தச் சிற்பங்களின் உண்மையான உயர்வினையும் பெருமையினையும் நம் நாட்டு மக்கள் இன்னும் உணராமல் உள்ளனரே என்று எண்ணும்போது மெத்தவும் வருத்தமேற்படுகிறது. விலைமதிப்பற்ற உயிரோவியங்களை உருவாக்கிக் கொடுத்த ஆயிரமாயிரம் சிற்பிகள் எவ்வளவு கஷ்டப்பட்டு அவைகளை உருவாக்கித் தொடர்ந்துவரும் சமுதாயத்திற்கு அளித்திருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கும் நிலை இன்னும் நம் நாட்டில் உருவாகவில்லை. இதன் காரணமாகத்தான் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் சமைக்கப்பட்ட தமிழகத்தில் எங்கும் பரவிக் கிடக்கும் பல்வேறு திருக்கோயில்களில் சிதைந்த சிற்பங்கள் நிறைந்திருப்பதைக் காண்கிறோம். கை உடைந்தவை, கால் உடைந்தவை, தலையிழந்தவை என்று பல்வேறு வகையில் சிதைந்து காட்சியளிக்கும் சிற்பங்கள் உருவாவதற்கு எத்துணைக் காலமும், திறமையும் தேவைப்பட்டு இன்று பாழாகி உள்ளன என்பதை உணர வேண்டும்.

அண்மையில் குமரி மாவட்டம் சுசீந்திரம் தாணுமாலயப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சென்றிருந்தேன். அங்கே அரசர் ஒருவரின் சிற்பம் உள்ளது. திருக்கோயிலைத் திருப்பணி செய்தவன் என்ற பெருமைக்குரிய அரசன் ஒருவனின் சிற்பமாகிய அதன் காதின் வழியாக ஒரு மெல்லிய குச்சியினைச் செலுத்தினால் அது காதின் மற்றோர் வழியாக வருகிறது. அம் மட்டோ! இடது காதின் வழியாக அந்தக் குச்சியைச் செலுத்த அது வலது மூக்குத் துவாரத்தின் வழியாக வருகிறது. அதே போல வலது காதின் வழியாகச் செலுத்தினால் அந்தக் குச்சி இடது மூக்குத் துவாரத்தின் வழியாக வருகிறது. எவ்வளவு அருமையான படைப்பு! சிற்பம் சிதையாமல் எந்த வகையிலே இந்தத் துவாரத்தை அந்தச் சிற்பி உருவாக்கினான் என்பது இன்றளவும் புரியாத புதிராக இருக்கிறது. கற்பனைக்கும் எட்டாத படைப்பு!

அதே திருக்கோயிலின் இன்னோர் பகுதியில் பல்வகை ஒலி எழுப்பும் தூண்கள் நான்கு இருக்கின்றன. இந்தத் தூண்களில் உள்ள செங்குத்தான மெல்லிய கம்பத்திலே இசை நயம் தெரிந்த ஒருவர் சிறு கல்கொண்டு எழுப்பும் ஒலி கம்பத்திற்குக் கம்பம் மாறுபடுவதைக் காணமுடிகிறது. இந்த அரிய படைப்புகளை எல்லாம் உருவாக்குவதற்கு நம் தமிழகத்துச் சிற்பிகள் எவ்வளவு கலை நுணுக்கம் கொண்ட திறமைசாலிகளாக இருந்திருக்க வேண்டும் என்பதை உணர வேண்டும். மதுரை, நெல்லை போன்ற திருக்கோயில்களில் சென்று பார்ப்போம். பண்டைத் தமிழகச் சிற்பிகள் தாங்கள் சமைத்த உருவங்களிலே எவ்வளவு அற்புதமான ''பாவங்களை'' உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை உணர முடியும். கோபம், தாபம், வெட்கம், வேதனை, குரூரம், அன்பு என்னும் எல்லாக் குணங்களையும் மிக அழகாகச் சமைத்திருக்கிறார்கள்.

நெல்லையை அடுத்த கிருஷ்ணன் கோயில் என்னும் சிற்றூரில் உள்ள திருக்கோயிலுக்குச் செல்வோர் அழகிய திருக்கோலங்களைக் காண முடியும். வியக்கத்தக்க வகையில் உயிர்ச் சிற்பங்களைப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே அங்கே உருவாக்கி வைத்திருப்பதைப் பார்ப்போர் அனைவரும் வியப்பில் ஆழ்வது திண்ணம். குதிரை ஒன்றினைத் தாக்கும் வீரன் ஒருவனின் ஈட்டி முனை குதிரையின் உடலில் பாய்ந்து வெளியில் சிறிதளவு மட்டும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. இப்படி ஒவ்வொரு சிற்பமும் ஒவ்வோர் வகையில் பெருமையினைத் தாங்கி நிற்கின்றது. ஆனால் கலைவண்ணம் அறியாச் சிலரின் கைவண்ணத்தால் இச்சிலைகளுக்கு ஏற்பட்ட சிதைவைப் பார்க்கும்போது நம் சிந்தை வேதனைக்குட்படுகிறது. பழந்தமிழரின் பண்பையும், நாகரிகத்தையும், கலாச்சாரத்தையும் சுமந்து கொண்டு ஆண்டாண்டுகளாக அகிலத்திற்கு உணர்த்தி வரும் இவ் விலைமதிப்பற்ற சிலைகளைப் பற்றிய பெருமையையும், அருமையையும், நாம் என்றைக்குத்தான் உணரப்போகிறோமோ என்ற உணர்வே மேலோங்கி எழுகிறது.

இதையெல்லாம் இங்கே நான் நினைவு கூர்வதற்குக் காரணம், அண்மைக் காலத்தில் இந்த நாட்டுக் கலைப் பெட்டகங்களான கற்சிலைகள், செப்புத் திருமேனிகள், ஐம்பொன் சிலைகள் என்ற பல்வகையான சிற்பங்களும், சிலைகளும் படிமங்களும் பெரும் அளவில் சிதைவுக்கு உள்ளாக்கப்படுவதும், அயல் நாடுகளுக்குக் கடத்தப்படுவதும் வேதனைக்குரிய வகையில் பெருகுவது அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பதோடு வெட்கித் தலைகுனிய வைப்பனவாகும்.

தஞ்சை மாவட்டம் சிவபுரத்தில் இருந்து கடத்தப்பட்ட ஓர் சிலை 75 இலட்சம் ரூபாய்க்கு அமெரிக்க நாட்டில் விற்பனையானது என்ற செய்தியை நாளேடுகள் தாங்கி வந்தபோது தான், நம் நாட்டுக் கற்சிலைகளின், செம்பொற் சிலைகளின் உண்மையான பெருமையை நம்மில் பலரும் உணரும் நிலை ஏற்பட்டது. இக்கடத்தல்களுக்கு உறுதுணையாக இருக்கும் நம் நாட்டுக் கயவர்கள் சிலர் இதன் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களை ஈட்டிட முடிகிறது. இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும். நம் நாட்டு அரிய கலைப் பெட்டகங்கள் எவ்வகையாலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உணர்வு நமக்கு ஏற்பட வேண்டும். இவைகளின் பாதுகாப்பை ஒட்டி இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பாதுகாப்பற்றுக் கிடக்கும் இக்கலைச் செல்வங்களையெல்லாம் ஒன்று திரட்டிப் பாதுகாப்பான இடத்தில் வைத்துப் பொது மக்களின் பார்வைக்கும் வழிபாட்டுக்கும் உரியனவாக்கப் பட்டுள்ளன. இப் படிமங்களை நிழற் படங்கள் எடுத்து இவைகளை யெல்லாம் தக்க முறையில் பாதுகாத்திட அறநிலையத் துறையின் மூலம் சீரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிலைத் திருட்டைக் கண்காணிக்கத் தனிக் காவலர் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டு, கடத்தப்பட்ட சிலைகளைத் திரும்பப் பெறுவதற்கான பல்வேறு முயற்சிகளும் அரசு தரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் அரசு தரப்பில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் மட்டுமே இவ்வரிய கலைப் பெட்டகங்களைப் பேணிப் பாதுகாப்பதில் முழுமையாக உதவ மாட்டா. ஒவ்வோர் ஊரிலும் உள்ள பொதுமக்கள் அவ்வூரில் கிடைக்கும் இச்சிலைகளின் பாதுகாப்புக்கு அனைத்து உதவியினையும் செய்திட முன்வர வேண்டும். தங்களுக்குள் ஒரு குழு அமைத்துக் கொண்டாவது தங்கள் ஊரில் உள்ள சிலைகளைக் காத்திட முன்வரவேண்டும்.

அடுத்து நசித்து வரும் இச் சிற்பக் கலைக்கு உயிர் தரவேண்டியது நம் பொறுப்பாகும். ஆண்டாண்டுக் காலத்திற்கு அழியாமல் நின்று நிலவிடும் இச்சிலைகளைச் சமைக்கும் சிற்பிகளுக்கு நல்ல ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிக்க வேண்டியதும் நம் கடமையாகும். இந்த வகையில் அரசும் அறநிலையத் துறையும் ஆற்றிடும் அனைத்துப் பணிகளுக்கும் பொது மக்கள் உறுதுணையாக நின்றிட வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

—oOo—

# அருள்திரு

# அர்த்தநாரீசுவரர் ஆலயம்

## திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்

திருச்செங்கோடு என இப்போது வழங்கப்பெறும், இத்தலம் சங்ககிரி துர்க்கம் என்ற இருப்புப் பாதை நிலையத்தில் இருந்து, தென் கிழக்கில் 6 மைல் அளவில் கற்சாலையில் அடையத்தக்கது. பேருந்து முதலிய வசதிகள் உண்டு. மலையடிவாரத்தில் இது பெரு நகராக விளங்குகின்றது. மலை செங்குத்தாய் மிக்க உயரம் உள்ளது. ஏறித் தரிசித்து வருதல் சிறிது கடினம்.

தலவரலாறு : திருச்செங்குன்றூர், நாகமாமலை—இடபமலை—துர்க்கைமலை முதலிய பல பெயர்கள் இதற்கு வழங்கும். ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் உண்டாகிய பூசலில், மகா மேரு மலையின் ஆயிரம் சிகரங்களில் ஒன்று, அதனை மூடியிருந்த ஆதிசேடனுடைய ஒரு தலையுடன் பறிக்கப்பட்டு வீழ்ந்து மூன்று துண்டமானதில் ஒன்று இம்மலையாயிற்று. அதனால் பின்னர் இது நாகமலை எனப் பெயர் பெற்றது என்று புராணம் கூறும். மலையின் வடிவமும் ஒரு நாகம் போன்று இருத்தல் காணலாம். இத்தலத்தில் அம்மையார் தவஞ் செய்து இறைவனது திருமேனியில் ஒரு பகுதி தம்முடையதாகப் பெற்றனர். இதனையே அர்த்தநாரீசுவரர் அல்லது 'மாதிருக்கும் பாதியர்' என்று சைவ நூல்கள் எல்லாம் விதந்து பேசும். இத்திருவுருவம் மூலத்தானத்தில் விளங்குகின்றது. இஃது இத்தலத்துக்கே சிறப்பாக உரியதாகும். இது திருப்பரங்குன்று போலச் சிவபெருமானது சிறந்த தலமாகவும், செங்கோட்டு வேலர் சந்நிதி கிழக்கு நோக்கியும் உள்ளன. இத்தலத்தில் முருகன் அம்பிகை விஷ்ணு பிரமன் துர்க்கை ஆதிசேடன் ஆகியோர் பூசித்துப் பேறு பெற்றனர். இத்தலம் விறல்மிண்ட நாயனார் அவதாரத் தலம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் இத்தலத்தை வந்து தரிசித்து ''வெந்த வெண்ணீறு அணிந்து'' என்ற திருப்பதிகம் பாடியருளினர். இத்தலத்துத் திருப்பதிகத்தில் மாதிருக்கும் பாதியனாகிய திருக்கோலத்தையும், இறைவனின் நின்ற திருக்கோலத்தையும், சுவாமிகள் பலவாறு பாராட்டிப் பாடியிருத்தல் காணலாம். திருஞானசம்பந்தர் இங்கு நின்றும் புறப்பட்டுக் கொங்கிற்குடபுலத்துத் தலங்களைத் தரிசித்துத் திரும்பியபோது, இவ்வூரில் குளிர் சுரம் பரவி வருத்தம் செய்தது. அது தீர்தற் பொருட்டு 'அவ்வினைக்கு இவ்வினையாம்' என்று தொடங்கும் திருநீலகண்டத் திருப்பதிகத்தைப் பாடித் 'தீவினை தீண்டப் பெறு' என்று ஆணையிட்டருளினர். அதனால் அந்நாடு முழுமையும் அப்பிணி தீர்ந்து மக்கள் யாவரும் இன்புற்றனர். இன்றைக்கும் அத்திருப்பதிகத்தை நியமமாகப் பாராயணஞ் செய்தால், சுரம் முதலிய நோய்கள் நீங்கப் பெறுதல் கண்கூடு. விஷ்ணு சந்நிதியும் இக் கோயிலில் உண்டு. விஷ்ணுவுக்கு ஆதிகேசவப் பெருமாள் என்று பெயர். கல்வெட்டுக்கள் : பரகேசரிவர்மனை முதலாம் இராசராசன், மதுரைகொண்ட முதற் பரகேசரிவர்மன், சுந்தரபாண்டிய தேவன், சொக்கப்ப நாய்க்கன், சொக்கலிங்க நாய்க்கன், மைனர் கிருஷ்ண ராஜ உடையார் முதலிய அரசர்களின் கல்வெட்டுக்கள் இங்குக் காணப்படுகின்றன. அவற்றால் அறியப்படுவன பெரும்பாலும் அந்தணர்களுக்கு அன்னதானமும், யாத்திரை செய்வோர்க்கு உணவும், விளக்கிற்கு நெய்யும் அளிக்கப்பட்ட நிபந்தங்களேயாகும்.

சுவாமியின் பெயர் : அர்த்தநாரீசுவரர், மாதிருக்கும் பாதியன்.

அம்மை பெயர் : பாகம்பிரியாள், அர்த்தநாரீசுவரி, அர்த்தநாரீசுவரரின் பாதத்தில் ஒரு சிறு ஊற்று அமைந்துள்ளது.

செய்து முடிக்கத் திட்டமிட்டுள்ள வேலைகள் :

1. கோபுரத் திருப்பணி : ரூ. 2 இலட்சம்.
2. மலைக்கோயிலுக்கு இழுவை ரயில் அமைத்தல் : ரூ. 7.75 இலட்சம்.

ம.ப. சாரங்கபாணி, பி.ஏ.,
செயல் அலுவலர்.

என்.எ. நடேசன்,
குழுத் தலைவர்.

கே. எம். சின்னுசாமி,
டி. சி. செங்கோடன்,
ஏ. கொமாரசாமி,
சி. வீரமணி,
அறங்காவலர்கள்.

# தொல்காப்பியரும் திருவள்ளுவரும்

ந. ரா. முருகவேள். M.A.M.O.L.,

**முன்னுரை :**

தொல்காப்பியர், தமிழ்ப் பெருஞ் சான்றோர்களிலெல்லாம் தலைசிறந்த ஒருவர். தமிழ்த் தாயின் தலையாய தனி முதற் பெரும் புதல்வர் எனத் தொல்காப்பியரைக் குறிப்பிடலாம். இஞ்ஞான்று நம்மனோரால் சிறந்தோராக அறிந்து பாராட்டப் பெற்று வரும் நூலாசிரியர்கள் பலருள்ளும், மிகவும் பழமை வாய்ந்த நூலாசிரியர் தொல்காப்பியரே. தமிழ்மொழி தழைக்க அரும் பெருந்தொண்டுகள் புரிந்த அறிஞர்கள் யாவரினும் மேலாயவர் அவரே எனலாம் ; தமிழர்களிலேயே தலையாய பெருந் தமிழர், தலையாய மாபெரும் சான்றோர் என அவரைப் புகழ்தல் பெரிதும் பொருந்துவதாகும். தொல்காப்பியரின் விளைவாற்றல், மிகப் பன்னெடுங் காலமாகத் தமிழ் மொழியின்கண் பிரிவற விரவிப் பெரிதும் ஊருடுவி நின்று, இன்றளவும் குன்றாது ஓங்கி நின்று, எழில் ஒளி வீசித் திகழ்ந்து வருகின்றது.

சங்க காலப் பெரு மக்களும், ஆழ்வார்கள் நாயன்மார்கள் ஆகிய சமய குரவர்களும், பிற்காலப் பெருங் கவிஞர்களுமெல்லாம் ஒருசேரத், தொல்காப்பியர் வகுத்தருளிய செந்தமிழ்ச் செந்நெறி பிறழாமல் போற்றித் தழுவியே ஒழுகியுள்ளனர். தொல்காப்பியர், நூலாருள் நூல்வல்ல பேராசியர். மனித முயற்சியளவினுற் கல்விப் புலமை கைவந்த ஏனையோர் போலாமல், தெய்வப் புலமை சிறந்து திகழ்ந்த தொல்லாணை நல்லாசிரியர்; வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவர் ; பொறிவாயில் ஐந்தவித்த திறலர் ; பல் புகழ் நிறுத்த படிமையோர்! முக்குணவயத்தால் முறை மறைந்து அறையும் நூலுரை போதகாசிரியர்கள் போலாமல், சிவஞான முனிவரர் புகழ்தற்கேற்பத், 'தவத்தான் மனந் தூயராய் முக்குணங்களையும் கடந்து இறைவனருள் பெற்றுடையவர்' தொல்காப்பியர். அவர் நிறைமொழி மாந்தர்; பிழைபடாப் பெற்றியர் ; இமயமும் பொதியமும் போலும் பெருநிலையில் தமிழ்மலை எனப் பிறங்குபவர்!

''ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனார்'' என்று உரையாசிரியர்கள் அனைவரும், ஒருமுகமாகப் புகழ்ந்து போற்றும் பெருமையினர் அவர்! தமிழ் மொழிக்கண் உயர்வற உயர்ந்துள்ள மேலாந்தரமான நூல்களிலெல்லாம் மேம்பாடு மிக்கு விளங்குவது தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியம் என்னும் விழுமிய முழு முதல் இலக்கண நூலேயாகும்! அதன் அருமை பெருமைகளைக் கருதி, உரையாசிரியர்கள் அதனைத் ''தொல்காப்பியக் கடல்'' என்றே குறிப்பிட்டுப் போற்றி யுரைப்பரெனின், அத்தகைய மாட்சிமை மிக்க அரும்பெரும் நூலினை இயற்றிய ஆசிரியர் தொல்காப்பியரின் சிறப்பு, இனையதென எம் ஒரு நாவாற் கூறல் ஒல்லுமோ?

**இலக்கணத்தின் இன்றியமையாமை :**

நம் அருமைச் செந்தமிழ் மொழிக்குத் தொண்டு புரிந்தோரும், புரிந்து போதருவோரும் அளவிலர் பல்லாயிரவர் எனினும், அவருளெல்லாம் தலையாய முதற் பெருந் தமிழ்த் தொண்டர் தொல்காப்பியரே யாவர் எனத் துணிந்து கூறலாம். ''பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும் நில்லா உலகம் புல்லிய நெறித்தே'' எனத் தொல்காப்பியர் தாமே கூறுமாறுபோல, நிலையாமையே நிலைபெற்ற இவ்வுலகியற் பொருள்களனைத்தும் கணந்தொறும் மாறி மாறிச் சென்று மறைந்தொழியும் தன்மையனவாகக் காணப்படுகின்றன.

அங்ஙனம் காலப் போக்கில் மாறி மாறிச் சென்று மாய்ந்து மறையும் தன்மையினைத் தமக்கே யுரிய சிறப்பியல்பாகப் பெற்றவை, மக்கள் வழங்கும் மொழிகளே யாகும். ''நெருதல் (முன்னாள், முற்காலம்) வழங்குமொழி இன்றில்லை என்னும் பெருமையுடைத்திவ்வுலகு'' எனவும் கூறத்தக்க முறையில், மொழி வழக்காறுகள் நம்மை அறியாமலே சிறிது சிறிதாக மாறி மாறிச் சென்று, பின் அறவே மாய்ந்தொழியும் நிலையை எய்திவிடுகின்றன.

> ''நடு அமெரிக்காவில் உள்ள நாகரிகம் அற்ற மக்கட் கூட்டத்தினரின் மொழியினைச் சமயத் தொண்டர்கள் சிலர் எழுதி வைக்க முயன்றார்கள். தங்கட்குக் கிடைத்த எல்லாச் சொற்களையும் கொண்டு அகரநிரல் ஒன்றையும் அவர்கள் பெரிதும் கருத்தூன்றித் தொகுத்தார்கள். பத்தாண்டுகள் கழித்து அம்மக்கட் குழுவினரிடையே அவர்கள் மீண்டும் சென்று பார்த்தபோது, அவர்கள் தொகுத்த அகர நிரலானது பழமையாய்ப் பழுதுற்றும் பயனற்றும் ஒழிந்தமையினை உணர்ந்தார்கள். பழைய சொற்கள் மண்ணோடு மண்ணாய் மறைந்து விட்டன; புதிய சொற்கள் தலைதூக்கி நின்றன; அந்த மொழியானது அறவே மாறிப் போயிருந்தது..''(1)

---

(1)"We read of missionaries in Central America who attempted to write down the language of savage tribes, and who compiled with great care a dictionary of all the words they could lay hold of. Returning to the same tribe after a lapse of ten years, they found that this dictionary had become antiquated and useless. Old words had sunk to the ground and new ones had arisen to the surface; and to all outward appearance the language was completely changed."

—Prof. Maxmuller, The Science of Language.

எனப் பேரறிஞர் மாக்சுமுல்லர் கூறுதலால், மொழிகள் எத்துணை விரைவில் மாறி மறைந்து விடும் இயல்பின என்பது நன்கினிது விளங்கும்.

**இலக்கணமும், மொழியும் :**

வடமொழியானது, வேத காலத்தில் வழங்கிய நிலைக்கும், காவிய காலத்தில் வழங்கிய நிலைக்கும், பெரிதும் வேறுபாடு உண்டு. பாவுல்ஃப் (Beowutf), கேட்மான் (Caedmon) முதலியவர்களின் கால ஆங்கிலத்திற்கும், லேங்க்லண்ட் (Langland), சாசர் (Chaucer) கால ஆங்கிலத்திற்கும், இந்நாளில் வழங்கும் ஆங்கிலத்திற்கும் உள்ள இடையீடு மிகப் பெரிது. (2) தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் துளு முதலிய மொழிகள் ஒன்றினொன்று அறவே வேறுபட்டு வெவ்வேறு தனி மொழிகள் ஆக நேர்ந்தமையும் கருதற்பாலது. மக்களின் கூட்டு வாழ்க்கைக்கும், நாகரிகப் பண்பாட்டு வளர்ச்சிக்கும், மொழியானது திரிபுபடாமல், நிலைத்த தன்மையுடன், நெடுங்காலம் ஒரு தொடர்புபட்டு வழங்க வேண்டுவது, இன்றியமையாததாய் இருக்கின்றது! அப்போதுதான் முன்னே முன்னே வாழ்ந்த மக்களின் கருத்தும் அறிவும் அனுபவமும் பிறவும் இடையறவுபடாமல், பின்னே பின்னே தோன்றலுறும் மக்களுக்கெல்லாம் பயன்படும் வகையில், ஒரு தொடர்புபட்டு வழங்கி நலம் விளைவித்தல் இயலும்! இங்ஙனம் இன்றாயின், தொல்காப்பியர் திருவள்ளுவர் திருநாவுக்கரசர் மெய்கண்டார் போன்ற சான்றோர்கள் அருளிச் செய்த பொருண் மொழிகளை, இன்றும் நாம் கற்றுப் பயனெய்துதல் இயலுமோ? எனவேதான், அவரவரும் தத்தம் தாய்மொழியை என்றும் மாறா வகையில் நின்று நிலவுமாறு இலக்கண இலக்கிய வரையறைகள் வகுத்து வளம்படுத்தி வளர்க்க வேண்டியுள்ளது. ஒரு மொழிக்குப் பாதுகாப்பாக அமைவது அதன் இலக்கணமே ஆகும். ஒரு மொழிக்கு நிலைப்பாடு (Stabilisation), தகுதிப்பாடு (Standardisation), ஒருமைப்பாடு (Unification) என்பவற்றை யுண்டாக்கி நலம் விளைவிப்பது, இலக்கணமே என்பது அனைவரும் ஒப்ப முடிந்த உண்மை.

> ''இலக்கண இலக்கிய நூல்களும், போக்குவரவுத் தொடர்பு வசதிகளும் இல்லாமல் செய்யப்பட்டால், இங்கிலாந்து—அமெரிக்க நாடுகளின் மொழிகள் கூட, பிரான்சு இத்தாலி ஆகிய நாடுகளின் மொழிகளைப்போல மிக விரைவில் திரிபெய்திவிடும்'' (3)

எனப் பேராசிரியர் சாய்ஸ் கூறுதலும் கருதியுணர்தற்குரியது.

**தொல்காப்பியர் சிறப்பு :**

இவ்வுண்மைகள் பலவும் உணர்ந்து, நம் செந்தமிழ் மொழியினை, என்றும் குன்றா இளமை எழிலிற் பொலிவிக்கத் தொண்டுகள் புரிந்த சான்றோர்கள் யாவரினும், தொல்காப்பியர் தனி முதற் பெருஞ் சிறப்பு உடையவராவர்! அவர் தமிழ் கூறும் நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆராய்ந்தார்; எழுத்தும் சொல்லும் பொருளும் நாடினார்; முந்து நூல் கண்டார்; முறைப்பட எண்ணினார்; செந்தமிழ் இயற்கை சிவணிய புலம் தொகுத்தார்; மயங்கா மரபின் எழுத்து (இலக்கியம்) முறை காட்டினார்; தொல்காப்பியம் என்னும் போக்கறுபனுவலை ஆக்கித் தந்தார். ''அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்'' எனச் சிவஞான சித்தியார் கூறுவதுபோன்று, தமிழ் மொழியானது இன்றளவும் பெற்றுள்ள வாழ்வனைத்தும் தொல்காப்பியரின் தொண்டால் விளைந்த ஆக்கமேயாகும் எனத் துணிந்துகூறலாம். இங்ஙனம் தொல்காப்பியர் தமிழுக்குச் செய்தருளிய ''நீளுமித் தொண்டின் நீர்மை நினைக்கில்ஆர் அளக்க வல்லார்?''

**தொல்காப்பியரும், திருவள்ளுவரும் :**

ஞாயிற்றினொளி எவ்வாற்றாலேனும் படராத இடம் இவ்வுலகத்தில் யாண்டும் இன்மை போல, தொல்காப்பியரின் விளைவாற்றல் எவ்வாற்றாலேனும் இயையப்பெறாத ஒரு சிறு கூறுதல் தமிழ் மொழிக்கண் இல்லை; தொல்காப்பியரின் தூய தமிழ்ப் பெருங் கருத்துக்களை எவ்வகையாலேனும் போற்றி மகிழாத தமிழ்ச் சான்றோர்கள் ஒருவரேனும் இலர்! உலகமெல்லாம் ஒரு முகமாக உயர்த்தெடுத்துப் பாராட்டி யுரைக்கும் தெய்வப் புலவர் திருவள்ளுவர் தாமே, ஆசிரியர் தொல்காப்பியனாரின் அடிச்சுவடு பின்பற்றிச் சென்றனர் எனின், வேறு பிறிது கூறுதலும் வேண்டுமோ?

(1) ''அந்நிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்ப'' எனத் தொல்காப்பியர் சுட்டியதனை ஒட்டியே, திருவள்ளுவர் தமது திருக்குறளில் அறம் பொருள் இன்பம் என்னும் மும்முதற் பொருளையும் விளக்கத் தலைப்பட்டார்.

(2) ''மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்'' எனத் தொல்காப்பியனார் விதித்ததன்றோ, அகரத்தின் தலைமை தேற்றி ''அகரம் முதல எழுத்தெல்லாம்'' எனத் திருவள்ளுவர் துணிந்துரைத்தற்கு ஏதுவாயிற்று?

---

(2) "Just compare the language of Caedmon, of Langland, of Chaucer, of Shakespeare, of Milton and of Tennyson, one with the other, and see to what extent the language of one poet differs from that of the other.

The Tamil words that are more than seven thousand years old, have not undergone any change in the mouths of the masses and the classes. The sacred Thirukkural written two thousand years ago, is intelligible even now to an illiterate rustic. Does not this indicate the great vitality of the Tamil language ?"

—MARAIMALAI ADIGAL.

(3) ''Destroy literature and facility of intercommunication and the language of England and America would soon be different, as those of France and Italy''.

—Prof. Sayce.

(3) ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப'' என்னும் தொல்காப்பிய நூற்பாவின் எதிரொலி போன்றன்றோ, ''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்'' என்னும் திருக்குறள் இலங்குகின்றது?

(4) ''உயர்திணை என்மனர் மக்கட் சுட்டே'' எனத் தொல்காப்பியர் கூறியதன் நுட்பம் ஓர்ந்தன்றோ, ''மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்'', ''உறுப்பொத்தல் மக்கள் ஒப்பன்றால்'' எனத் திருவள்ளுவர் அருளிச் செய்வாராயினர்!

(5) ''ஒன்றியுயர்ந்த பாலதாணை'' எனவும், ''பால்வரை தெய்வம்'' எனவும் தொல்காப்பியர் சுட்டியதே, ஊழ் எனத் திருக்குறளின்கண் தனி இயலாக அமைத்து விரித்துரைக்கப்படுவதாயிற்று!

(6) ''இழுமென் மொழியான் விழுமியது நுவறல்'' எனத் தொல்காப்பியர் குறித்ததனையே ''தொல்வரவும் தோலும் கெடுக்கும்'' என்புழித் திருவள்ளுவர் தழீஇயினர் !

(7) ''அறக்கழி வுடையன பொருட்பயம் படவரின், வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப'' என்னும் தொல்காப்பியமே ''பொய்ம்மையும் வாய்மை இடத்த'' எனத் திருக்குறள் புகலுதற்கு ஆதரவு தந்தது!

(8) ''நிலந்தீநீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்'' எனத் தொல்காப்பியர் அருளியதே, ''சுவை ஒளி ஊறோசை நாற்றம் என்றைந்தின் வகை தெரிவான் கட்டே யுலகு'' எனவரும் திருக்குறட்கு அரண் செய்தது!

(9) ''நாட்டம் இரண்டும் அறிவுடம்படுத் தற்குக் கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்'' எனப் போதரும் தொல்காப்பியர் கூற்றே, ''கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல'' என்னும் குறளைத் தோற்றியது!

(10) களவு கற்பு என இரு பிரிவாக வகுத்து விளக்கப் பெற்ற திருக்குறட் காமத்துப் பால் முழுவதுமே, திருவள்ளுவர் தொல்காப்பியரை எத்துணை யளவுக்குப் பின்பற்றித் தழீஇச் சென்றுள்ளார் என்பதற்குச் சான்று பகரும்!

(11) இனி, வேறொரு முதன்மையான செய்தியும், ஈண்டு நாம் பெரிதும் கருதி மகிழத் தக்கதாக உள்ளது. தொல்காப்பியரும் திருவள்ளுவரும் இறையுணர்விலும், இறைவன் ஒருவன் உளன் என்று செவ்விதிற் தெளிந்து வலியுறுத்தி நிலை நிறுத்துதலிலும், அவ்விறைவனை வழிபடுதல் மக்கட்குலத்தின் நல்வாழ்விற்கு மிக மிக இன்றியமையாததென்று உணர்ந்து இறைவழிபாட்டை வற்புறுத்துதலிலும், ஒத்த கருத்தினராக உள்ளனர்.

## இறையுணர்வும் வழிபாடும் :

வழிபாடு என்பது மனித வாழ்க்கைக்கு மிக மிக இன்றியமையாத ஒன்று. உடல் நலத்திற்கு உணவு தேவை; அதுபோல உயிர் நலத்துக்கு வழிபாடு மிகவும் தேவை. தண்ணீர் நமது தாகத்தைத் தணித்து, நம் உடலுக்கு நன்மைகள் புரிகின்றது; அதுபோல வழிபாடு நமது ஆன்ம தாகத்தைத்தணித்து, நம் உயிர்க்கு நன்மைகள் பல விளைவிக்கின்றது. வாழ்விற்குக் காற்று மிக மிக வேண்டப்படுவது; மூச்சுக் காற்று இல்லாமற் போனால் நாம் ஒரு சில கணங்களும் வாழ்தல் கடினம்; அங்ஙனமே நமது ஆன்மிக வாழ்விற்கு வழிபாடு என்பது, பெரிதும் வேண்டுவதொன்றாக உள்ளது. மூச்சுவிடுதல் இயல்பாக நிகழமுடியாமற் போகுமாயின், நாம் பெரிதும் திக்குமுக்காடிப் போவோம். அவ்வாறே வழிபாடு என்பதனை, நாம் நம் வாழ்க்கையிற் கடைப்பிடிக்காதொழிந்தால், நமக்கு வாழ்க்கையில் இடையறாத பல அல்லல்களும், தொல்லைகளும், கவலைகளும் நேர்ந்து கொண்டே யிருக்கும். இவ்வுலகில் தொல்லைகளும் கவலைகளும் இன்றி, நாம் இன்புற்று வாழ்வதற்கு உரிய ஒரே ஒரு நேரிய வழி, ''தனக்குவமை இல்லாதான் தாள் சேர்தல்'' ஆகிய வழிபாடு புரிதலேயாகும்.

நமது உடலிற்படியும் அழுக்குகளை, நீராடிக் குளித்துப் போக்கிக் கொள்கின்றோம்; அவ்வண்ணமே நாம் நமது உள்ளத்தைப் பற்றியுள்ள பலவகை மாசுகளையும் இறைவனைத் தியானித்து வழிபாடு புரிவதன் மூலம் போக்கிக் கொண்டு மகிழ்வுடன் வாழலாம். உடலுக்கு நேரும் பிணிகளை மருந்துண்டு தீர்த்துக் கொள்கின்றோம். அம்முறையில் உயிரைப் பற்றியுள்ள மலப் பிணிகளை வழிபாடு புரிவதன் வாயிலாகவே, நாம் தீர்த்துக் கொள்ளுதல் இயலும்.

உணவும் நீரும் காற்றும் நீராடலும் மருந்தருந்தலும் உடல் வாழ்விற்குப் பலவகை நலங்களை விளைவித்தலைப்போல, நமது உயிர் வாழ்விற்கு வழிபாடு மிகப் பெரிதும் இன்றியமையாததாகப் பெரு நலங்களைப் புரிகின்றது. அது பற்றியே, இற்றைக்குச் சற்றேறத் தாழ ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரே,

''வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே''

என்ற நூற்பாவில், ஆசிரியர் தொல்காப்பியர் இறை வழிபாடு பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

உலக மக்களாயினோர் ஒவ்வொருவர்க்கும் வழிபாடு மிக மிக இன்றியமையாததொன்று என்பார் ''வழிபடு'' என்றும்; அது மனிதரையோ பிறபிற பொருள்களையோ பற்றி நிகழாமல், ஒப்புயர்வற்ற தெய்வத்தைக் குறித்தே நிகழ்த்தப்படுதல் வேண்டும் என்பார் ''தெய்வம்'' என்றும்; வழிபடுவோரை வழிபடப் பெறும் தெய்வம் காத்தருள்தல் திண்ணம் என்பார் ''நிற்புறம் காப்ப'' என்றும்; வழிபாட்டின் பயனாக எல்லாவகையான எத்தகைய விழுமிய

செல்வங்களையும் எய்தப் பெறுதல் இயலும் என்பார் ''பழிதீர் செல்வமொடு'' என்றும்; ''மூவேழ் சுற்றம் முரண்உறு நரகிடை ஆழாமேஅருள் அரசே போற்றி'' என மணிமொழியார் பாடியதற்கு ஏற்ப, வழிபடுவோர் மட்டுமேயன்றி, அவர்தம் வழிவழியாக வரும் உற்றார் உறவினரும்கூட, வழிபாட்டின் பயனுகச் சிறப்புற்றுப் பொலிந்து இன்புற்று வாழ்வார்கள் என்பார் ''வழிவழிச் சிறந்து பொலிமின்'' என்றும், நுண்ணிதின் எண்ணியுணரும்படி ஆசிரியர் தொல்காப்பியர் அருளிச் செய்வாராயினர்.

**திருக்குறட் சொற்பொருள் நயம்:**

இங்ஙனமே ஆசிரியர் தொல்காப்பியரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி,

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது''

எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிச் செய்திருத்தலும், நாம் சிந்தித்து உணர்தற்கு உரியது. தொல்காப்பியர் 'தெய்வம்' என்றதனைத் 'தனக்குவமை இல்லாதான்' என்றும், வழிபாடு செய்தலைத் 'தாள்சேர்தல்' என்றும், திருவள்ளுவர் விரித்துரைத்து விளக்கியிருக்கும் நுட்பம் கருதியுணரற்பாலது. ''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கெல்லாம் மனக் கவலை மாற்றல் எளிது'' என உடன்பாட்டு முகத்தாற் கூறி அமையாமல்,

''ஐய நின்னது அல்லது இல்லை
மற்றெரர் பற்று; வஞ்சனேன்
பொய் கலந்தது அல்லது இல்லை
பொய்ம்மையேன் என்எம்பிரான்''

என்புழிப் போல, இறைவனின் ''தாள் சேர்ந் தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது'' என இரண்டு எதிர்மறை வாய்ப்பாட்டுச் சொற்களை இட்டுக் கூறித் திருவள்ளுவர் பெருந்தகை செவ்விதின் வற்புறுத்தியிருக்கும் திறமும், நாம் பலகாற் பலவகையில் நயந்தினிது ஆராய்ந்து நன்குணரற்பாலது.

அரசன் அல்லது தலைவன் போன்ற மனிதர்களை வழிபடும் வழக்கம் பண்டைக் காலத்திற் பலதிற மக்களிடையே இருந்ததாகலின், அது கூடாது என்பார் ''தனக்குவமை இல்லாதான்'' என்றும்; வழிபடும் தன் சிறுமையையும் வழிபடப் பெறுவோனது பெருமையையும் உள்ளவாறு உணர்ந்து புகலடைதலே வழிபாடு என்பார் ''தாள் சேர்தல்'' என்றும்; வழிபாட்டின் பயன் இஃதென்பார் ''மனக்கவலை மாற்றல்'' என்றும்; வழிபாடு ஒன்றினுல் அன்றி வேறு எதனுலும் கவலைகளைத் தீர்த்துக் கொள்ளல் இயலாது என்பார் ''அரிது'' என்றும் தெய்வப் புலவர் திறந்தெரிந்து இயம்பியருளினர். ஈண்டு அருமை, இன்மைமேல் நின்றது.

இம்மட்டோ! இத் திருக்குறளின்கண், வறிதே 'கவலை' என்னுமல் 'மனக்கவலை' என்றதனுல், மனமுடையார் எவராயினும் அவரவர்க்கும் கவலையுண்டு என்பதும், அதனை அவர்கள் எவ்வாற்றுனும் தாமே தீர்த்துக் கொள்ளுதல் ஒருபோதும் இயலாது என்பதும் குறிக்கப் பெற்றன. கல்வி செல்வம் புகழ் பதவி ஆற்றல் ஆணை முதலியன பலவும் பெற்றவரேயாயினும், அவர் அனைவரும் கடவுளை வழிபட்டேயாதல் வேண்டும் என்பதும், இதனுல் மிகமிக வலியுறுத்தப் பெற்றது. கண்காண்டற்கும், வாய் பேசுதற்கும், காது கேட்பதற்கும், பிற பிற செயல்களைச் செய்வதற்கும் படைக்கப்பட்டவாறுபோல, மனம் கடவுளை நினைந்து வழிபடுதற்கே அமைந்தது என்பதும், இவ்வாற்றுற் புலப்படுத்தப்பட்டது. மேலும், கடவுளை வழிபடாதவன் மனமுடைய மனிதன் அல்லன், உடலளவில் மனிதனுயினும் இயல்பினுல் விலங்கு நிலையிலேயே இழிந்து, தாழ்ந்து கிடப்பவன்(4) என்பதும், இங்குத் திருவள்ளுவரால் அறிவுறுத்தப்பட்டது.

இனி, வேறென்றும் நாம் இங்கு எண்ணியுணரத் தக்கதாக இருக்கின்றது. ''மனக்கவலை தீர்த்தல்'' என்று கூறுமல், ''மனக்கவலை மாற்றல்'' என்று குறிப்பிட்டதன் சிறப்பு யாது என்று நாம் உன்னித்து உணர்தல் வேண்டும். 'தீர்த்தல்' எனில், துன்ப நீக்கம் ஒன்றுமே குறிப்பிடப் பெற்றதாகும். 'மாற்றல்' என்றதனுல் துன்பநீக்கமும், அதன் மறுதலையாகிய இன்ப ஆக்கமும் ஆகிய இரண்டும் ஒருசேரக் குறிப்பிடப்பட்டன. இவ்வாற்றுல், கடவுளை வழிபடுவோர் அனைவரும் துன்பம் நீங்குவதோடு மட்டும் அன்றி, இன்பமும் ஓங்கப்பெறுவர் என்று வழிபாட்டின் பயனைத் தெளிவித்தருளினுர் ஆசிரியர் திருவள்ளுவர். இவ்வகையிலும் திருவள்ளுவப் பெருந்தகை, ஆசிரியர் தொல்காப்பியரின் அடியொற்றிச் சென்றிருத்தல், அறிந்து இன்புறற்பாலது.

''துன்பம் இன்றித் துயரின்றி என்றும்நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்;
என்பொன் ஈசன் இறைவன்என் றுள்குவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே''
— திருநாவுக்கரசர்

**முடிவுரை :**

செந்தமிழ் வானத்தில் திங்களும் ஞாயிறும் போல் இணையற்றுத் திகழ்பவர்கள் திருவள்ளுவரும் தொல்காப்பியரும் ஆவர்; திங்கள் ஞாயிற்றினிடமிருந்து ஒளி பெறுதல் போலத் திருவள்ளுவர் பல கருத்துக்களைத் தொல்காப்பியரிடமிருந்து தழீஇக் கொண்டுள்ளனர் என்பது இவ்வாற்றுற் செவ்விதிற் புலனுகும்.

---

(4) "For what are men better than
sheep or goats
That nourish a blind life
within the brain
If knowing God, they lift not
hands of prayer
Both for themselves and those
who call them—Friend".
—ALFRED TENNYSON

## அறிவிப்பு

கவிஞர் கண்ணதாசன் எழுதி வரும்

"இறைவனின் நீதிமன்றங்கள்"

தொடர் கட்டுரை

இந்த இதழில் இடம் பெற்றிட இயலாமைக்கு வருந்துகிறோம்.

அடுத்த இதழிலிருந்து கட்டுரை தொடர்ந்து வரும்

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


## அருள்திரு வைத்தியநாதசுவாமி திருக்கோயில் திருப்பணிக்குழு

மடவார்வளாகம் ஸ்ரீவில்லிபுத்தூர்,

**இராமநாதபுரம் மாவட்டம்.**

ஸ்ரீவில்லிபுத்தூர் நகரின்கண் அமைந்துள்ள இத் திருக்கோயில் காலத்தால் மிகப் பழமையானது. 24 திருவிளையாடல்கள் நிகழ்ந்த திருத்தலமிது. மாமுனிவர் அகத்தியர், துருவாசர், மாமன்னர் திருமலைநாயக்கர் போன்றோரும் வழிபட்டு அருள்பெற்ற புண்ணிய தலமாகும். மேலும் பல சிறப்புகட்கும் உறைவிடமாகத் திகழும் இவ்வாலயத்தின் இராச கோபுரம், விமானங்கள், திருமதில்கள், மேல்-கீழ் தளவரிசைகள் போன்றவை திருப்பணி செய்யப்பட்டு 1939 ஆம் ஆண்டிற்குப் பின்பு நடைபெறாத குடமுழுக்கு விழாவினையும் நடத்தி முடிப்பதென்ற பெருநோக்கில் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டும், திருப்பணி வேலைகள் வேகமாக நடந்தேறியும் வருகின்றன. திருப்பணி வேலைகளை முழுவதுமாகச் செய்து முடிப்பதற்கு 4 இலட்ச ரூபாய் தேவைப்படும் என்று கருதப்படுகின்றது.

தொடர்ந்து பல ஆண்டுகளாக வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இப்பகுதியை மட்டும் அடிப்படையாகக்கொண்டு எந்நாட்டவர்க்கும் இறைவனும் தென்னுடைய (சிவன்) வைத்தியநாதரின் திருப்பணியை மிகப் பெரியதொரு மதிப்பீட்டில் செய்து முடிப்பதைவிட தமிழகம் தழுவியதொரு வசூல் திட்டத்தினால் செய்து முடிப்பது சாலப் பொருத்தமுடையது என்பது அன்பர்களின் துணிபு. எனவே திருக்கோயில்கள், திருமடாலயங்கள், அறக்கட்டளைகள், வள்ளல் தன்மைகொண்ட அன்பர்கள் ஆகிய எல்லோரும் ஒருங்கிணைந்து தாராளமாக நன்கொடை வழங்கி அருள்திரு சிவகாமி அம்பாள் உடனுறை பேரருளாளர் வைத்திய நாதரின் திருவருளுக்கு இலக்காகிக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றது.

ஏ. எஸ். சங்கரநாராயணன் செட்டியார்,
தலைவர்.

திருமுருக. கிருபானந்தவாரியார்,
புரவலர்.

பி. எஸ். சுப்பராஜா,
துணைத்தலைவர்.

எம். இராமச்சந்திரன் பி.ஏ.,
செயல் அலுவலர்
செயலாளர்-பொருளாளர்.

# என்னிலும் இனியான் ஒருவன் உளன்

டி. என். சுகி சுப்பிரமணியன்

கடவுள் நம்பிக்கை யென்பது வேறு.

மத நம்பிக்கை யென்பது வேறு.

குல நம்பிக்கை யென்பது மகிழ்ச்சிக்கும் மாண்புக்கும் உரிய பெருமிதம்.

சாதி நம்பிக்கை யென்பது மாற்றுக் குறைவான அற்ப மானுடர்கள் அடைகின்ற இன்பம்.

கடவுள் நம்பிக்கை மனித குலம் முழுமைக்கும் நன்மை பயக்கும். மிகச் சிறந்த சால்பு உள்ளவர்கள் இத்தகைய நம்பிக்கையை வளர்ப்பார்கள். நன்மையை நாடுவார்கள்.

மத நம்பிக்கை உள்ளவர்கள், சாதிப் பிரிவினையும், சுயநலமும் பேணும் இயல்புடையவர்கள். தன்னலத்தை முதலாக வைத்து வழிபாடு செய்வார்கள்.

எல்லாம் அவன் செயல் என்று கடவுளோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்ள வேண்டும். இத்தொடர்பு எப்படி இருக்கும்?

திருநாவுக்கரசர் சொல்லுகிறார் :

''என்னி லாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்இனி யான்ஒரு வன்உளன்
என்னு ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே.

ஒவ்வொருவர் உள்ளத்திலும் தங்களைவிடத் தங்களுக்கு இனிமை செய்கிறவர் வேறு எவனும் (மானுடர்களில்) இல்லை யென்பது துணிபு. 'என்னை விட எனக்கு இனிமையானவன் இல்லை' யென்பது எல்லார் மனத்திலும் எழுகின்ற உண்மை. ஆனுல் சான்ருேர்கள் ''என்னையும் விட எனக்கு இனியன் ஒருவன் இருக்கின்ருன்'' என்று முடிவு சொல்லுவார்கள்.

நம்மை விட இனியன் வெளியே இருக்கிருனு? இல்லை நமக்கு உள்ளாக இருக்கிருனு?

என்னை விட இனியான் எனக்குள்ளேயும் வெளியேயும் உள்ளும் புறமுமாக இருக்கிருன். எனக்குள் வந்து வந்து போய்க் கொண்டிருக்கும் மூச்சு அல்லது ஆவி என்னிலும் இனியன்! அவன்தான் இன்னம்பர்ப் பெருமான் ; அவனே கடவுள்.

நமக்கு உள்ளாகவும் நமக்கு வெளியிலும் நின்று நம்மைக் காத்துக் கொண்டிருக்கும் அவனே ஈசன்!

அதாவது என்னிடம் எனக்குள்ள பிரியத்தைவிட, அத்தனை அன்போடு எனக்குள்ளும் புறமுமாக உயிர் மூச்சாக உலவுகிருனே! என்னே அந்த இனியான் செயல்! உயிர்ப்பாய் இருக்கிருன். உயிர் தருபவனுக இருக்கிருன். உள்ளும் புறமும் எனக்குக் காட்சி தரும் ஈசன் என்னிலும் இனியான்! இவன் ஒருவனே! இவ்வாறு நினைந்து வியக்கிருர் அப்பரடிகள்.

என்னைக் காக்க, தானே அன்பு கொண்டு முன்வந்து காக்கும் ஒருவன் உண்டு. அவன் எனக்கு இனியன்—இது அறிவின் தெளிவான நிலை. இது நன்றிக் கடன் உள்ள மனத்தில் உதிக்கும் நித்திய வித்து.

என்னிலும் இனியானுக்கு யான் என்ன செய்ய வேண்டும்?

இது அடுத்துப் பிறக்கும் கேள்வி.

எனக்குள் உயிர்ப்பாய் போந்து, புக்கு என்னுளே நிற்கும் அவனுக்கு நான் கடன் பட வேண்டும்.

அவனே முழு முதல்! நான் ஏதும் கேளாமல், தானுக வந்து எனக்கு உயிர்ப்பை அருளியவன். அவனுக்கு நான் கடன் (கடமை)ப்பட்டால்தான் என்னுள்ளம் இனிக்கும். இது ஆறறிவின் அற்புத அஞ்சலி.

என் கடன் பணி செய்து கிடப்பதே!

ஆண்டவனுக்குத் திருத்தொண்டு செய்தாக வேண்டும். நான் வேண்டுதல் செய்யாத காலத்தும் அருள்கொண்டு என்னைக் காக்கும் கடமையைச் செய்கிருன். அவனுக்கு நான் கடன் செய்வது மனிதப் பிறவியின் பயன்.

எங்களுக்குள் ஓர் ஒப்பந்தம். என்னை அவன் காத்துக் கரையேற்ற வேண்டும். நான் அவனுக்குப் பணி செய்ய வேண்டும்!

நங்க டம்பனைப்
பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத்
திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி
யேனையும் தாங்குதல்
என்க டன்பணி
செய்து கிடப்பதே!

கடவுளுக்கும் நமக்கும் ஏற்படும் ஒப்பந்தம் ஆயுள் பரியந்தம். நம்மைக் காக்க வேண்டும், நாம் பணி செய்து கிடக்க வேண்டும்.

இவ்வாறு நடந்து கொண்டால், ஆண்டவனுக்கும் நமக்கும் நெருங்கிய உறவு உண்டாகும். அவனை நினைப்பவர்களை உடனே அவன் உறவினனாக ஆக்கிக் கொள்ளுவான். உலகத்திலே பிறந்த மனிதப் பிறவிக்குச் சிறந்த பந்தத்துவம் அவன் உறவு.

சிந்தை யால்நினை
வார்களைச் சிக்கெனப்
பந்து வாக்கி
உயக்கொளுங் காண்மினே

இவ்வாறு ஆண்டவனோடு உறவு கொள்வது எளிதான காரியம் இல்லை. சந்தேகம் வந்து குறுக்கிடும். ''மயல்சேர் மனிதர்கள்'' ஆயிற்றே நாம். ஆசைகளை விட்டால்தான் அவன் நமக்குப் பந்துவாக வருவான். உலகத்து உறவினர்கள் ஆசைகளை வளர்ப்பதற்காக நம்மோடு நெருக்கம் கொள்ளுவார்கள்.

இறைவனே, நமது ஆசைகளைப் போக்கி வைக்கும் உறவினன். நமது ஆசைகள் போகப் போகநமக்கு அவனது அனுக்கிரகம் கிடைத்து, அவனால் உய்வு உண்டாகும்.

நமக்குள் ஆசையை அறுத்து நம்மைத் தூய்மையாக்கும் உறவையும் செய்து அப்பால் நமக்கு வேறு நன்மைகளையும் காட்டுவான்.

என்னென்ன நன்மைகள் !

''ஞானங் காட்டுவார் ;
நன்னெறி காட்டுவார் !
தானங் காட்டுவார் ;
தம்மையடைந் தார்கெலாம்,
தானம் காட்டி
தன்தாள் அடைந்தார்கட்கு
வானங் காட்டுவார்!''

நமது ஆசை விலகியதும், ஞான ஒளி உண்டாகும். அறிவுத் தெளிவுக்கும் ஆசைக்கும் சொந்தம் உண்டு. பிறவித் துன்பத்திற்குள் சிக்கிக் கொள்ளாமல் தடுத்தாட்கொண்டு பக்தி நெறியும் முக்தி நெறியும் போதிப்பார்.

ஆசை நிரம்பிய மனிதனை அதிசய மனிதராக மாற்றுவதுதான் கடவுள் நம்பிக்கை.

இறைவனை எண்ணுவதற்கும், வணங்குவதற்கும் பேரறிவு வேண்டுமா? வேண்டாம். அவன் திருவருள் இருந்தால்தான் நமக்கே அவன் நினைவு வரும். அவன் அருளாலே அவன் தாளை வணங்கி வழிபட முடியும்.

ஆண்டவனைப் பார்த்து இவன் என் அடியவன் என்று சங்கல்பம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாதவரை அவனை நாமும் நினைக்க மாட்டோம். கடவுள் பக்தி என்பது ஒரு வழிப் பாதையன்று. இது இருவர்பாலும் ஏற்பட்டாக வேண்டிய விதிமுறை.

என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானுமுன் ஏதும் அறிந்திலேன்,
என்னைத் தன்னடி யான்என்று அறிதலும்
தன்னை நானும் பிரான் என்று அறிந்தேனே!

ஈசனை இனிது காண நினைந்து, நினைந்து உருகக் கொடுத்து வைக்க வேண்டும். நாமாக நமது வாழ்க்கை நெறிக்கு அர்த்தம் கற்பித்துக் கொண்டு ஆண்டவனை நாடுவதே வாழ்க்கையின் குறிக்கோள். இவ்வாறு நாமாகத் தேடினால் கடவுள் நமக்கு உதவி செய்வார்.

கடவுள் நம்பிக்கையால் பணி செய்யும் மனம் விரிவடைகிறது. கடவுள் பயன் கருதாமல் உயிரினங்களுக்குஅருள் பாலிப்பதுபோன்று, மனிதனும் பயன் கருதாமல் பணி செய்ய வேண்டும். இதுதான் கடவுட் கொள்கையின் பயன். பக்தியின் இறுதிப் பயன்.

பணி செய்யும் போது பயன் கருதிச் செய்வது ஒரு வகை ; இலாபம் கருதுவது இயல்பு. காமியப் பணி மனித இனத்திற்கு மட்டுமல்லாமல் ஐந்தறிவுள்ள விலங்கினத்திற்கும் உரிய பணி. பயன் கருதாமல் செய்யும் பணி நிஷ்காமியப் பணி. ஆண்டவனுக்கும் அவனை நம்பும் அடியாருக்கும் உரிய பணி.

நிஷ்காமியத்தில் நம்பிக்கை வளர்வதற்குத் தெய்வ நம்பிக்கையும் வழிபாடும் முக்கியம். கடவுள் நிஷ்காமியப் பணி செய்கிறார். நல்லாருக்கும் பொல்லாருக்கும் நடுவே நிற்கும் நாயகம் கடவுள். கல்லாருக்கும் கற்றவருக்கும் நடுவாக நிற்பது கடவுள். எங்கும் எதிலும் நிலையாக இருக்கும் சக்திக்கு எதற்காகத் தனிப்பட்ட ஆலயங்கள் ஏற்பட்டுள்ளன என்று பலரும் ஐயப்படலாம்.

மனித மனம் அலை பாயும் தன்மையுடையது. அதனை ஒரு கணம் சும்மா வைத்திருப்பது கடினம். மனத்தினைச் சும்மா அடக்கி ஒருமுகமாகக் கடவுள் நினைவுக்குக் கொண்டு வர, ஒரு இடம் வேண்டும். இங்கு நிஷ்காமியமாகப் பணி செய்ய யாவரும் வந்து கூட வேண்டும். அதற்கென மந்திரங்கள்—நியதிகள்—பூசை—தூய்மையான நடவடிக்கைகள்—நினைவுகள் ஏற்படுத்திக் கொண்டாக வேண்டும். இதனால் மனம் இம்சையை அடையாமல் அகிம்சையைப் பயிற்றிக் கொள்கிறது.

காந்திஜி அகிம்சையில் அசையாத நம்பிக்கை கொண்டவர். ஆனால் அஞ்சாத நெஞ்சவர். கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் செய்கின்ற பணிகள் யாவும் பிறர் நலம் கருதி நிஷ்காமிய மார்க்கமாக விருக்கும். எனவே அஞ்சா நெஞ்சமே பக்தியின் அடிப்படை.

கோவிலுக்குப் போகாமல் நழுவுகின்றவர்கள் காமியப் பணியில் நம்பிக்கை உள்ளவர்கள். பலன் கருதிப் பணி செய்கிறவர்கள். இவர்கள் அகிம்சையில் நம்பிக்கையில்லாத கோழைகள்.

திருமூலர் ஈசனை நண்ணாமல் விலகிச் செல்லுகிறவர்களைப் பார்த்து என்ன சொல்லுகிறார் ?

புண்ணியஞ் செய்வோருக்குப்
பூவுண்டு; நீருண்டு;
அண்ணல் அதுகண்டு
அருள் புரியா நிற்கும்
எண் ணிலி பாவிகள்!
எம்மிறை ஈசனை
நண்ணறி யாமல்
நழுவுகின் றாரே!

எனவே, பயன் கருதாமல் நிஷ்காமியமாக ஆண்டவன் நமக்கு உதவுவதுபோல், நாமும் எல்லா உயிர்களிடத்தும் ஈசன் திருவுருவத்தை யும் திருவுள்ளத்தையும் கண்டு வழிபாடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால்!

நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப் படோம்
நடலை (பொய் வாழ்வு) இல்லோம்
ஏமாப் போம்
பிணி அறியோம்
யாருக்கும் பணிவோம் அல்லோம்!

என்றெல்லாம் சொல்லும் துணிவும், அதே சமயம் இறைவன்பால் அன்பும் எளியவர்பால் நட்பும் உண்டாகும்.

பாரதியார் ''காலா உன்னைக் காலால் உதைப்பேன்'' என்று கூறினார்.

உச்சிமீது வானிடிந்து வீழ்ந்த போதிலும்
அச்சமில்லை! அச்சமில்லை!

என்றார்.

கடவுளிடம் பக்தி உள்ளவர்கள் அஞ்சா நெஞ்சத்தவராக உறுதி பெற முடியும்.

ஆன்மாவை இழந்துவிட்டு உலகு முழுவ தையும் பெற்றாலும் அதனால் பயன் என்ன?

இவ்வாறு கேட்டார் இயேசுநாதர்.

அப்பரடிகளோ,

''சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போ மல்லோம்''
என்றார்.

அவரே, தாம் மதிக்கும் பொருளை எது வென்று கூறுகிறார்.

''அங்கமெலாம் குறைந்து அழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்று உழலும் புலையரேனும், அவர்
கங்கைவாழ் சடைக் கரந்தார்க்கு
அன்பராகில்
நாம் வணங்கும் கடவுள் ஆவார்!''

நிஷ்காமிய வழியிலே பணி செய்யப் பழ கிய கடவுள் பக்தர்கள், திருக்கோயில்களுக்குச் செல்லும் பழக்கமும் கடவுள் திருநாமத்தைப் பூசிக்கும் உள்ளமும் இருந்தால் போதும்.

இத்தனைக்கும் தேவை ஒரே எண்ணம், என்னிலும் இனியான் ஒருவன் உளன்.


## அருள்திரு மகுடேசுவரர் வீரநாராயணப்பெருமாள் திருக்கோயில்

### கொடுமுடி, கோவை மாவட்டம்

மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப் பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தே னினிப் பிறவாத தன்மை வந் தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா வுனைநான் மறக்கினுஞ் சொல்லும்நா நமச்சிவாயவே

—சுந்தரமூர்த்திநாயனார்.

அருள்திரு மகுடேசுவரர் திருக்கோயில், கொங்கு நாட்டில் உள்ள ஏழு தலங்களில் சிறந்ததும், காவிரி நதியின் மேல் கரையில் உள்ளதும், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்பும் வாய்ந்ததுமாயுள்ளது. பிரம்மா, விஷ்ணு, பரத்துவாசர், அகத்தியர், கன் மாடன், கருடன், பாண்டியன் முதலியவர்களால் இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள மகுடேசுவரர் பூசிக்கப்பட்டவர். சமயாசாரியர் அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவரால் பாடல் பெற்ற திருத்தலமாய் இது விளங்குகிறது. வன்னி மரம் இத்தலத்தின் சிறப்பு மிக்க மரமாகும்.

**கே. ஆர். பாலசுப்ரமணியம்,**
**கே. எம். சண்முகம்,**
**கே. எம். சுப்பன்,**
**வி. எம். குழந்தைவேலு,** பி.எஸ்.சி., பி.எல்.
அறங்காவலர்கள்.

**கே. பி. தன்னாசி,**
தலைவர், அறங்காவலர் குழு

**இரா. சம்பத்குமார்,** பி.ஏ.
செயல் அலுவலர்.

# பாண்டிமாதேவி

முதற்பரிசு பெற்ற பொற்கிழிக் கவிதை

மீனாட்சிமைந்தன்

(கதைச் சுருக்கம்)

கி.பி. ஏழாம் நூற்றுண்டில் சைவ சமணப் போராட்டம் தமிழகமெங்கும் தலைதூக்கி நின்றது. பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் சமணத்தில் நின்று சைவத்தைத் தாக்கினுன். அவனைத் திருத்திச் சைவத்தைக் காத்தார், திருநாவுக்கரசர்! அதே காலகட்டத்தில் மதுரையில் அரசோச்சிய நெடுமாறன் என்னும் பாண்டியன் சைவம் துறந்து சமணம் வளர்த்தான். சைவ சமயமும், ஆலவாய் அண்ணல் கோயிலும், பெரும் சோதனைக்கு ஆளாயின. சமணர்கள் ஆதிக்கம் வலுத்தது. பாண்டியனின் மனைவி மங்கையர்க்கரசியார், அமைச்சர் குலச்சிறையாரின் உதவியோடு சமணத்தைத் தடுத்துச் சைவத்தைக் காக்க முற்பட்டார். பாண்டிமா தேவி பிறந்தது சோணாட்டில்! வாழ்க்கைப்பட்டுச் சைவம் காத்தது பாண்டி நாட்டில்!! அழியாப் புகழ் பெற்றது சம்பந்தர் பாட்டில்!!!

நெடுமாறன் சைவத்தை வளைத்ததால் ''கூன் பாண்டியன்'' என்னும் பட்டம் பெற்ருன். கனகநந்தி என்னும் சமண குரு (சமண மதத் தலைவர்) பாண்டிய மன்னனின் துணையோடு சிவனடியார்களைச் சிறையில் அடைத்தான். படைத் தளபதி பார்த்திபன், ஒற்றர் தலைவர் உடையணன் ஆகியோரும் அவனுக்குக் கையாட்களாக இருந்தனர்.

அரசனின் மெய்க்காப்பாளனுக இருந்த புகழன் அரசியின் தொண்டன். சைவத்தைக் காக்கும் பொருட்டு அரசியார் அமைத்த சூலப் படையின் தளபதியாகப் பொறுப்பேற்று இரகசியமாகப் பணியாற்றிச் ''சமணர் அலை'' வீசுவதைத் தடுக்கிருன். அரசியின் அரண்மனை சூலப் படையின் பாசறையாக மாறுகிறது.

சைவம் தடை செய்யப்பட்டிருந்தும் அரசியார் தடையினை மீறி, நீறு பூசி, மக்கள் மத்தியில் பிரசாரத்தில் ஈடுபடுகிருர். அவளைக் கைது செய்ய அரசனின் ஒப்புதலைப் பெற்ற கனக நந்தி, படைத் தலைவன் பார்த்திபனை ஏவுகிருன். படைத் தலைவன் ஒரு நாள் மாலையில் சைவப் புகழ் பரப்பிய பாண்டிமா தேவியைக் கைது செய்து பல்லக்கில் அனுப்புகிருன். உடையணன் முன் செல்லப் பல்லக்கு ஊர்வலம் செல்கிறது. இருள் நேரம்; மழை பொழிகிறது. அப்பொழுது சூலப்படை வீரர்கள் நூறு பேர் குதிரையில் வந்து உடையணனைக் கொன்று, அரசியை விடுதலை செய்கின்றனர். அரசியார் அந்தப்புரம் செல்கிருர்.

மறுநாட் காலை கனக நந்தியின் சூழ்ச்சிப்படி மாபெரும் ''பிண ஊர்வலம்'' அரசவை நோக்கி வருகிறது. சமணர்கள் உடையணனின் கொலையால் கொதிப்படைந்துள்ளனர். அரசவை கூடி நிலைமையினை ஆராய்கிறது. புகழன் தான் கொலைகாரன் என்று குற்றம் சாட்டுகிருர், கனகநந்தி. குற்றச்சாட்டைப் புகழன் மறுக்கிருன். உடையணனின் கொலை ''மதப் போராட்டத்தின் விளைவு'' என்கிருன். புகழனைக் கொல்ல வேண்டும் என்கிருன் பார்த்திபன். பவணமாநந்தி என்னும் சமண குரு நீதி காக்கும்படி மன்னனைக் கேட்கிருர். ''சமணத்தை அடக்கா விட்டால் மதப் போர் மூளும்'' என்கிருர் அமைச்சர் குலச்சிறையார். சைவத்தைக் காக்கும்படி மன்னனை வேண்டுகிருர் பாண்டிமா தேவியார். செய்வது அறியாத மன்னன், புகழனைச் சிறையில் அடைக்க ஆணையிட்டு அரசவையை ஒத்தி வைக்கிருன்.

புகழனைச் சிறையில் கொலை செய்யவும், அமைச்சரையும், அரசியாரையும் தீர்த்துக் கட்டவும் சமணர்கள் சூழ்ச்சி செய்கின்றனர். அதை அறிந்த அரசியார் சிறையில் சூலப்படையினை நிரப்பி, சமணத் திட்டத்தை முறியடித்து, புகழனை விடுவித்துச் சமணக் கைதி ஒருவனைச் சிறையில் புகழனுக்குப் பதிலாக அடைக்கிருள். புகழன் அரசியாரைச் சந்திக்கிருன். அரசியார் அமைச்சர் ஆலோசனைப்படி, புகழன் திருஞான சம்பந்தரைப் பாண்டி நாட்டிற்கு அழைத்து வரும் பொருட்டு அரசியாரின் தூதனுகத் திருமறைக் காட்டிற்குச் செல்கிருன். சமணர்கள் அவனை இடைவழியில் எதிர்க்கின்றனர். அவர்களை வென்று, காயத்தோடு சோணுட்டின் எல்லையினைப் புகழன் அடைகிருன். அங்கு அவனை ஓர் ஒற்றன் என்று சோழப் படை கைது செய்கிறது. அவன் தன் அரசியாரின் சோழ முத்திரை மோதிரத்தைக் காட்டி விடுதலை பெறுகிருன்.

திருமறைக் காட்டில் அப்பரும், திருஞான சம்பந்தரும், சில நாட்களாகத் தங்கி இருக்கின்றனர். அப்பொழுது புகழன் ஞானசம்பந்தரைச் சந்தித்து அரசியாரின் ஓலையினைக் கொடுக்கின்ருன். சம்பந்தர் அவனை வாழ்த்துகிருர். மறுநாள் அவர் பாண்டி நாட்டுக்குப் புறப்படத் திட்டமிடுகிருர். ''கோள்நிலை சரியில்லை'' என்ற அப்பருக்கு அவர் ஆறுதல் கூறுகிருர். ''அடியாரைக் கோள்கள் ஒன்றும் செய்யா'' என்று பதிகம் பாடி, சம்பந்தர் பாண்டி நாடு நோக்கிச் செல்கிருர்.

மதுரையில் திருஞான சம்பந்தருக்கு மாபெரும் வரவேற்பு வழங்கப்படுகிறது. அவர் தங்கியிருந்த மடத்தில் அன்று இரவு சமணர்கள் தீ வைக்கின்றனர். அத் தீ ''பையவே சென்று பாண்டியற்கு ஆகவே'' என்று சம்பந்தர் ஆணையிடப் பாண்டிய மன்னன் வெப்பு

நோயால் துடிக்கிறான். சமணர்களால் அத்தீயைத் தணிக்க முடியவில்லை. அரசி கருத்துப்படி அரசன் சம்பந்தரை வரவழைக்கிறான். சமணர்கள் அரசனைத் தடுக்கின்றனர். வாதத்திற்குச் சம்பந்தரை அழைக்கின்றனர். ''நோயைத் தீர்ப்போரே வென்றோர்'' என்று மன்னன் அறிவிக்கிறான். சம்பந்தர் வெப்பு நோயைத் தீர்த்து மன்னனைச் சைவராக்குகிறார். பிறகு அனல் வாதம், புனல் வாதம் ஆகிய அனைத்திலும் சமணர்கள் தோற்கின்றனர்.

தோற்ற சமணர்கள் புரட்சி செய்கின்றனர். ஆனைமலையில் ஆயுதம் ஏந்திக் கரந்து வாழ்ந்த சமணர்களும் புரட்சியில் ஈடுபடுகின்றனர். பாண்டியப் படை சமணர்களை வெல்கிறது. குலச்சிறையார் பன்னிரண்டாயிரம் சமணர்களைக் கழுவில் ஏற்றுகிறார். மன்னன், தான் வளைத்த சைவத்தை மீண்டும் நிமிர்த்தியதால் ''நின்ற சீர் நெடுமாறன்'' என்று போற்றப்பெறுகிறான். அரசியின் தோழி அமுதா புகழனோடு இணைந்து பணியாற்றிச் சைவம் காத்து, புகழனின் துணைவியாகிறாள். திருஞான சம்பந்தர் அனைவரையும் வாழ்த்தி, ஆலவாய் அண்ணலை வணங்கிப் புறப்படுகிறார். பாண்டி நாட்டில் சைவம் தழைக்கிறது.

''மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக்கை மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தோறும் பரவப்
பொங்குஅழல் உருவன் பூத நாயகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே''

என்ற திருஞான சம்பந்தரின் பாடலே இக்குறுங் காவியத்திற்கு வித்தாகும்.

## கதை மாந்தர்கள்

(வரலாற்றுப் பாத்திரங்கள்)

| | | |
|---|---|---|
| 1. | கூன் பாண்டியன் (நின்ற சீர் நெடுமாறன்) ... | பாண்டிய மன்னன் |
| 2. | மங்கையர்க்கரசி ... | பாண்டிமா தேவி |
| 3. | குலச்சிறை ... | பாண்டிய அமைச்சர் |
| 4. | திருஞானசம்பந்தர் ... | நாயனார் |
| 5. | திருநாவுக்கரசர் ... | நாயனார் |
| 6. | கனக நந்தி ... | சமண குரு (சமணத் தலைவர்) |
| 7. | பவண நந்தி ... | சமண குரு (சமணத் துணைத் தலைவர்) |

## கற்பனைப் பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| 8. | பார்த்திபன் ... | படைத் தளபதி |
| 9. | உடையணன் ... | ஒற்றர் தலைவன் |
| 10. | புகழன்... ... | சூலப்படையின் தளபதி (அரசனின் மெய்க்காப்பாளன்) |
| 11. | அமுதா ... | புகழனின் காதலி, அரசியின் தோழி |

மற்றும்
ஆனைமலையில் ஆயுதம் தாங்கி மறைந்துள்ள சமணர்கள், சிவனடியார்கள், மக்கள் பலர்.

திருஞானசம்பந்தரின் கீழ்க்கண்ட பாடல் வரிகள் எண்ணத் தக்கன :

''கனக நந்தியும் புட்ப நந்தியும்
பவண நந்தியும் குமணமா
சுனக நந்தியும், குனக நந்தியும்
திவண நந்தியும் மொழிகொளா
அனக நந்தியர்''

''சந்து சேனனும் இந்து சேனனும்
தரும சேனனும் கருமை சேர்
கந்து சேனனும் கனக சேனனும்
முதல தாகிய பெயர் கொளா''

நந்தி—சமண குருமார்களைக் குறிக்கும் சொல்.
சேனன்—சமணர்களைக் குறிக்கும் சொல்.

''மானின் நேர்விழி மாதராய் வழுதிக்கு
மாபெரும் தேவி கேள்

பால்நல் வாயொரு பாலன் ஈங்கிவன்
என்று நீ பரி வெய்திடேல்
ஆனை மாமலை ஆதி யாய
இடங்களில் பல அல்லல்சேர்
ஈனர் கட்கு எளியேன் அலேன்
திரு ஆலவாய் அரன் நிற்கவே''

''பொய்யராம் அமணர் கொளுவும் சுடர்
பையவே சென்று பாண்டியற்கு ஆகவே''

## பாண்டி மாதேவி

''மீனாட்சி மைந்தன்''

குறுங்காவியம்

## 1. சைவக் காண்டம்

காப்புச் செய்யுட் காதை

### விநாயகர் வணக்கம்

தாரணியும் தேவே தமிழணியும் வேழமுகத்
தூரணியின் முன்வாழ் துதிக்கையாய்—ஓரணியாய்ப்
பச்சைக் கவியும் படைத்தேன் விநாயகனே
இச்சையுடன் காப்பாய் எனை.

### முருகன் வணக்கம்

எனையும் ஒருபொருட்டாய் எண்ணி இதயத்
துணையாய் வருகின்ற தூயோய்—கணையால்
கொடிய அசுரர் குலம்தீர்த்த செந்தூர்ப்
பொடிமணலாய்ப் பாட்டில் புரள்.

### சிவன் வணக்கம்

புரளும் அரவேந்திப் பூசும் பொடியால்
தரள நிறம்காட்டும் தந்தாய்—குறளும்
பிறந்தஉன் சங்கப் பெருந்தவிசில் நானும்
சிறந்திடவே தந்திடுவாய் சீர்.

### அன்னை மீனாட்சி வணக்கம்

சீராட்டி என்னைச் செழுந்தமிழால் நாடோறும்
நீராட்டிக் காத்து நினைவானாய்—பாராட்டிப்
பாடும் தமிழறியேன், பாண்டியர்கள் தாயேஎன்
ஏடும் மணக்க இரு.

### திருமால் வணக்கம்

இருந்தாலும் ஓடி எழுந்தாலும் நெஞ்சில்
விருந்தாகி என்றும் விளங்கும்—திருந்துழாய்
மாலை புரளும் மணிமார்பா என்கவிதை
நூலையுமே சற்று நுகர்.

### தமிழ்த் தாய் வணக்கம்

நுகரும் பொருளிங்கே நூறு யிரத்தில்
அகரம் கொடுத்தென்னை ஆண்டாய்—பகரும்
கவியில் உயிராகிக் காக்கும் தமிழே
குவிகின்ற என்கவியும் கொள்.

கொள்ளும் கவிதைசீர்க் காவியங்கள் கோடியிலும்
தள்ளும் வரிசையிலே தந்திட்டேன்—உள்ளம்
பரந்த தமிழுலகம் பாண்டிமா தேவி
பிறந்ததனுல் பேணுகவே பெண்.

## 2. பாண்டி மண்டலக் காதை

### பாண்டிநாடு

பதினுலு தலங்களினுல் அருளைக் காத்த
பாண்டியன் பக்தியது பூண்ட மண்ணே
அதிகாரம் இருந்தாலும் நீதி காக்க
ஆருயிரைத் துறந்தவர்கள் ஆண்ட நாடு
முதியோரைத் தெய்வமெனப் போற்றும் நாடு
முத்தமிழே மூச்சாகச் சாற்றும் நாடு
நதியான மணிவையை பொருநை பாய்ந்து
நலம்காக்கும் தமிழ்ப்பாண்டி நாடே நாடு.

(வேறு)

தேய்வதுவோ பாதை ஒன்றே
தேங்குவதோ செல்வம் ஒன்றே
சாய்வதுவோ மூடத் தன்மை
சாம்புவதோ மலரின் கூட்டம்
ஓய்வதுவோ கொலைஞர் கைகள்
உடைவதுவோ வைகை மேடே
பாய்வதுவோ தமிழின் வெள்ளம்
பணிவதுவோ செல்வர் உள்ளம்.

### மதுரை நகர்

ஆலவாய் அண்ண லோடே
அன்னைமீ னுட்சி வாழும்
கோலமா மதுரை என்னும்
கூடலைப் பாடல் என்ன
ஏலமா? கம்பன் கொண்ட
இதயமா? சொர்க்கம் கேட்கும்
பாலமா? தமிழர் நெஞ்சிற்
பதியுமா? அஞ்சிச் சொல்வேன்.

வானுயர் கோபு ரங்கள்
வளமுயர் மாளி கைகள்
தேனுயர் பூங்கா சோலை
தெளிவுயர் பாட சாலை
மீனுயர் பொய்கை ஆறு
மிகஉயர் மடங்கள் சோறு
தானுயர் மக்கள் கூட்டம்
தமிழுயர் சங்கக் கோட்டம்

மண்ணிலே காலை வைத்தால்
மதுரையில் தமிழே பூக்கும்
பண்ணிலே மனத்தை வைத்தால்
பரமனும் அருகே தேக்கும்
எண்ணிலே புரளு வோரும்
எழுத்திலே வளரு வோரும்
கண்ணிலே வைத்துக் காக்கும்
கடவுளே வாழும் கூடல்.

(வேறு)

நதிஓடும் மதுரை என்னும்
நகரோடும் வீதி எல்லாம்

மதிஓடும்; வேற்று நாட்டார்
மனமோடும்; கோயில் முன்னே
துதிஓடும்; பக்த ராலே
தொண்டோடும்; மதத்தின் பேரால்
சதிஓடும்; வீட்டி லெல்லாம்
சடங்கோடும்; மதுரை காணீர்!

திருப்பரங்குன்றம்

ஆறிரு தடந்தோ ளானை
ஆவினன் குடியிற் பாடின்
நாரியர் இருவ ரோடு
நற்றிருப் பரங்குன் றத்தில்
ஏறிய மயிலின் மீதே
எழிலுடன் காட்சி நல்கும்
கூரிய வேல்கைக் கொண்ட
குமரனின் ஆட்சிக் குன்றம்.

கீரனின் பாடல் கேட்கும்
கிளிகளின் வேதம் கேட்கும்
மாறனின் தமிழை மாந்தி
மஞ்ஞையும் ஆடல் செய்யும்
வீரனின் வேலும் கூட
விளைப்பது தமிழே அன்றோ ?
கூறநான் என்ன உண்டு?
குமரனின் குன்றம் அன்றோ !

## 3. மங்கையர்க்கரசியார் அங்கயற்கண்ணியைத் தொழுத காதை

வையத்தைப் புரக்கவென வந்த நங்கை
வளவன்தன் புதல்விஅவள் வளைக்கை மங்கை
ஐயத்திற் கிடமின்றிச் சைவம் பூத்த
அரும்பூமி விளைத்திட்ட அன்ன மாவாள்
மையத்தில் மதுரையினைக் கொண்ட பாண்டி
மண்டலத்தின் தேவியெனப் பின்ன ரானாள்
பையத்தான் அழிந்தசிவ பக்தி காத்துப்
பண்பாட்டைக் காத்துச் சிவச்சின்ன மானாள்.

ஆறோடும் பூமியிலே பிறந்த செல்வி
அறிவோடும் இறைவன்பதம் தொழுத கல்வி
நூறோடும் பெற்றதனால் பாண்டி நாட்டில்
நுதலோடும் விழியுடையான் பாதம் தோய்ந்தாள்
சோறோடும் சோணாட்டில் தோன்றி நல்ல
சுகத்தோடும் வாழ்ந்தவள்கூன் பாண்டி யற்கு
நாரோடும் பூப்போல மனைவி யானாள்
நகையோடும் முகத்தோடு சேவை செய்தாள்.

கற்புடைய மங்கையர்க்கே அரசி ஆனாள்
கணவன்தன் பாதமதே பதமாய்க் கொண்டாள்
பொற்புடைய மீனாட்சி ஆல வாயான்
புகழ்நாமம் தனையன்றி வேறொன் றெண்ணாள்
தற்பெருமை சிறிதில்லாத் தகைமை யாலே
தனக்குவமை இல்லாதான் தாள்ப ணிந்தாள்
இற்பெருமை காத்துதமிழ் சைவம் காத்த
எழில்மங்கை யர்க்கரசி பெருமை என்னே?

தானாட்சி செய்கின்ற மதுரை மன்னன்
    தமிழாட்சி செய்கின்ற தலைவி ஆகி
மீனாட்சி கோயிலையே வலமாய் வந்தாள்;
    மேலாட்சிக் கணவன்நெஞ் சிடமாய்க் கொண்டாள்
கோனாட்சி செய்தாலும் சைவ மென்னும்
    கொடியாட்சி செய்ததமிழ் மங்கை மாண்பை
நானாட்சி செய்கின்ற கோலா சொல்லும்?
    நதிஆட்சி செய்கின்ற சேலே சொல்லும்!

காலையிளஞ் சூரியனின் முன்னே சின்னக்
    கயல்விழிகள் திறந்திடுவாள், மதுரைக் கோயிற்
சாலையிலே நடந்திடுவாள், பாண்டி நாட்டுச்
    சரித்திரத்தில் இவள்போலோர் அரசி இல்லை;
சோலையிலே பூஎடுத்துச் சிவலிங் கத்தைச்
    சொல்லாலே அர்ச்சித்து, விடியு முன்னே
வேலையிலே மூழ்கிடுவாள், காலை மாலை
    விலகாமல் சிவலிங்கப் பூசை செய்தாள்.

### அரசியார் பாடிய இறைவணக்கம்

நாவசைந்த காலத்தில் தமிழைத் தந்து
    நடையசைந்த காலத்தில் வீரம் தந்து
பாவசைந்த காலத்தில் பக்தி தந்து
    படையசைந்த காலத்தில் வெற்றி தந்து
காவசைந்த காலத்தில் கானம் தந்து
    கண்ணசைந்த காலத்தில் கருணை தந்து
கோவசைந்த காலத்தில் காட்சி தந்து
    குடியசைந்த காலத்தில் காக்கும் தேவே!

காரைக்கால் அம்மைக்குக் காட்சி தந்தாய்
    கண்ணகிக்கும் அன்றைக்கு மீட்சி தந்தாய்
தேரைக்கும் கல்லுக்குள் உணவு தந்தாய்
    திருநாவுக் கரசர்க்குத் தெளிவு தந்தாய்
கோரைக்கும் மறையோர்கை வாழ்வு தந்தாய்
    கொடியோர்க்கும் அருஞ்சாம கானம் தந்தாய்
பாறைக்கும் வாழ்வுதர முருகன் தந்தாய்
    பாண்டியர்கள் தமிழ்நெஞ்சிற் பக்தி தந்தாய்.

அன்னையுடன் வீற்றிருக்கும் அப்பா உன்றன்
    அடியிணைகள் போற்றுகின்றேன், தமிழர் நாட்டில்
திண்ணையெலாம் சைவநெறி வளர வேண்டும்
    தெருவெல்லாம் தமிழ்ஒலியே பரவ வேண்டும்
பண்ணையிலே பயிராகும் செந்நெல் கூடப்
    பரமேசா! நின்புகழே பாட வேண்டும்;
வெண்ணையிலே நெய்யாக விளங்கும் ஈசா
    வெறுந்திரிநான் சொக்கேசா பாதம் போற்றி!

தொடரும்

# அருள்திரு சுப்பிரமணியசுவாமி கோயில்

## பூக்காரத் தெரு, தஞ்சாவூர்

ஸ்ரீவள்ளி, தெய்வயானையுடன் கூடிய ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, தஞ்சாவூர் டவுன் தென்பால் பூக்காரத் தெருவில் தென் காவிரி நதிக்கு முன்பு விளார் நெடும் சாலையில் எழுந்தருளியுள்ளார். 62 ஆண்டுகளுக்கு முன் திருச்செந்தூரிலிருந்து கொண்டு வரப்பட்ட பாலசுப்பிரமணியம், ராவ் பகதூர், அட்வகேட் ஸ்ரீனிவாசம் பிள்ளை அவர்களால் இடம் வாங்கிக் கொடுக்கப்பட்டு, முருகன் அடியார்களால் மேற்படி இடத்தில் ஸ்தாபிதம் செய்யப்பட்டது. 5—9—1911-ல் ஒரு முறையும், 5—4—1961-ல் ஒரு முறையும் கும்பாபிஷேகம் நடைபெற்று உள்ளது. இந்தக் கோயிலுக்கு நஞ்சை ஏக்கர் 5-ம், மூன்று தோட்டங்களும் சொந்தமானது. கோவிலுக்கு வடபால் உள்ள சந்தை, காய்கறி மார்க்கெட்டும் சொந்தமானது. ஆண்டு ஒன்றுக்கு மொத்த வருமானம் ரூ. 20,000 வரை வருகிறது. தென்பால் உள்ள காமாட்சி அம்மன் மேடை மாரி குளம், சுடுகாடு முதலியவை கோவிலுக்குச் சொந்தமானவை. ஸ்தல விருட்சம் வன்னி மரம். வருஷா வருஷம் கந்தர் சஷ்டி விழா மிகச் சிறப்பாக உபயதாரர்களால் நடத்தப்பட்டு வருகிறது. மாதாந்திர கார்த்திகை, சஷ்டி முதலியவைகள் உபயதாரர்களால் நடத்தப்பட்டு வருகிறது. கல்யாண மண்டபம் ஒன்று 86-க்கு 30 சதுர அடியில் கட்டுவதற்குக் கல்நாட்டு விழா நடந்தேறி இருக்கிறது. விழாக் காலங்களில் பக்தர்கள் ஆதரவும், கூட்டமும் நாளுக்கு நாள் மிகுந்து கொண்டு இருக்கிறது. வருஷம் தோறும் குத்து விளக்குப் பூசை (ஒளி வணக்கம்) தை மாதம் முதல் வெள்ளிக் கிழமையும், கடைசி வெள்ளிக் கிழமையும் பக்தர்களால் சிறப்புறச் செய்யப்பெற்று வருகிறது.

**பி. கோவிந்தராஜ் மன்னையார்,**
**எம். ராமு மண்கொண்டார்,**
**எஸ். ராமச்சந்திர அதியமார்,**
**எஸ். பாலசுப்பிரமணிய கிருடையார்,**
அறங்காவலர்கள்.

**ப. பிச்சையா,**
நிர்வாக அறங்காவலர்.

# திருப்புல்லாணி

## கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S.,

**முன்னுரை :**

திருப்புல்லாணி என்னும் சிறந்த வைணவத் திவ்விய தேசம், இராமநாதபுரம் மாவட்டத்தில், இராமநாதபுரத்துக்குத் தென்கிழக்கில் 9 கி.மீ. தொலைவில் நன்கினிது அழகுற அமைந்து உள்ளது. இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள அருள்திரு ஆதிசகந்நாதப் பெருமாள், பத்மாசனித்தாயார், தருப்பசயன ராமன், சேதுக்கரை ஆஞ்சநேயர் முதலிய தெய்வத் திருவுருவங்களை, பக்தர்கள் மிகவும் அன்புடன் போற்றி வழிபட்டு, வேண்டும் வரங்களும் நலங்களும் பெற்று வருகின்றனர். இத்தலத்திற்குப் புல்லாரண்யம், புல்லங்காடு, தர்ப்பசயனம், ஆதிசேது, திருவணை முதலிய பெயர்கள் வழங்கி வருகின்றன.

**அகநானூறு :**

இராமபிரான் இலங்கைமேற் செல்லுதற் பொருட்டுத் தமக்குத் துணைவராயினரொடு கூடி, ஒரு பெரிய ஆலமரத்தின் கீழ் அமர்ந்து, மேற்செய்வதற்குரிய செயல்களைக் கருதி ஆராய்ந்து கொண்டிருந்தார் ; அதுபோது அம்மரத்தில் இருந்த பறவைகள் இரைந்து கூச்சலிட்டன ; அவற்றை இராமபிரான் தன் தெய்விக ஆணையால் அமைதியாக இருக்கச் செய்தார். இதனை,

''வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்று, இவ் அழுங்கல் ஊரே''

எனவரும் அகநானூற்றுப் பாடல் (57) வரிகள் புலப்படுத்துகின்றன. இவ்வரலாறு நிகழ்ந்த இடம், இந்தத் திருப்புல்லாணியே என அறிஞர்கள் கூறுவர்.

இராமபிரான் இலங்கைத் தீவுக்குச் செல்ல அணை கட்ட நினைத்து இங்கு வந்தபொழுது தருப்பைப் புல்லைப் பரப்பி, அதனையே படுக்கையாகக் கொண்டருளினர். ஆதலின் இத்தலத்திற்குத் திருப்புல்லணை எனப் பெயரமைந்து, அதுவே பின்னர்த் திருப்புல்லாணி எனத்திரிந்து இதுபோது வழங்கி வருகிறது.

**சேதுபதிகள் :**

இராமபிரான் இலங்கைத் தீவுக்குச் செல்லச் சேது என்னும் அணை கட்ட முயன்றபோது, இவ்வட்டாரத்திலிருந்த வீரர்கள் பலரும், அவருக்குப் பலவகைகளில் ஒத்துழைத்து உதவி புரிந்தனர். அதனால் பெரிதும் மகிழ்ந்த இராமபிரான், இந்நாட்டுக்குச் சேது நாடு எனப் பெயரிட்டார், தமக்கு உதவி புரிந்த வீரர் தலைவனைச் சேதுபதி எனப் போற்றிச் சிறப்பித்தார். இந்நாட்டுப் பகுதியை அவ்வீரர் தலைவனும் அவனது வழியில் வருவோரும் அரசாண்டு காத்து வரும்படி ஒப்படைத்து அருள் புரிந்தார். அதனால் இத்தலம் சேதுபதி அரசர்களின் ஆட்சியின் கீழ் நெடுங்காலமாக நன்கினிது பரிபாலிக்கப் பெற்று வருகிறது.

**பழமையும் பெருமையும் :**

பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாகக் கருதப்படும் கைந்நிலை என்னும் நூலை இயற்றிய சங்ககாலப் புலவர் ஆகிய புல்லங்காடர் என்பவரும், தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவரான தெய்வச்சிலையார் என்பவரும், இத்தலத்தைச் சார்ந்தவர்களாகக் கருதப் பெறுகின்றனர்.

இராமபிரான் இங்குள்ள ஆதி சகந்நாதப் பெருமாளை வழிபட்டு அவரால் அளிக்கப்பெற்ற கோதண்டம் என்னும் வில்லைக் கொண்டே, இராவணனை வென்று சீதைப்பிராட்டியை மீட்டருளினர் என்பது தலவரலாறு. இராவணனது தம்பியாகிய விபீடணனும், கடலரசன் ஆகிய வருண தேவனும், இத்தலத்திலேயே இராமபிரானிடம் அடைக்கலம் புகுந்து சரணுகதி செய்தனர் என்று பெரியோர்கள் கூறுவர். புல்லவர், கண்ணுவர் முதலிய முனிவரர்களும் இத்தலத்தில் உள்ள பெருமாளை வழிபட்டுப் பற்பல நலங்களை உற்றனர்.

இத்தலத்தைத் திருமங்கையாழ்வார் தம்முடைய பெரிய திருமொழியில் இருபது பாடல்களால் அகப்பொருள் துறைக் கருத்துக்கள் அமைய அழகுறப் பாடியிருக்கின்றார். தமிழிலும் வடமொழியிலும் இத்தலத்தைப் பற்றிய குறிப்புக்கள் மிகுதியாக உள்ளன.

**கோயில் அமைப்பு :**

திருப்புல்லாணிக் கோயில், ஐந்து பிராகாரங்களைக் கொண்டு விளங்குகின்றது. ஐந்தாம் பிராகாரம் வெளிமாட வீதியாக அமைந்துள்ளது. இதன்கண் பல சத்திரங்களும், மண்டபங்களும், தேர்நிலையும், விநாயகர், முருகர் சந்நிதிகளும் உள்ளன. இங்கு உள்ள மதகுகுட்டத் தீர்த்தம் என்னும் குளத்திலிருந்துதான், பெருமாளுக்குத் திருமஞ்சன தீர்த்தம் எடுக்கப் பெறுகின்றது. நான்காம் பிராகாரம் உள்மாட வீதி

யாகத் திகழ்கின்றது. இங்கு இராசகோபுரமும், இராசகோபுர வாசலும், திருவந்திக் காப்பு மண்டபமும், தேசிகர் சந்நிதியும், பிறவும் உள்ளன. மற்றும் சதுர்ப்புஜராமர், வரதராசப் பெருமாள் திருவுருவங்களும் இங்கு நிறுவப் பெற்றுள்ளன. மூன்றும் பிராகாரத்தில் கொடிக் கம்பமும், பலி பீடமும், கோயில் அலுவலகமும், வாகன மண்டபம், உலா மண்டபம், யாகசாலே, பட்டாபி ராமர் சந்நிதி முதலியனவும் உள்ளன. இரண்டாம் திருச்சுற்றில் ஆழ்வார் சந்நிதி களும், அருள்திரு பத்மாசனித் தாயார் சந்நிதி யும் அழகுற அமைந்துள்ளன. இத்தலத்தின் புனித மரமாகிய அரச மரம் சிறப்பாக அமைந் துள்ளது. இதனைப் பக்தர்கள் அசுவத்த நாரா யணர் வடிவமாகத் தியானம் செய்து வழிபடு கின்றனர். கோதை நாச்சியார் சந்நிதியும் இப்பிராகாரத்திலேயே அமைந்துள்ளது. முதற் பிராகாரத்தில்தான் ஆதி சகந்நாதர் (தெய்வச் சிலேயார்) சந்நிதி அழகுற அமைந்துள்ளது. இங்கு அவர் திருமகள் நிலமகள் நீளாதேவி ஆகியோருடன், வீற்றிருந்த திருக்கோலத்தில் எழுந்தருளி விளங்குகின்ருர். மற்றும் இங்குக் கலியாண ஜகந்நாதர் ''அன்னமாய் நூல் பயந் தார்'' என்னும் பெயருடன் காட்சி தருகின்ருர். பூரி ஜகந்நாதத்தில் அருவ நிலேயில் எழுந்தருளி யிருக்கும் பெருமாள், இங்கு உருவ நிலேயில் சங்கு சக்கரங்களுடனும் நான்கு தடக் கைகளு டனும் எழுந்தருளி விளங்குகின்ருர். மற்றும் இச்சந்நிதியில் விளங்கும் தொட்டிற் கண்ணன் (சந்தான கிருஷ்ணன்), பக்தர்களால் பெரிதும் போற்றி வழிபடப் பெறுகின்ருர்.

**சிற்பச் சிறப்பு :**

திருப்புல்லாணிக் கோயிலின் அமைப்பே, அதன் பழமை பெருமைகளைச் செவ்விதின் விளக் குவதாகத் திகழ்கின்றது. இஃது ஒரு சிறந்த கற்கோயில். பண்டைக் காலத்துச் சிற்பக் கலேயின் நுணுக்கங்களேக் கோவிலுக்குள் எங்கும் காணலாம். பெருமாள் சந்நிதிக்கும் தாயார் சந்நிதிக்கும் எதிரில் வெளிப் பக்கத்தில் உள்ள மண்டபத்தில் சேதுபதி அரசர்களின் வண்ண வடிவங்களும், பிறவும், கண்கவர் வனப்புடை யனவாகத் திகழ்கின்றன. தருப்பசயன ராம ரின் திருவுருவ அமைப்பும், அவர்தம் உந்திக் கமலத் தண்டின் அமைப்பும், காண்போர் கண் ணேயும் கருத்தையும் கவர்வனவாகும். சேதுக் கரைப் பாதையில் இக்கோயிலினைச் சேர்ந்த துணைக் கோயிலின் மகா மண்டபத்தில் கடலி லிருந்து கண்டெடுத்து வைக்கப் பெற்றதும், சலவைக் கல்லால் அமைந்ததுமாகிய சுவேத சேது மாதவர் சிலே, கலே நலமும் கம்பீரமும் அமைந்து திகழ்கின்றது.

**முடிவுரை :**

பழமை பெருமைகள் வாய்ந்தும், திரு மங்கையாழ்வார் மங்களாசாசனம் பெற்றும், தெய்விகச் சிறப்பு மிக்குத் திகழும் திருப் புல்லாணி என்னும் சிறந்த இந்தத் திவ்விய தேசத்தினை, அன்பர்கள் அனைவரும் சென்று தரிசித்து வழிபட்டு, இம்மை மறுமை நலங்கள் பலவும் எய்தி மகிழ்வார்களாக!

158598


# அருள்திரு
# மாயூரநாதசுவாமி திருக்கோயில்

**பெத்தநல்லூர், இராஜபாளையம்.**

இத்திருக்கோயிலில் உள்ள சுவாமி அம்மன் மூலஸ்தான விமானங்கள் (கோபுரம்) கட்டிப் பல வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இத்திருக்கோயிலின் முகப்பு சிறு தகரக் கொட்டகையாக இருந்ததை நீக்கி, எழில்மிக்க ஸ்திரமான முன் மண்டபம் கட்டப்பட்டு வருகிறது. மேற்சொன்ன கோபுரங்கள் முன்மண்டபம் திருப்பணி வேலேகள் நல்ல முறை யில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேற்படி திருப்பணி வேலேக்குப் பக்தர்கள் அனே வரும் தங்கள் மனமகிழ்வுடன் பொருளுதவி செய்து அம்பாள் அஞ்சல்நாயகியின் அருளேப் பெறுமாறு அன்புடன் வேண்டப்படுகிறது.

**இராமையாத் தேவர்,**
அறங்காவலர் குழுத் தலேவர்.

**டி. பாஸ்கர சேதுராஜ்,** பி.காம்.
செயல் அலுவலர்.

**எம். இராமசுவாமி மூப்பனர், ஏ. இராக்கப் பிள்ளே;**
அறங்காவலர்கள்.


N74.17-3

# சமண சமயம்

சிவபந்து டி. எஸ். ஸ்ரீபால்

சமண சமயம் (ஜைனம்) மிக மிகத் தொன்மை வாய்ந்தது; வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்டது. பகவான் விருஷப தேவர் என்ற அறவோரால் தோற்றுவிக்கப் பெற்றது. அகிம்சா தர்மத்தின் அடிப்படையில் இல்லறம் என்ற அறத்தை ''அநுவிரதம்'' என்றும், துறவறநெறியை ''மகாவிரதம்'' என்றும் கூறியருளினர்.

இல்லறம் : கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறன்மனை நயவாமை, மிகுபொருள் விரும்பாமை, ஊன் உண்ணாமை, கள்ளுண்ணாமை, குரவரை இகழாமை, இரவுண்ணாமை, அன்புடைமை, அடக்கமுடைமை, விருந்தோம்பல் போன்ற சிறந்த நெறிகளைக் கொண்டது.

துறவறம் : மனைவி மக்களைத் துறந்து மேலே கூறிய அறநெறிகளோடு இன்னர் இனியார் என்று பாராமல், பற்றற்ற நிலையில் ஐம்பொறிகளையும் அடக்கித் தவம் புரிந்து வினைகளை வென்று பிறவா நிலை அடைய முயற்சித்தல்.

தத்துவக் கலை : சமண சமயத் தத்துவத்தில் ஒன்பது பொருள்கள் கூறப்படுகின்றன. இவற்றை நவபதார்த்தம் என்பர். இவை உயிர்—உயிரல்லது—புண்ணியம்—பாவம் — ஊற்று — செறிப்பு — உதிர்ப்பு — கட்டு — வீடு என்பனவாம். இவற்றை முறையே சீவன் அசீவன், புண்ணியம், பாவம், ஆஸ்ரவம், ஸம்வரா, நிர்ஜரா, பந்தம், மோட்சம் என்று கூறலாம்.

உயிர் (சீவன்) : உயிர்கள் எண்ணிறந்தன. அழிவில்லாதன; அநாதியாக உள்ளன. அதாவது உயிர்களைக் கடவுள் படைக்கவில்லை. நல்வினை தீவினை என்னும் இருவினைகள் (புண்ணிய பாவங்கள்) செய்து, அவற்றின் பயனாகிய இன்ப துன்பங்களைத் தீர்ப்பதற்கு நரககதி, விலங்குகதி, மக்கள் கதி, தேவகதி என்னும் நான்கு கதிகளில் பிறந்து இறந்து உழன்று திரிவதும், இருவினைகளையறுத்துப் பிறவா நிலையாகிய பேரின்ப வீட்டினையடைவதும், உயிர்களின் இயல்பாகும். உயிர்கள் ஓரறிவுயிர் ஈரறிவுயிர் மூவறிவுயிர் நாலறிவுயிர் ஐந்தறிவுயிர் என்று ஐந்து வகைப்படும். ஐயறிவுயிர்கள் பகுத்தறிவு (மனம்) உடையவை, பகுத்தறிவில்லாதவை என இரு வகைப்படும். உடம்பின் பெருமை சிறுமைக்கேற்ப உயிரானது பெரியதாகவும், சிறியதாகவும் உடல் முழுவதும் பரந்து நிற்கும். இவ்வாறு அநேகாந்தம் என்னும் ஸ்யாத்வாத தத்துவம் முதலியவைகளையும், அறிவியல் முறையில் பகவான் விருஷப தேவர் அருளிச் செய்தார்.

இவ்விரு பேரறங்களையும் தத்துவங்களையும் தம் பெயராலோ, சமயம் மதம் என்ற பெயராலோ அழைக்காமல், 'அறம்', 'அறம்' என்றே அழைத்துப் போதித்தார்.

பகவான் விருஷப தேவர் இவ்வற நெறிகளோடு மக்கள் சமுதாயம், அமைதியோடு பசி பிணி பகையின்றி வாழ வேண்டிக் கல்வி வாணிபம் உழவு சிற்பம் வாள் வரைவு ஆகிய ஆறு தொழில்களையும் கற்பித்தார். மக்கள் பலரும் உடன் பிறந்தோர் போன்று வாழ வேண்டி, மக்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பிக்காமல் எல்லோரும் சமம் என உரைத்தார். தொழில் முறையில் வேறுபடினும் மக்கள் பலரும் பிறப்பினால் ஒன்றே என்பதை வலியுறுத்திப் பலருக்கும் அறம் உரைத்தார்.

தீர்த்தங்கரர்கள் : பகவான் விருஷப தேவர்க்குப் பின்னர் அப்பெருமான் அருளிய அறநெறிகளையும், கல்வியறிவையும் மக்களிடையே பரப்பியவர்கள் இருபத்துமூவர். இவ்விருபத்து மூவர்களும் ஒருவர் பின் ஒருவராக வெவ்வேறு காலங்களில் தோன்றியவர்கள். இவ்வறவோர்களில் மகாவீர வர்த்தமானர் இருபத்து நான்காம் தீர்த்தங்கரர் ஆவார். இவர்கள் அனைவரும் பகவான் விருஷப தேவரைப் போலவே கடுந்தவம் செய்து, ஒப்பற்ற கேவல ஞானம் அடைந்து, வினைகளை வென்று, வீடு பேறு எய்தியவர்கள். தேவர்களாலும், மக்களாலும் பகவான் எனப் போற்றப் பெற்றவர்கள். இவ்விருபத்து மூன்று அறவோர்களுக்கும் பகவான் விருஷப தேவர் முதல்வர் ஆகையால், அப்புண்ணிய மூர்த்தியை, ஆதிபகவன், ஆதிநாதர், ஆதிமூர்த்தி, ஆதிநாயகர், ஆதிதேவர், ஆதி பட்டாரகர், ஆதிமூலம், ஆதிபிரம்மா, ஆதி காலத்து அந்தணர், ஆதி முதற் கடவுள் என்றெல்லாம் அழைத்தனர். இவ்வழக்காற்றைக் கொண்டே நமது தமிழ் மறையாத்த திருவள்ளுவர், பகவான் விருஷப தேவரை ''ஆதிபகவன்'' என வாழ்த்தினர்.

தமிழகத்தில் சமணம் : தமிழகத்தில் சமண சமயம் எப்பொழுது வந்தது என்று கூற இயலாது. இலக்கிய ஆதாரங்களைக் கொண்டு ஆராயின், இராமபிரான்தென்னாடு வந்தபோது, சமண முனிவர்களைத் தரிசித்துச் சென்றார் என வான்மீகி இராமாயணம் கூறுகின்றது. தமிழ் இலக்கியங்களிலே தொல்காப்பியத்தில் சமண சமயம் சிறப்பாகப் போற்றப் பெற்றுள்ளது. சமண சமயக் கொள்கைகளை விளக்கும்போது எல்லாம் ''நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே'' என்றும், ''செவ்விதின் உணர்ந்தோர் முறைப்படுத்தினரே'' என்றும் கூறியுள்ளார். எனவே, சமண சமயம் தமிழகத்தின் தொன்மை வாய்ந்த சமயமாகும்.

மேலும், தமிழ் நாட்டுச் சமண அறவோர்கள் தவம் இயற்றவும் கலை வளர்க்கவும் தமிழகத்தில் உள்ள பல மலைக் குகைகளைப் பள்ளிகளாக அமைத்துக் கொண்டனர். இவர்கள்

தனியாகக் குகைகளில் தவம் இயற்றுது, ஐந்தும் ஐந்துக்கு மேற்பட்ட முனிவர்களுமாகத் தங்கியிருந்தார்கள். அதனுல்தான், அம்மலைகளை மக்கள் ''ஐவர்மலை'' என்று அழைத்து வந்தனர். இந்த ஐவர் மலையையே பிற்காலத்தில் ''பஞ்ச பாண்டவர் மலை'' எனக் கூறி வருகின்றனர். பெரும்பாலான குகைப் பள்ளிகளில் சமண முனிவர்களைப் பற்றித் தமிழ் எழுத்துக்களாலான குறிப்புக்கள் காணப்படுகின்றன. இவைகள் கி.மு. 3-ஆம் நூற்றுண்டு அல்லது 4-ஆம் நூற்றுண்டுகளில் பொறித்தவை எனக் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். சமணமுனிவர்கள் பற்றற்ற துறவிகளாகையால்,

''மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல்?
பிறப்பறுக்கல்
உற்ருர்க்கு உடம்பும் மிகை''

என்று தமிழ் மறை கூறும் தவத்தை மேற்கொண்டு, ஆடையின்றிப் பற்றற்ற நிலையை மேற்கொண்டதால் அவர்கள் மலைப்பள்ளிகள் அமைத்துத் தவம் இயற்றினுர்கள்.

இத்தகு புனிதப் பள்ளிகளைச் சமணர்மலை, நாகமலை, திருப்பரங்குன்றம், ஆனைமலை, அழகர் மலை, கழுகுமலை, ஆறுநாட்டான்மலை, சித்தன்ன வாசல், குன்றக்குடி, அறச்சாலையூர் போன்ற பல இடங்களிற் காணலாம்.

இவ்வாறு விளங்கும் சமணப் பள்ளிகளை, சில அறிஞர்கள் பௌத்தப் பள்ளிகள் என்று துணிந்து கூறி வருகிறுர்கள். பௌத்தத் துறவிகள் உடல் முழுமையும் ஆடைகளும், பாதுகாப்பான படுக்கைகளும், குடைகளும் வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஆகையால், அவர்கள் மலைக்குகையில் வசிக்க வேண்டிய அவசியமில்லை. மக்களிடையே ஊருக்குள் வசதியான கட்டிடங்களை விகாரங்களாக அமைத்துக் கொண்டு வாழ்ந்தார்கள். இதனை நீலகேசி நூலில்,

''கொடிமகரக் கோபுரமும்
நெடுமதிலும் குடினைகளும்
தொடிமகரத் தூண்நிரையும்
சொலற்கரிதாய்ச் சுவர்க்கத்தின்
படிமகரப் படியமையப்
பள்ளிகள்கண் டளியன்போய்க்
கடிமகரக் கடல்கடந்து
கலம்தந்த நலம்என்றுள்''

என்பதனுல் அறியலாம். எனவே, மலைக் குகைகளில் பள்ளியமைத்துத் தவம் புரிந்தனர்கள் சமண சமய அறவோர்களே யாவர்.

**தமிழ் வளர்த்த சான்றேர்கள் :** தமிழகத்துச் சமய அறவோர்கள் தமிழ் மொழியை வளம் பெறச் செய்துள்ளார்கள். இலக்கணம் இலக்கியம் நீதி சோதிடம் முதலிய பல நூல்களை இயற்றித் தமிழ் மொழியை வளர்த்துள்ளார்கள்.

தொல்காப்பியம், நன்னூல், நேமிநாதம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, சூளாமணி பெருங்கதை, திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு, அறநெறிச்சாரம், சினேந்தி மாலை, கணித நூல்கள், இசை நூல்கள் ஆகிய பல்வேறு துறை நூல்களை அறத்தின் அடிப்படையில் இயற்றித் தமிழ்த் தாயை அலங்கரித்துள்ளதை அறிஞர் உலகம் அறியும்.

வளர்க நல்லறம்.


# அருள்திரு சொக்கநாதசுவாமி ஆலயம்

**அம்மாப்பேட்டை, பவானிவட்டம், கோவை மாவட்டம்.**

**'' ஆலயம் தொழுவது சாலவும் நன்று ''**

மெய்யன்பர்களே!

நம் முன்னேர்கள் உள்ளம் பெருங்கோயில் என்றுர்கள். இருந்தாலும் ஒவ்வொரு ஊரிலும் பல் கோயில்களைக் கட்டி வைத்திருக்கிறுர்கள். காலப்போக்கில் கோவில் போல் இருக்கவேண்டிய உள்ளத்தில் தீமை வளர்ந்துவிட்டபடியால், இதை உணர்ந்த பெரியவர்கள், கோவிலுக்குச் சென்றுலாவது தீயதை விடுத்துத் தூய எண்ணத்தோடு இறைவனை வழிபடுவோம் என எண்ணிக் கோயில்களை அமைத்தார்கள். இவ்வகையில் பல ஆண்டுகளுக்கு முன் அமைந்ததுதான் கோவை மாவட்டம், பவானிவட்டம், அம்மாப்பேட்டையில் அமைந்துள்ள அருள்திரு சொக்கநாதசுவாமி ஆலயம். இக்கோவில் காவிரி நதியின் கரையில் மிகக் கம்பீரமாக அமைந்துள்ளது. பெருந்திரளாக மக்கள் வருகை தந்து காவிரியில் நீராடி அருள்திரு சொக்கநாதசுவாமி அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறேம்.

**ஆலய நிர்வாகிகள்.**

# ஜைன சமயத் தமிழ்ப் பெருங்காப்பியம்

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

ஜைன சமயம், இந்திய நாட்டுப் பழைய சமயம், மகா வீரரோடு தோன்றியது எனக் கருதிவிடுதல் கூடாது. அவர் வழிகாட்டிகளின் முடிவில் வந்தவர். 24-ஆம் பெரியார். அவருக்கு முன்னும் விருஷப தேவர் முதல் பலர் கொல்லாமை என்ற அகிம்சையினையும் அளவுக்கு மேல் பொருள் ஈட்டாமையையும் வற்புறுத்தி வந்தனர். இவை இந்திய சமயங்களில் எல்லாம் புகுந்துள்ள புதுமையை வியவாமல் இருப்பதற்கு இல்லை. இஃது ஒன்றே ஜைன சமயத்தின் பெரிய வெற்றி எனலாம். இந்தக் கொள்கைகளை வாழ்வின் அடிப்படைகளாக வற்புறுத்திய காந்தியடிகளை, இன்று இந்தியர் அனைவரும் ஒப்புக்கொண்டு விட்டனர் ; உலகமும் வாயளவிலேனும் ஒப்புக்கொண்டு வருகிறது.

இத்தகைய வெற்றிக்குக் காரணம், ஜைனப் பெரியார் இலக்கியங்களின் வழியே தங்கொள்கைகளை எல்லார் மனமும் கொள்ளப் பாடி வந்தமையே ஆம். இந்த வகையில் தலைசிறந்த ஜைனக் காப்பியமாய் விளங்குவது சிந்தாமணியேஆகும். சிலப்பதிகாரமும், ஒரு ஜைனர் இயற்றியதே. ஆனாலும், அஃது ஒரு தமிழ்க் காப்பியமாகவே அமைந்துள்ளது. சிந்தாமணியோ, ஜைனக் காப்பியமாக அமைய வேண்டும் என்ற எண்ணத்தோடேயே எழுந்தது; ஆனால், தமிழொடு, தமிழாய்க் கலந்து விட்டது. சிந்தாமணிக் கதையினைக் கூறும் பல நூல்கள் பிராகிருதத்திலும் வடமொழியிலும் இருந்தாலும், சிந்தாமணி போன்ற சிறப்பினை அவை என்றும் அடைந்ததில்லை. தேவர் கூறும் இயற்கை வருணனையும் நகர அமைப்பும் தமிழ்நாட்டிற்கே உரியன ஆகும். பெயரும் கதையும் எல்லாம் பிற மொழியிலிருந்து வந்தனவே. ஆனாலும், அதில் வருவார் பேசும் பேச்சும் எண்ணும் மனமும் எல்லாம் பச்சைத் தமிழாக இனித்துத் தமிழர் உள்ளத்தினைக் கவரக் காண்கிறோம். செய்யுள் வகையும் வடமொழியைப் பின்பற்றியதே எனக் கருதி, வடமொழி மரபினை நிலை நாட்டியவர் திருத்தக்க தேவர் எனச் சிலர் கருதுகின்றனர். தமிழ் மரபுக்கு முரணானதானால், விருத்தம் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் இந்நாட்டில் நிலைபெற்றிருக்க முடியாது. இந்த விருத்தங்கள், பழைய கோலங்களின் புதிய பல கோலங்களே என நச்சினார்க்கினியரே உறுதி கூறுவதனை நாம் மறத்தலாகாது. தமிழ்ச் செய்யுளில் புதியதொரு சந்த நயத்தினைச் செய்யுள் வனப்பினைத் திருத்தக்க தேவர் வளர்த்ததால், தமிழே வாழ்ந்தது எனல் வேண்டும். இசையோடு சேர்ந்து இழுமென ஓடும் இன்பம் இப்புது விருத்தங்களில் உண்டு அன்றோ?

ஜைனம் என்றால் கடுந் துறவு என்றும், உலகினை விட்டு ஓடுதல் என்றும் எண்ணும் நினைவினைத் திருத்தக்க தேவர் ஓட்டுகின்றார். மனைவி மக்களொடு வாழ்ந்த சீவகன் ஓர் அரசன்; பெரிய வீரன்; எனினும், ஜைனன். இப்பெரிய ஜைனனைப் போல இசை முதலாம் பல கலைகளையும் வளர்த்தவர் யார்? கலையின் செல்வமாம் சிந்தாமணியைப் போலச் சிறந்த காப்பியம் எது? இக் காப்பியத்தினைப் பாடியதனாலேயே இதன் ஆசிரியராம் திருத்தக்கதேவரது துறவிலும் பிறர் ஐயம் கொண்டனர் அன்றோ? அவரை ஐயம் கொண்டு, வறட்டு ஜைனம் தமிழ் நாட்டில் வாழாதபடி காத்துக் கலையும் வாழ்வும் அகிம்சையோடு அளவுக்கு மேல் வேண்டா உள்ளம் வளர வளர, ஓங்கி உயரும் நுட்பத்தினைக் காட்டிப் பழைய தமிழ்ப் பண்பாட்டினைத் தூய்மை செய்து நிலை நாட்டிய பெருமை, திருத்தக்க தேவருக்கே உண்டு என்பதை இந்தப் பழங் கதையிலிருந்தும் அறிகிறோம்.

சிந்தாமணியே தமிழாய் விளங்குகிறது. பின்வந்த பாவலர் ஒவ்வொருவரும் சிந்தாமணியில் வந்த பொருளையும் சொல்லையும் பொன்னேபோலப் போற்றித் தத்தம் நூலில் வளாவிப் பெருமை பாராட்டி வந்தனர். கல்வியிற் பெரிய கம்பரே இந்த மரபினை நிலை நாட்டினர் எனலாம். இத்தகைய பெருமை திருக்குறளுக்கன்றி வேறெந்த நூலுக்கு உண்டு? திருக்குறளோ, பொது நூல்; அதிலிருந்து ஓரகப்பை—அன்று—பல அகப்பையும் எடுத்துத் தத்தம் நூல்களில் புலவர்கள் வளாவிக் கொள்வது அருமை அன்று. ஜைன நூல் என்பதனை மறக்க முடியாதபடி திருத்தக்கதேவர் பாடிய நூலிலிருந்து ஜைன மதத்தினை எதிர்க்கும் புலவர்களும் இங்குக் கடன் வாங்குவதன்றோ வியப்பினும் வியப்பு! சேக்கிழாரது பெரிய புராணம் சிந்தாமணியை அழிக்கப் புறப்பட்ட பெரு நூல் எனச் சிலர் கருதுவது உண்டு. ஆனால், அங்குமன்றோ சிந்தாமணியின் எதிர் ஒலி கேட்கிறது! இதற்குக் காரணம், சிந்தாமணி இலக்கிய வகையில் தமிழொடு தமிழாய் என்றும் காட்சியளிப்பதே ஆம். இத்தகைய பொது நோக்கம் சிந்தாமணிக்குப் பின் தமிழ் நாட்டிலக்கிய உலகில் நின்றுநிலைத்து விட்டது. கம்ப ராமாயணம் ஒரு வகையால் வைணவ நூலே ஆயினும், சைவரும், இஸ்லாமியரும், கிறிஸ்தவரும், பிறரும் மிக விரும்பிக் கற்று வருகிற காட்சியைச் சில நூற்றாண்டாக நாம் கண்டு களிக்கவில்லையா? இந்தப் பொதுமை மனப்பான்மைக்கு வித்திட்டவர் திருத்தக்கதேவரேயாவர். ஆதலின், சிந்தாமணி என்றென்றும் தமிழ் நாட்டில் நின்று நிலவி வரும் என்பதில் என்ன ஐயம்! *

# அருள்திரு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில்

## சங்கரநயினார்கோவில், திருநெல்வேலி மாவட்டம்.

பிற்காலப் பாண்டிய மன்னர்களில் ஒருவரான உக்கிரபாண்டியனால் கட்டப்பட்ட இத் திருக்கோயில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு புகழ் பெற்ற பிரார்த்தனைத் தலமாகும். அன்னை கோமதியின் அருந்தவத்துக்கு இரங்கி மாநிலத்தோர் சிவன் வேறு திருமால் வேறு என்று வேறுபடுத்துவது தவறு என்று உணரும் பொருட்டுச் சிவபிரான் ''பாதி சங்கரனும் பாதி நாராயணனுமாகக்'' காட்சி கொடுத்த ஸ்தலம் இது ஒன்றே!

ஆண்டுதோறும் மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் முறையே 21,22, 23 ஆகிய தேதிகளில் காலை 6-18 மணிக்குக் கதிரவன் சங்கரலிங்கப் பெருமானை வழிபடும் காட்சியை இன்றும் கண்டு வணங்கலாம். நாடெங்கிலுமிருந்து நோய்வாய்ப்பட்டவரும், மனநோய் உடையவர்களும், கோமதி அம்பிகையை வழிபட்டு நோய் நீக்கம் பெறுகின்றனர். வீடுகளில் நச்சுப் பூச்சிகள் வராமலிருக்கத் தங்கம் அல்லது வெள்ளியிலான பாம்பு, தேள், பூரான் இன்ன பிற உருவங்களையும், நோயின்றி வாழத் தங்கம் அல்லது வெள்ளியிலான கை, கால், முகம் இன்ன பிற உருவங்களையும் காணிக்கையாகச் செலுத்துகின்றனர்.

இறைவன் : அருள்திரு சங்கரலிங்க சுவாமி.
இறைவன் : அருள்திரு சங்கரநாராயண சுவாமி.
இறைவி : அருள்திரு அன்னை கோமதி அம்பிகை.
ஸ்தலவிருட்சம் : புன்னை.
தீர்த்தம் : நாக சுனை.
ஆகமம் : காமிகாகமம்.

மேலும் வழிபட வருபவர்களின் வசதிக்காக விடுதிகளும், கல்யாண மண்டபமும், நூல் நிலையமும் இத்திருக்கோயில் பொறுப்பிலுள்ளன. மேலும் இத்திருக்கோயிலாரால் ஓர் இலவசச் சித்த மருத்துவ மனையும், ஓர் ஆரம்பப் பள்ளியும் ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது.

திருவாவடுதுறை ஆதீனம் பத்தாவது குருமகா சந்நிதானமவர்களால் பதிக்கப்பட்டு உள்ள ஸ்ரீசக்கரம் மீதமர்ந்து நோன்பியற்றினால் வேண்டும் வரம் பெறலாம்.

**முக்கியத் திருவிழாக்கள்:**

1. ஆடித் தபசுத் திருநாள்.
2. சித்திரைத் திருநாள்.
3. திருவெம்பாவைத் திருநாள்.
4. திருக்கல்யாணத் திருநாள்.
5. ஸ்கந்த சஷ்டித் திருநாள்.
6. நவராத்திரி இலட்சார்ச்சனை.
7. தை மாதத் தெப்ப உற்சவம்.

இத்திருக்கோயிலில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைதோறும் அருள்தரும் கோமதி அம்பிகையின் தங்கப் பாவாடை தரிசனம் உண்டு.

மேலும் இத்திருக்கோயிலில் ரூ. 4.5 இலட்சம் செலவில் இராஜகோபுரத் திருப்பணி வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. திருப்பணிக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படும். விரைவில் இத்திருக்கோயிலில் மகா கும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது.

பத்திர தீபக் கட்டளை என்று ஒரு கட்டளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டளைக்காக அன்பர்களிடமிருந்து வரும் பணத்திலிருந்து கிடைக்கக்கூடிய வட்டியை வைத்து ஒவ்வொரு வருடமும் தை அமாவாசையன்று பத்தாயிரம் தீபங்கள் ஏற்றி வைத்துக் கட்டளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பக்தர்கள் தாராளமாக நன்கொடை வழங்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அபூர்வமான இத்திருக்கோயிலுக்கு அன்பர்கள் ஒரு முறை வந்து வழிபட்டு அருள் பெற வேண்டுகிறோம்.

**வெ. கடற்கரை,**
அறங்காவலர்.

**ஈ. பிச்சையா, பி.ஏ.,**
செயல் அலுவலர்.

# அருள்மிகு அழகியசிங்கர் பதிகம்

சாரதிதாசன்

திங்களும் கதிரும் திரிதரும் அல்லிக்
கேணியிற் சிறந்து திகழ்வோனே!
பங்கயன் முதலாய்ப் பழம்பெரு முனிவர்
பணிந்திடு பாதாம் புயவோனே!
செங்கையில் ஒளிரும் திகிரியும் சங்கும்
தெரிதர உறையும் திறலோனே!
அங்கயற் கண்ணி அலைமகள் கொஞ்சும்
அழகிய சிங்கப் பெருமாளே!

திருமகள் உறையும் மார்புடன் அடியார்
சிந்தையில் உறையும் திருவோனே!
கருமுகில் அஞ்சும் கவினுரு வோடு
கடிமலர் அஞ்சும் கழலோனே!
பரிமுக வடிவாய்ப் பாரிடர் அகற்றிப்
பக்தரைக் காக்கும் பரந்தாமா!
அருமறை தேடி அறியவும் ஒண்ணு
அழகிய சிங்கப் பெருமாளே!

மந்தர மலையில் மாசுணம் இணைத்து
மாகடல் கடைந்த மதுசூதா!
இந்திரன் இழந்த பொருள்களை எல்லாம்
ஈந்தவன் மகிழும் வழிசெய்து
சந்திர வதனத் தாரகை கமலை
தன்னைநல் திருமார் பணிந்தோனே!
அந்தரர் உற்ற அருந்துயர் அகற்றும்
அழகிய சிங்கப் பெருமாளே!

'மாதவன்' என்றும், 'கேசவன்' என்றும்,
'மாயவன்' என்றும், 'மலர்மங்கை
காதலன்' என்றும், 'கண்ணனே' என்றும்,
'கருணையில் ஆழ்ந்த கடல்'என்றும்,
மாதவர் முனிவர் வானவர் இயக்கர்
சாரணர் வணங்கி இசைபாட
ஆதவர் கோடி அஞ்சிட ஒளிரும்
அழகிய சிங்கப் பெருமாளே!

வெஞ்சின அசுரன் வெகுண்டுதன் மகவை
வெவ்வழல் ஒத்த இடர்செய்யப்
பஞ்சினும் மென்மைப் பாலகன் காணப்
பவித்திரம் மிகுந்து, ஆள் அரியாகி
நஞ்சினும் கொடியோன் நெஞ்சினைப் பிளந்து
'நாரணன்' எனும்பேர் நிலைசெய்த
அஞ்சன மேனி அண்ணலே! எந்தாய்!
அழகிய சிங்கப் பெருமாளே!

வாமன வடிவாய் மாவலி முன்போய்
மாநிலம் அளந்த நெடியோனே!
காமனும் கண்டு கலங்கிடும் எழிலாய்!
கண்ணுதற் கடவுள் இடர்கொய்த
பூமகள் கேள்வா! புவியினர் இடரைப்
போக்கிஇன் பருள்உன் புகழெல்லாம்
ஆமள விட்டே அறைந்திடல் ஆமோ?
அழகிய சிங்கப் பெருமாளே!

நஞ்சமிழ் அரவில் நடமிடு பாத!
நாகணை மீதில் துயில்வோனே!
தஞ்சமென் றுன்னைச் சரணடை வோர்க்குத்
தண்ணருள் செய்யும் சகந்நாதா !
கஞ்சனும் களிறும் பாகனும் விழக்
கருணையே செய்த கழல்வீரா!
அஞ்சனை செல்வன் அனுமனுக் கருளும்
அழகிய சிங்கப் பெருமாளே!

'நாரணன்' என்னும் நாமமே சிறந்த
ஞானமும் வாழ்வும் தருமென்று
பூரண மாக நம்பியுன் பொற்றுள்
போற்றியே நின்றேன் அருளீவாய்;
சீரணவு அல்லிக் கேணியில் திகழும்
தேவகி மைந்தா! எழுதாத
ஆரண உலகின் காரண மான
அழகிய சிங்கப் பெருமாளே!

துட்டநோய் எம்மைத் துயர்செயா வண்ணம்
தோன்றுதற் கரிய துணையாகி
கெட்டவர் உறவும் கேடுசெய் மனமும்
கீழ்மையும் தவிர்ந்த நிலையீவாய்;
மட்டவிழ் குழலி மலர்மகள் தனது
மைவிழி ஆர்ந்த அருள்கூர
அட்டியில் லாதுன் அடியிணை பணிந்தேன்
அழகிய சிங்கப் பெருமாளே!

'நானென' தென்னும் ஆணவம் நலிய
நாடியுன் பாத மலர்தேடிக்
கானமர்ந் தென்றும் கடுந்தவம் இயற்றுக்
கடையவன் எனினும் கனிவோடு
தேனமர் துளவத் தாரணிந் தென்றன்
சிந்தையில் அமர்ந்த குருதேவா!
ஆனையின் துயரம் அறிந்தருள் சுரந்த
அழகிய சிங்கப் பெருமாளே!

வம்பவிழ் கோதை வயங்கெழில் மார்பில்
மரகத முத்து வடமாடச்
செம்பொனிற் சிறந்த குழைகளும் உன்றன்
செவிகளில் இனிதே அசைந்தாடத்
தும்பைவெண் மலரில் தூயவெண் பட்டும்
தோன்றவே காட்சி தருவோனே!
அம்புவி அனைத்தும் ஆட்சிசெய் அரசே!
அழகிய சிங்கப் பெருமாளே!

பாரதப் போரில் பார்த்தனின் தேரைப்
பரிவுடன் ஓட்டிப் பணிசெய்த
ஆரணன்; கண்ணன்; அச்சுதன்; இராமன்;
அழகிய சிங்கப் பெருமாள்மேல்
சாரதி தாசன் சாற்றிய இன்பத்
தண்டமிழ் மாலை தனைவல்லார்
சீருடன் வாழ்ந்து திருமகள் கோனூர்
சேருவர் ஒப்பில் திருநாடே!

---

# அருள்திரு இராமநாதசுவாமி திருக்கோயில்

## இராமேசுவரம்

### சுவர்ண பந்தன மகா கும்பாபிஷேகம்

### 5—2—1975 புதன்கிழமை, காலை 9 மணிக்குமேல் 10 மணிக்குள்

அருள்திரு இராமநாதசுவாமி திருக்கோயில் சுவர்ண பந்தன அஷ்ட பந்தன கும்பாபிஷேகம் நடைபெற்று இருபத்தேழு ஆண்டுகள் ஆகின்றன. அருள்திரு பர்வதவர்த்தினி அம்மனுக்குச் சுவர்ண பந்தனத் தகடுகள் சாற்றி, சுவர்ண பந்தன அஷ்ட பந்தனம் செய்யவும், திருக்கோயில் மேல் தளங்களில் தட்டோடு (Pressed Tiles) போட்டுப் புதுப்பித்தும், கோபுர கலசங்களில் பழுதடைந்தவைகளைப் புதுப்பித்தும், புதிதாகத் தங்கரேக்கு போட்டும், சுவாமி அம்மன் கொடி மரங்கள் புதிதாகச் செய்து தங்க ரேக்கு போட்டும், அம்மன் சுவாமி மற்றும் எல்லா பரிவார தேவதைகளுக்கும் அஷ்டபந்தனம் செய்தும்,

ஆனந்த ஆண்டு தை மாதம் 23-ஆம் நாள் புதன்கிழமை (5—2—1975) காலை 9 மணிக்கு மேல் 10 மணிக்குள் மகா கும்பாபிஷேகம் செய்யத் திருக்கோயில் அறங்காவலர் குழு தீர்மானித்திருக்கிறது.

ஆகவே அதற்கான திருப்பணி வேலைகள் ரூ. 15 இலட்சம் செலவில் நடைபெற்று வருகின்றன. திருப்பணி நிதி வாரி வழங்கிப் பர்வதவர்த்தினி சமேத இராமநாதசுவாமி அருள் பெறுமாறு வேண்டுகிறோம். திருப்பணிக்கு நன்கொடையாகக் கொடுக்கும் தொகைகளுக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அரசு ஆணை நிர். 50 (எஃப். 16/40-65, ஐ.டி. அ. 1 உட்பிரிவு-(6) பிரிவு 84 வருமான வரிச் சட்டம் 431961). கும்பாபிஷேகத் திருப்பணி நன்கொடைகளைத் திருக்கோயில் நிர்வாக அதிகாரிக்கு நேரிடையாகவும், கீழ்க் கண்ட வங்கிகள் மூலமாகவும் அனுப்பலாம். சுவர்ண பந்தனத்துக்குத் தங்கக் காணிக்கை செலுத்தலாம்.

1. ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா,
2. இந்தியன் பாங்க்,
3. பாங்க் ஆஃப் மதுரை,
4. இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி.

**எஸ். பி. முனுசாமி,**
செயலாளர் மற்றும் பொருளாளர்,
திருப்பணிக் கமிட்டி, நிர்வாக அதிகாரி[
உதவி ஆணையர்.

**எஸ். இராமநாத சேதுபதி,**
(இராமநாதபுரம் ராஜா),
திருப்பணிக் குழுத் தலைவர்,
அறங்காவலர் குழுத் தலைவர்.

**திரு. எல். ஏ. ஆர். சோமநாதன் செட்டியார்,** தேவகோட்டை,
**திரு. டி. கே. சிறைமீட்டான்,** எம்.எல்.ஏ., பரமக்குடி,
**திரு. ஆர். எம். முருகப்பச் செட்டியார்,** நடராஜபுரம்,
**திரு. ஏ. டி. எம். இராமநாதத் தேவர்,** அஞ்சுக்கோட்டை.

அறங்காவலர்கள் :

# ஆட்டுவித்தால்

# யாரொருவர்!

கே. எஸ். ஜெகன்னாதன்

ஆட்டுவிப்பவன் அவன்
ஆடுபவர் நாம்!
ஆட்டுவிக்கின்றவன் ஆண்டவன்.

குவலயத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் அறிந்தவன் அவன்.

நாம் நடத்தும் செயல்களைப் பிறர் அறியாமல் மறைக்க முயற்சிக்கிறோம்.

ஆனால் நமக்கும் மேலே ஒருவன் நம்மைக் கண்காணிக்கிறான் என்பதை அந்த நேரத்தில் மறந்து விடுகிறோம்.

மறந்துவிட்ட ஒன்றை நமக்கு நினைவுபடுத்திடவே அவன் நமக்குத் துன்பங்களைத் தருகிறான். அப்போது ஆண்டவா என அழைக்கிறோம்.

இன்பத்திலே திளைத்திருக்கும்போது, மகிழ்ச்சியிலே மனத்தைப் பறிகொடுக்கும்போது அதிலேயும் ஆண்டவனுக்கும் பங்கு உண்டு, அதை அளிப்பவனும் அவன்தான் என்பதை மறந்து விடுகிறோம்.

கவர்ச்சியிலே மனத்தைச் செலுத்துகிறோம். நாம் வாழும் பூமியும் அதிலுள்ள நீரும் செடிகளின் வேர்களைக் கீழ்நோக்கி இழுக்கின்றன.

சூரியனது ஒளி செடிகளின் கிளைகளை மேல் நோக்கி இழுக்கின்றது.

பூக்கள் செடிகளில் மலரும்போது, அவை மணத்தாலும் நிறத்தாலும் அதனிடம் உள்ள தேனினாலும் வண்டுகளையும் பறவைகளையும் கவர்கின்றன.

சில மரங்கள் இனிய பழங்களைத் தருகின்றன. பழங்கள் பறவைகளையும் மக்களையும் கவர்கின்றன.

மலர்களின் மணமும் கவர்கிறது, கனிகளின் சுவையும் கவர்கிறது. ஆக கவருகின்ற பொருள்மீது மனிதனுக்கு நாட்டம் உண்டாகின்றது.

ஆண்மீது பெண்ணிற்குக் கவர்ச்சியும், பெண்மீது ஆணிற்குக் கவர்ச்சியும் உண்டாகிறது. இக் கவர்ச்சிக்கு வசப்படும் அவர்கள் ஒன்று மற்றொன்றிற்காக உயிரைத் துறக்கவும் தயாராயுள்ளன.

இத்தனை கவர்ச்சிகளையும் உருவாக்கி வைத்து ஆட்டுவிப்பவன் எவன்? அவன்தான் இறைவன்.

ஆறுத மனத்திடையே ஆறு தத்துவங்களைத் தந்து மனதை ஆறும்படிச் செய்பவனும் அவனே!

காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் இவை ஆறுமே அவன் படைத்த ஆறு அறிவு படைத்த மனிதனிடம் இருப்பவையாகும்.

காமத்திலிருந்து மற்ற ஐந்தும் பிறந்தது ஆகும். சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு காமமே எடுத்துக் கொள்ளும் பல வேடங்களாகும்.

புற இயற்கையையும், அக இயற்கையையும் ஆராய்ந்த நம் முன்னோர் கவர்ச்சி எனும் சக்தி எங்கும் காணப்படுவதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டனர்.

கவர்ச்சியே மெய்ப் பொருளென்றும், அழியாத அடிப்படைத் தத்துவம் அதுவேயென்றும், அது பார்க்குமிடமெங்கும் நீக்கமற உறைகின்ற தனாலேயே உலகமும் வாழ்க்கையும் கவர்ச்சி மயமாகும் என்று உணர்ந்தனர்.

கவர்ச்சிக்குப் பெயரும் உருவமும் கொடுத்துப் பேச விரும்பிய வேறு சில மெய்யறிஞர்கள் அதே கவர்ச்சியை 'ஹரி' என்றும், 'ஹரன்' என்றும், 'கிருஷ்ணன்' என்றும் பெயரிட்டு அழைத்தனர்.

இப்பெயர்கள் அனைத்தும் 'அபஹரிப்பவன்' 'ஆகர்ஷிப்பவன்', இழுப்பவன்' என்றே பொருள்படுகின்றன.

'நிலவிசும்பு ஒழிவற, கரந்தசில் இடந் தொறும் இடத்திகழ் பொருள் தொறும், கரந் தெங்கும் பரந்துளன்' (பூமி ஆகாயம் எங்கும் எங்கும் எவ்விடத்தும் எப்பொருளிலும் பரந் தும் மறைந்தும் நிற்கிருன்) என்கிருர் நம்மாழ் வார்.

பரம்பொருளே 'உள்ளங்கவர் கள்வன்' என்று பேசுகின்றனர். 'அன்பே உருவானவன்' என்கின்றனர். அன்பும் கவர்ச்சியன்ருே!

அன்பு பிறரைத் தன்பால் கவர்கின்றது. பிறரைத் தன்பால் கவர்கின்ற எந்தச் சக்தியும் கவர்ச்சியாகின்றது.

கடவுள் மக்கள் அனைவரையும் கவர்கின் ருர். ஆக கவர்ச்சிக்கு மூலம் பரம் பொருளா கின்றது.

ஆன்மா எனும் மெய்ப்பொருள் மனிதனது உடலில் உள்ளது; அதன் உண்மை இயல்பு ஆனந்தமாகும்; உண்மை அறிவு இன்பமாகும். இந்த இயல்பே மனிதனை அழியாத வாழ்விலும், அழியாத இன்பத்திலும் ஆசை கொள்ளச் செய் கின்றது. அவனுக்கு அந்த ஆசையை நிறைவேற் றும் ஆற்றலையும் அளிக்கிறது.

மனிதன் பிறக்கிருன், இறக்கிருன். இடைப் பட்ட அவன் வாழும் காலத்தில் நல்லதை நினைந்து நல்லதையே செய்ய வேண்டும்.

மன அடக்கத்தாலும் தியானத்தாலும் அன்பு கொண்டு வாழ வேண்டும்.

இறைவனின் கவர்ச்சியை நம் மனம் உணரத் தொடங்கும்போது, குணம் ஓங்குகிறது. அவன் அருள் கிடைத்திட கிடைத்திட மேலும் மேலும் மனிதன் அதற்கு ஆட்படுவான். பேரின்ப நிலையை அடைகிருன்.

மனிதன் பேரின்ப நிலையை அடையும் போது கவர்ச்சி மறைகிறது. ஆசை அழிகிறது.

ஆத்மா ஆண்டவனிடம் கவர்ச்சி கொள் கிறது.

ஆண்டவன் மீது ஏற்படும் கவர்ச்சி அளவில் அடங்காததாகும்.

ஆட்டுவிக்கின்றவன் அவன், ஆடுபவர்கள் நாம்.

அவன் ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடா தார் உண்டு.

அனைவரும் அவனுக்குக் கட்டுப்பட்டவர் களே!


# அருள்திரு
# காசிவிசுவநாதசுவாமி ஆலயம்

## பட்டுக்கோட்டை ‡ ‡ தஞ்சை மாவட்டம்

சுமார் 150 ஆண்டுகட்கு முன்பு பாலாஜி பண்டிதர் என்னும் பெரியார் காசியிலிருந்து காசி நீரும், லிங்க பாணமும் கொணர்ந்து பட்டுக்கோட்டையில் அருள்திரு காசி விசுவநாதர் கோயில் கட்டி, குளம் வெட்டி, அதில் காசியிலிருந்து கொண்டு வந்த கங்கை நீரை ஊற்றி ஞர். எனவே அக்குளம் காசிக் குளம் எனப் பெயரமைந்து பின்னர் காசாங்குளம் என மருவி வழங்கலாயிற்று.

பட்டுக்கோட்டைவாழ் பெருமக்கள் அ. மாணிக்க முதலியார், மாரிமுத்து முதலியார், அ. அருணுசல முதலியார், அ.மா. பொன்னுச்சாமி முதலியார் ஆகியோர்களால் பரிவார மூர்த்திகளுக்கு ஆலயம் அமையப்பெற்றது. நகர மக்கள் பெருமளவில் வழிபடும் இவ்வாலய நவக்கிரகங்கள் சக்தி வாய்ந்தவை.

அறங்காவலர்கள்

# கச்சியப்ப சிவாச்சாரியார் வரலாறு

திருமுருக கிருபானந்த வாரியார்

''தொண்டை நன்னாடு சான்றோருடைத்து'' என்றபடி, ஆன்றோர்கள் பலர் அவதரித்து அலங்கரித்த நாடு, அண்டர்கள் புகழும் தொண்டை நன்னாடு. இத்தொண்டை நன்னாட்டிற்குத் திருமுகம் போன்றது காஞ்சி மாநகரம். ''நகரேஷு காஞ்சி'' என்று புகழ்கின்றார் காளிதாசர். இத்தலம் முத்தித் தலங்கள் ஏழனுள் ஒன்று. பல மன்னர்கள் இருந்து அரசு புரிந்த தொன்னகரமாகிய நன்னகரம்.

இத்தகைய கச்சியந் தலத்தில் ஆதிசைவர் திருமரபில் காளத்தியப்ப சிவாச்சாரியர் என்பவர், குமரகோட்டத்தில் அர்ச்சகராவர். இவர் நெடுங்காலம் மகப்பேறின்றிக் குமரகோட்டத்து அருட் பெருங் கடலாகிய குமரக் கடவுளை விதிப்படி வழிபட்டு வந்தார். திருவேலிறைவன் திருவருளால் அவருடைய மனைவியாரது மணி வயிறு வாய்த்தது. கோளும் நாளும் நன்னிலையுற்றபோது சிவஞான பாநுவாக ஒரு புதல்வர் தோன்றினர். அவருக்குக் கச்சியப்பர் எனப் பெயர் சூட்டினர்.

''விளையும் பயிர் முளையிலே'' என்ற பழமொழிப்படி இவர் இளமை தொட்டு முருகப் பெருமானுடைய திருவடியில் இடையறாது அன்பு செய்து வளர்ந்தார்.

இவர் ஐந்தாம் வயதில் கல்வி பயிலத் தொடங்கி, வடமொழி, தென்மொழி என்ற இரண்டு மொழிகளிலும் வல்லுநர் ஆனார். அன்பு, அருள், வாய்மை, தூய்மை, பொறுமை, அடக்கம் முதலிய நற்குணங்கள் அனைத்தும் அவருக்கு அணிகலன்களாக விளங்கி அணி செய்தன.

ஏழாம் வயதில் உபநயனம் செய்யப் பெற்று வேதங்களை ஓதினார். வடமொழியில் வேத வேதாங்கங்களையும், தமிழில் இலக்கண இலக்கியங்களையும் முற்றும் கற்று விற்பன்னராக விளங்கினார்.

பின்னர் சமய தீட்சை பெற்றுத் தமிழ் மறையாகிய தேவார திருவாசகங்களை ஓதுவாராயினார். அதன்பின் விசேட தீட்சை பெற்று, சைவாகமங்களில் கிரியா காண்டங்களைக் கற்றறிந்தார்.

அதன்பின் நிர்வாண தீட்சையும், ஆசார்ய அபிஷேகமும் பெற்று, சைவாகமத்தின் ஞான காண்டங்களை ஓதினார்.

கல்வியின் பயன் கருணைக் கடலாகிய இறைவனை இறைஞ்சுவதே எனத் தெளிந்தார். குமர கோட்டத்துள் எழுந்தருளியுள்ள கந்தக் கடவுளைச் சந்ததமும் அஞ்சு வித சுத்திகள் செய்து, ஆறு காலங்களிலும், எழுவகைப் பிறப்பும் நீங்கும் பொருட்டு எண்வகை மலர் சாத்தி வழிபட்டுக் கொண்டு வந்தார்.

**கனவில் அருள் பெறுதல் :**

மூவருக்குந் தேவருக்கும் எட்டாத முழுமுதற் கடவுளாகிய முருகப் பெருமான் கச்சியப்ப சிவாசாரியருடைய கனவில் காட்சியளித்தார். ''அன்பனே! கந்த புராணத்து ஆறு சங்கிதைகளுள் சங்கர சங்கிதையின் முதற் காண்டமாகிய சிவரகசிய காண்டத்திலுள்ள நமது சரித்திரத்தைக் கந்த புராணம் எனப் பெயரிட்டுத் தமிழிலே பெருங் காப்பியமாகப் பாடக் கடவாய்'' என்று கட்டளையிட்டு ''திகட சக்கர'' என்று அடியெடுத்துக் கொடுத்து அருள் புரிந்தார்.

கச்சியப்பர் கனவு தெளிந்து எழுந்து அழலிடைப்பட்ட மெழுகு போல் உள்ளம் உருக உரோமம் சிலிர்ப்ப, உரை குழற, கரையற்ற இன்பக் கடலில் மூழ்கினார். ''ஐயனே! பன்னிருகையனே, ஒன்றுக்கும் பற்றாத புழுத்த நாயினுங் கடையனாகிய தமியேனையும் ஒரு பொருள்படுத்தி அருள்செய்த தேவரீரது திருவருள்தான் என்னே'' என்று ஆனந்தக் கூத்தாடினார்.

நீராடி, நீறாடி நித்தியக் கருமங்களை முடித்துக் கொண்டு, குமரகோட்டம் சென்று வடிவேல் முருகனை வழிபட்ட பின், புராணம் பாடத் தொடங்கினார். நாள்தோறும் நூறு செய்யுள் பாடி எழுதப் பெற்ற ஏட்டையும், எழுத்தாணியையும் அர்த்தயாம பூசை முற்றிய பின் இறைவன் இணையடியில் வைத்து விட்டுத் திருக்கதவைத் திருக்காப்பிட்டுக் கொண்டு தமது இல்லம் போவார். மறுநாள் வழிபடும் பொருட்டுக் கோயிலுக்குள் சென்று ஏட்டை எடுத்துப் பார்ப்பார். அதில் சிலவிடங்களில் திருத்தப்பட்டிருத்தல் கண்டு அதிசயம் அடைந்து கந்தவேளின் கருணையை நினைந்து கண்ணீர் சொரிவார். கந்த நாயகனே தன் கரமலரால் திருத்திய அற்புதச் செந்தமிழ்க் காவியமாகும் கந்தபுராணம். இவ்வாறு நூல் பாடி முற்றுப் பெற்றது. அரங்கேற்றும் நன்னாளைத் தேர்ந்தெடுத்தார். அரங்கேற்றத்துக்கு வருமாறு எல்லோருக்கும் அறிவித்தார்.

## அரங்கேற்றம் :

அன்பர்கள் காஞ்சி மாநகரத்தை அலங்கரித்தார்கள். மெழுகிக் கோலமிட்டு நறுமண மலர் மாலைகளைத் தொங்கவிட்டார்கள். வரிசையாகப் பல விளக்குகளை ஏற்றினார்கள். நறும்புகை கமழச் செய்தார்கள். சந்நிதியில் கச்சியப்பர் அமர்ந்து பட்டாடை விரித்த பீடத்தின் மீது புராணத்தை வைத்து அர்ச்சனை செய்தார். அஞ்சலி செய்தார். பின்னர் ''திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்'' என்னும் முதற் பாடலை ஒருமுறை படித்து, ''திகழ் தசக்கரம் செம்முகம் ஐந்து உளான்'' என்று பதப் பிரிவினை செய்து, ''விளங்கா நின்ற, பத்துத் திருக்கைகளும் செவ்விய ஐந்து திருமுகங்களும் உள்ள சிவ பெருமானுடைய'' என்று பொருள் செய்தார்.

அந்த அவையின்கண் இருந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர் ''சுவாமிகாள்! திகழ் தசம் என்பது திகடசம் எனப் புணர்வதற்கு விதி தொல்காப்பியம் முதலிய நூல்களுள் ஒன்றிலேயும் இல்லையே'' என்றார்.

கச்சியப்ப சிவாசாரியர் ''ஐயா'', தாங்கள் கூறியது சரி. ஆனால் இம்முதலடி என் வாக்கு அன்று. இது இறைவன் திருவாக்கு. முருகன் தந்த முதலடி'' என்றார்.

அது கேட்ட அப்புலவர் புன்முறுவல் செய்து, ''முருகன் தந்த முதலடியாயின், அவரே வந்து இதற்குச் சமாதானங் கூறட்டும், இல்லையேல் அரங்கேற்றவொட்டேன்'' என்றார்.

கச்சியப்ப சிவாசாரியர் ''நாளை அரங்கேற்றுவோம்'' என்று கூறினார். சபை கலைந்தது. சிவாசாரியர் உண்ணாது, உள்ளம் உலைந்து முருகனை நினைந்து உருகித் தரையில் கிடந்து துயின்றார். கந்தவேள் ''அன்பனே'' நீ வருந்தற்க. சோழ தேசத்தில் வீரசோழியம் என்று ஓர் இலக்கண நூல் இருக்கின்றது. திகழ் தசம் திகடசம் என புணர்தற்கு விதி அந்நூலில் சந்திப் படலத்தில் பதினெட்டாஞ் செய்யுளில் இருக்கின்றது. சோழ தேசத்துப் புலவன் ஒருவன் அந்நூலை நாளைக்கு இங்கு கொணர்ந்து கொடுத்து விளக்குவான்'' என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

மறுநாள் ஆலயத்தில் அவை கூடியது. கலகல என்று புலவர்கள் உரையாடிக் கொண்டு இருந்தார்கள். அங்கு முருகவேள் புலவர் வடிவில் தோன்றினார். தமது கையிலுள்ள வீர சோழியம் என்ற இலக்கண நூலை நீட்டினார். சந்திப் படலத்தில் பதினெட்டாஞ் செய்யுளைக் காட்டினார். சந்தேகத்தை ஓட்டினார். வாதிட்ட புலவரும் மற்றைப் புலவர்களும் அச்சமும் அதிசயமும் அடைந்தார்கள். சோழ நாட்டுப் புலவர் வீரசோழியத்தைக் கச்சியப்பர் கரத்தில் கொடுத்து மறைந்தருளினார். இது முருகன் செய்த திருவிளையாடல் என்று கருதி உள்ளம் உருக கண்ணீர் பெருக அழுது கச்சியப்பருடைய திருவடியில் வீழ்ந்து தொழுது துதி செய்தார்கள்.

தடை செய்த புலவர் கச்சியப்பரைப் பல முறை பணிந்து: ''முருகன் அருள் பெற்ற முனிவரரே! தங்கள் பெருமை தெரியாது அரங்கேற்றத்தைத் தடுத்துக் குரங்காட்டமாடினேன். சிறியேன் செய்த பெரும் பிழையைப் பொறுத்து அருள வேண்டும்'' என்று பலமுறை வேண்டிக் கொண்டார். கச்சியப்பர் அவரை இருகரங்களாலும் எடுத்து மார்புறத் தழுவி ''ஐயரே'' தாங்கள் தடை செய்ததனாலன்றோ முருகன் திருவருளை எல்லோரும் உணர முடிந்தது. எல்லாம் ஈசன் செயல். இறைவனை இங்கு அழைத்து எல்லோரும் இறைவனைக் கண்டு களிக்குமாறு செய்த தங்கள் செய்கைக்கு யாம் செய்யும்கைம் மாறு யாதுளது?'' என்று பாராட்டியருளினார்.

சபையிலுள்ள அனைவரும் கச்சியப்பரை வணங்கி இனி புராணத்தை அரங்கேற்றலாம் என்றார்கள். நாள்தோறும் புராண அரங்கேற்றம் நடைபெற்றது. தொண்டை நாட்டு அறுபத்துநான்கு கோட்டத்து வேளாளப் பெருமக்கள், வந்தவர்கள் எல்லாருக்கும் சோறூட்டினார்கள். ஆடைகள் வழங்கினார்கள். ஆயிரக் கணக்கான அன்பர்கள் புராணங் கேட்டுப் புனிதமடைந்தார்கள். கச்சியப்ப சிவாசாரியர் தினந்தோறும் புராணம் வாசித்துப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விளக்கவுரை, பதசாரங்கள், புராணத்தின் நுண்பொருள்கள் இவைகளைக் கூறிக் கற்கண்டு மலையில் தேன்மாரி பொழிவது போல் விரிவுரை செய்தார். ஓராண்டில் அரங்கேற்றம் முற்றுப் பெற்றது.

கச்சியப்பர் உச்சியப்பராம் செவ்வேளைப் போற்றிப் புராணத் திருமுறையை அர்ச்சனை செய்து வணங்கினார். அங்குக் குழுமிய அன்பர்கள் கந்த புராணத்தையும், கச்சியப்பரையும் தந்தச் சிவிகையில் வைத்து வீதிகள் தோறும் திருவுலா வரச் செய்தார்கள். சிலர் வெண் சாமரம் வீசினார்கள். சிலர் குடை பிடித்தார்கள். சிலர் கொடி எடுத்தார்கள். சிலர் ''கச்சியப்பர் வாழ்க'' என்று திசைகள் செவிடுபட முழக்கினார்கள். திருவுலா முடிந்ததும் கந்த புராணத்தை முருகன் திருமுன் வைத்து வணங்கினார்கள். கச்சியப்பருடைய புகழ் திசையெட்டும் பரவியது. புராணத்தின் பெருமையைப் புலவர்கள் பாராட்டிப் புகழ்ந்தார்கள். சிலர் சொல்லழகை நயந்தார்கள். சிலர் பொருளழகை வியந்தார்கள். பலர் பிரதிகள் செய்து எங்கும் நூலைப் பரப்பினார்கள்.

இந்த முதல்வன் புராணத்தை நித்தியம் ஓதியே மெய்யன்பர்கள் எல்லா நலங்களையும் பெறுவார் என்பது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

உச்சித மாஞ்சிவ வேதியன் காளத்தி ஒங்குமைந்தன்
கச்சியப் பன்செய்த கந்த புராணக் கலைக்கடலின்
மெச்சிய கல்வி மதியும்வெண் டாமரை மேவுமின்னும்
இச்செவி நாவினுக் கின்பாம் அமுதும் எழுந்தனவே.

அந்தப் புரமும் அறுநான்கு கோட்டகத் தாருமொன்றாய்க்
கந்தப் புராணம் பதினு யிரஞ்சொன்ன கச்சியப்பர்
தந்தப்பல் லக்குச் சிவிகையுந் தாங்கியச் சந்நிதிக்கே
அந்தப் புராணம் அரங்கேற்றி னார்தொண்டை மண்டலமே.

* * *

# SAKTHI
# Sugars Limited

*MANUFACTURERS OF :*

**BEST QUALITY WHITE SUGAR**

AND

**SAKTHI HYBRID SORGHUM**

AND

**BAJRA SEEDS**

*Factory :*

SAKTHI NAGAR P.O.,
**Bhavani Taluk,**
ERODE, R. M. S.,

*Regd. Office :*

"GREEN LANDS"
**8/28, Race Course Road,**
COIMBATORE-641018.

# இறையுண்மையும் இற்றையறிவியலும்

பேராசிரியர்: ஞா. தேவநேயப்பாவாணர்

முன்னுரை :

கடவுள் உண்டு என்பாரும், இல்லை என்பாரும் தொன்றுதொட்டு உலகில் இருந்து வருகின்றனர். உண்டென்போரே இன்றும் பெரும்பாலாரேனும், இல்லையென்பார் தொகை வர வர வளர்ந்து வருகின்றது.

இறையுண்மைக்குச் சான்றுகள் :

கதிரவக் குடும்பத்தைச் சேர்ந்த கோள்கள் எல்லாம், இடையறாது ஓர் ஒழுங்காக இயங்கி வருகின்றன.

ஓர் ஊரில் ஊர்க் காவலோ அரசியலாட்சியோ சிறிது நேரம் இல்லாவிடில், கலகமுங் கொள்ளையும் கொலையும் நேர்கின்றன. உயிரற்ற நாளும் கோளும் பாவை யாட்டுப் போல் ஒழுங்காக ஆடிவரில், அவற்றை ஆட்டும் ஓர் ஆற்றல் இருத்தல் வேண்டும். அவ்வாற்றல் அறிவற்றதாயிருக்க முடியாது. அவ் வறிவே இறைவன்.

இவ்வுலகம் முழுவதற்கும், கதிரவன் பகல் விளக்காகவும், திங்கள் இரா விளக்காகவும் எண்ணிற்கும் எட்டாத காலத்திலிருந்து விளங்கி வருகின்றன.

ஒரு வீட்டில் விளக்கேற்றி வைப்பது அதிற் குடியிருக்கும் மக்கட்கே. மக்களில்லா வீட்டில் விளக்குத் தானகத் தோன்றி எரியாது. பலவுலகங்கட்கும் இரு சுடரையும் விளக்காக ஏற்படுத்தியவன் ஒருவன் இருத்தல் வேண்டும். வேலை செய்யாத தூக்க வேளையாகிய இராக் காலத்திற்கு, வெப்பமான நெருப்பொளி விளக்காகாது, குளிர்ந்த நிழலொளி விளக்காக இருப்பதும் கவனிக்கத் தக்கது.

பிற கோள்களைப் போற் சுற்றாது ஒரேயிடத்திலிருக்கும் கதிரவன், பத்துத் திசையும் ஒளி சமமாகப் பரவுமாறு உருண்டையாயிருப்பதும், அளவிடப் படாத நீள் பெருங்காலம் எரிந்து வரினும் அதன் எரியாவி குன்றி அணையாதிருப்பதும், இயற்கைக்கு மாறான இறும்பூதுச் செய்தியாதலால், அதை இயக்கி ஆளும் ஒரு பரம் பொருள் இருத்தல் வேண்டும்.

கோள்கள் ஒன்றோடொன்று முட்டாது தன்தன் பாதை வட்டத்தில் இயங்குமாறும், இவை சுழலுங்கால் அவற்றின் மேலுள்ள பொருள்கள் நீங்காவாறும், ஒவ்வொன்றையும் சூழ ஒரு கவர்ச்சி மண்டலம் அமைந்திருப்பதும், இயற்கைக்கு அப்பாற்பட்ட ஓர் ஆற்றலின் அமைப்பே.

காலமும் இடமும், தொடக்கமும் ஈறும் இல்லாதவையாதலால், இற்றை மக்களுலகம் தோன்று முன், எண்ணிக்கையற்ற உயிருலகங்கள் தோன்றி அழிந்திருத்தல்வேண்டும். இதைத் தான்,

''படைத்து விளையாடும் பண்பி னோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னில் வேறு தானென் றிலோனும்
அன்னோன் இறைவ னாகும்என் றுரைத்தனன்''

மணிமேகலைக்கு அறிவுறுத்திய சிவனியத் தருக்கி (சைவவாதி).

மாந்தன் தோன்றி ஐம்பதினாயிரம் ஆண்டாயிற்று என வைத்துக் கொள்ளினும், நூற்றுக் கணக்கான தலைமுறைகள் கழிந்திருத்தல் வேண்டும். பத்துக் கணக்காகத் தொடங்கிய மக்கட் டொகை, இன்று நூறு கோடிக் கணக்காகப் பெருகியுள்ளது. ஒவ்வொரு தலைமுறையிலும் எத்தனையராயினும், அத்தனையரும் அடையாளங் காணுமாறு வெவ்வேறு முகவடிவினுள்ளனர். கைவரையும் வேறுபட்டுள்ளது. இஃது அறிவு நிரம்பிய ஒரு பேராற்றலின் செயலேயாகும்.

''கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'' என்பது, இன்றும் பலர் வாழ்க்கையில் மெய்ப்பிக்கப்படுகின்றது.

உடல் நலம், மன நலம், மதி நலம் முதலிய நலங்கள் உள்ளாரும் இல்லாரும் படைக்கப்பட்டிருத்தல்.

பஞ்சம், கொள்ளை நோய், பெரு வெள்ளம், நில நடுக்கம் முதலிய இயற்கை அழிவு நிகழ்ச்சிகள் நேர்தல்.

### இறைவன் இல்லை என்பதற்குக் காட்டப்படும் சான்றுகள் :

கடவுள் புறக் கண்ணிற்குப் புலனுவதில்லை.

ஒன்றேடொன்று முரண்பட்ட பல்வேறு மதங்கள் உலகில் வழங்கி வருகின்றன.

நல்லோர் பலர், வறுமை, நோய், பிறரால் துன்பம் முதலியவற்ருல் வருந்திக் குறுவாழ்க்கையராய்ச் சாக, தீயோர் பலர் எல்லாவகையிலும் இன்புற்று நீடு வாழ்கின்றனர்.

பல அஃறிணை உயிரினங்கள் பிறவற்றைக் கொன்று தின்பனவாகவே படைக்கப்பட்டுள்ளன.

சிலர் எத்துணை உருக்கமாய் இறைவனை வேண்டினும், தாம் விரும்பியதைப் பெறுவது இல்லை.

இங்ஙனம், கடவுள் உண்டென்பதற்கும் இல்லை என்பதற்கும் காட்டப்படும் சான்றுகளுள் உண்டு என்பதற்குரியவையே மிகுந்தும் வலிமையுள்ளனவாகவும் இருக்கின்றன. காட்சியளவை போன்றே கருத்தளவையும் உண்மை யறியும் வழியாகும்.

கடவுள் எங்கும் நிறைந்த ஆவி வடிவில் இருப்பதால், அவரை ஒருவனும் புறக்கண்ணுற் காண முடியாது. முரண்பட்ட மதங்கள் மாந்தர் படைப்பு. நல்லோர்க்கு மறுமையில் நல்வாழ்விருக்கலாம். பல் பிறவி நம்பிக்கையாளர், நல்லோர் துன்பத்தைப் பழவினைப் பயன் என்பர்.

மாந்தன் மதியாற்றல் மட்டிட்டதாதலின், இறைவன் ஆட்சியிலுள்ள எல்லாவற்றையும் அறிய முடியாது.

''ஆழ வமுக்கி முகக்கினும் ஆழ்கடலில்
நாழி முகவாது நானாழி''

—மூதுரை.

நல்லோர்க்கு நேரும் தீங்குகட்கு, அவர் பழம் பிறப்பிற் செய்த தீவினைகளைக் கரணியமாகக் காட்டுவர் கொண்முடிபாளர்.

எங்ஙனம் இருப்பினும், இரு சாராரும் தத்தம் கொள்கையை எதிர்க் கொள்கையார் நம்புமாறு நாட்ட முடியாதிருப்பதால், கருத்துவேறுபாட்டிற்கிடந்தந்து, ஒரு சாராரை ஒரு சாரார் பழிக்காதும் பகைக்காதும் இருப்பதே உண்மையான பகுத்தறிவாம்.

மேலும் கடவுள் உண்மையாக இல்லை, எனின், நம்பாதவனுக்குக் கேடில்லை. ஒருகால், உள்ளாரெனின் அவனுக்குக் கேடுண்டாம். ஆதலால், நம்பா மதத்தினரும் நம்பு மதத்தைக் கடைப்பிடிப்பதே சாலச் சிறந்ததாம்.

### மதத்தை அழிக்க முடியுமா ?

கடவுள் நம்பிக்கையில்லாத தற்பெருமை வேந்தரும், நெறி தப்பிய அறிவியல் ஆராய்ச்சியாளரும், பொதுவுடைமைக்கொள்கையினரும், கடவுட் கொள்கையை ஒழிக்கத் தம்மால் இயன்றவரை முயன்று வந்திருக்கின்றனர். மதவியல் முற்றும் மனத்தைப் பொறுத்ததாதலின், அதை எவரும் அழிக்க இயலாது. சாக்கிய நாயனர் பகைவர் போன்று சிவப்படிமையைக் கல்லாலடித்தே, சிவனடியாராயினர் எனின், வேறு என்ன சொல்லவிருக்கின்றது.

மேலும், பொதுவுடைமை இறைவனுக் கேற்றதே. மக்களெல்லார்க்கும் உணவெனின், தந்தை மகிழத்தானே செய்வான்? அங்ஙனமே பரமத் தந்தையும்.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக வுலகியற்றி யான்''

என்றார் திருவள்ளுவர். கிறித்தவர் எதிர்நோக்கும் ஆயிரவாண்டு அரசாட்சியும் பொதுவுடைமையின் வகையில்தான் இயலும்.

கனவு காணது உறங்கும் நேரம் தவிர, மற்றெல்லா நேரத்திலும்—இருப்பினும் நடப்பினும் வேலை செய்யினும் உரையாடினும் உண்ணினும், இறைவனை நினைக்கவும் வழுத்தவும் வேண்டவும் இயலுமாதலின், மனம் உள்ளவரை மதத்தை ஒருவராலும் அழிக்க முடியாதென அறிக.

### நம்பா மதமும் ஒரு மதமே :

கடவுளும் மறுமையும் இல்லையெனும் கொள்கையும் ஒரு மதமாதலால், மதத்தை ஒழிக்க வேண்டுமென்பது, செருக்கையடக்க வேண்டும் என்றே பொருள் படுவதாகும். உள் மதம் (ஆஸ்திகம்) இல்மதம் (நாஸ்திகம்) என்னும் வழக்கையும் நோக்குக.

### இற்றை அறிவியற் போக்கு :

இறைவன் இன்றி எல்லாம் இயற்கையாகத் தோன்றியதென்பதையே, அறிவியற் பொது அடிப்படையாக இக்காலத்துப் புதுப் புனைவாராய்ச்சியாளர் பலர் கொண்டுள்ளனர். தார்வின் (Darwin) கொள்பும் (Theory) இதற்குத் துணையெனக் கருதுகின்றனர். ஆயின் தார்வினே, தம் இறுதிக் காலத்தில், தம் இளமைக் காலக் கொள்பு பற்றி வருந்தினதாகத் தெரி

கின்றது. தாழ்ந்த இனத்தினின்று உயர்ந்த இனம் படிமுறையாகத் தோன்றிற்று என வைத்துக் கொள்ளினும், அடிப்படை உயிரியான ஒற்றைப் புரையன் ( Unicellular being ) எங்ஙனம் தானே தோன்றும்? சடத்தினின்று சித்துத் தோன்றுமோ? தோன்றாதே! ஆதலால், திரிபாக்கக் கொள்பு (Evolution Theory) தவறென்றே கொள்ள வேண்டியுள்ளது. இனி, கதிரவனினின்று ஞாலம் வீழ்ந்ததெனின், கதிரவன் எதினின்று வீழ்ந்தது? இக்கொள்பாளர் கணக்கற்ற கதிரவக் குடும்பங்கள் பெருவிசும்பில் (Grand Universe) உள்ளதை அறிந்தாரா? அறிவியல் ஆராய்ச்சியாளர் இயற்கையிலுள்ள, இரும்பூதுகளைக் கண்டு இறைவனின் பெருமையை உணர்ந்து வியப்பதற்கு மாறாக, திறவுகோல் பெற்ற வேலைக்காரன் திருடனாக மாறிவிடுவது போல், தனக்கு நுண்மதி அளித்த இறைவனையே இல்லையென மறுப்பது, விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழுவது போன்றதன்றோ?

''மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே''

காணப்பட்ட பொருள்களைப் பற்றியே கருத்து வேறுபாடிருக்கும்போது, காணப்படாத கடவுளையும் மறுமையையும் பற்றிக் கருத்து வேறுபாட்டிற்கு மிகுந்த இடமிருப்பதால், கடவுளை நம்புகிறவரும் நம்பாதவரும் ஒருவரையொருவர் குறை கூறுதும் வெறுக்காதும், உயர்திணைக்குரிய உடன்பிறப்பன்பு பூண்டொழுகல் வேண்டும்.

கடவுள் ஒருவரே யாதலால், கடவுள் மதத்தாரும் பல்வேறு கொள்கை கொண்டிருப்பினும், பொது வாழ்வில் ஒரு தந்தை மக்கள் போல் ஒன்றுபடல் வேண்டும்.

''எண்ணிற்கும் எட்டா இடம்காலம் தேங்காவி
கண்ணிற்கோ எட்டும் கனப்பொருளாம்?— வண்ணிக்கக்
கூடாமல் அன்றோ குறித்தார் கடவுள்என ?
நாடாமல் உண்டுஎன நம்பு''



சேலம் கோட்டை அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோயிலுக்கு விசயம் செய்த ஆணையர் திரு. K. S. நரசிம்மன், B.A.,B.L., I.A.S. அவர்களை அறங்காவலர் குழுத்தலைவர் திரு. P. கோவிந்தசாமி, M.C. அவர்கள் மாலை அணிவித்து வரவேற்றார்.

# திருமந்திரம்

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

சைவத் திருமுறை பன்னிரண்டனுள் ஒன்றாய திருமந்திரமே, தமிழில் விளங்கும் சிவாகமம். அதனைத் திருமந்திரமாலை என்பது தொல் வழக்கே. அம்மாலையில் உள்ள மலர், சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்குமே. அவற்றுள் ஞானமே முதன்மையுள்ளது. இவ்வுண்மையைச் சேக்கிழார் பெருமான், தில்லை வாழ் அந்தணர் உயர்வை உணர்த்துங்கால், ''ஞானமே முதலா நான்கும் நவையறத் தெரிந்து மிக்கார்'' என்றும், ''ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந்திரமாலை'' என்றும் அருளியதால் அறியலாம். அறிவோர் திருமந்திரமாலையிலே அந்நான்கு மலரையே காண்டல் வேண்டும். ஒவ்வொரு மலருளும் பற்பல இதழுள்ளமை போல இம்மலருளும் பற்பல பொருள் உள்ளன. பல்லாயிரம் பாடலில் பல்லாயிரம் கருத்துக்கள் உள்ளன. பிற காண முயல்வோர் எங்கு எதைக் காணக் கடவர் ? அங்கு அதைக் காணாது கடன்மை வழுவியவராவர்.

திருமந்திர மாலையைப் பெற்று அதன் மலர் நான்கையும் உற்று நோக்கி (மூக்கால் முகராது) உணர்வால் நுகர்ந்து என்ன பயன் அடைதல் கூடும்? இவ்வினாவிற்கு விடை அருண்மொழித்தேவரே இறுத்தருளினர். அஃது ''ஊனுடம்பிற் பிறவி விடந்தீர்ந்துலகத் தோருய்ய ஞானமுதல் நான்கும் மலர் நற்றிருமந்திரமாலை'' என்பது. சில மலரை முகர்ந்தால் சில நஞ்சு தீர்வது இயல்பு. திருமந்திர மாலையின் மலர் முகர்வு, ஊனுடம்பிற் பிறவி விடம் தீர்ப்பது. உலகத்தோர் என்பது தமிழகத்தாரை மட்டும் குறிப்பதாகாது. சிவலோகம் அல்லாத உலகம் எல்லாவற்றிலும் வாழ்வாரைக் குறிப்பதே. திருமந்திரமாலையைத் தமிழ்ச் சொல்லாய நாராற் கட்டியிருப்பினும், அம்மாலையிலுள்ள மலரும் மணமும் எம்மொழிக்கும் பொது, எவரும் மொழிபெயர்த்துப் பயனுறலாம். அம்மலர் நான்கும் முறையே உடற்பற்று, மொழிப்பற்று என்னும் இருவகைப் புறப்பற்றையும், உட்கருவிப் (அந்தக் கரணம்) பற்று என்னும் அகப்பற்றையும், அறியாமை என்னும் உயிர்ப் பற்றையும் நீக்கும். சரியையால் உடற்பற்று ஒழியும். கிரியையால் பொறிப் (இந்திரிய) பற்றுப் போகும். யோகத்தால் அந்தக் கரணப் பற்று அழியும். ஞானத்தால் அஞ்ஞானம் அகலும். உயிர் எல்லாவற்றையும் கழன்று அடையும் பெருநிலையைக் 'கழல்' என்று குறித்த முன்னோர் கருத்தை உணரவல்லார் யார்? ஒழிவில் ஒடுக்கம், துகளறுபோதம் முதலிய ஞான நூற் பயிற்சி உடையார்க்கே 'கழல்' என்றதன் பெயர்க் காரணம் புலப்படும். ''எல்லாங் கழற்றி இறைவனுடன் கலக்க வல்லவர்கள் சொன்ன வழி'' (துகளறுபோதம்-3) ''ஈசனறிவாகி எல்லாம் இன்று கழன் றொழிந்தாய் பாசம் மிகவைத்து அதனிற் பற்றாதே'' (51), ''கருவி கரணம் கழன்றும் கழலா இருளின் பெருமை இது'' (27), ''எல்லாம் கழன்ற இடமே சிவம்'' (59), ''கருவாய்ப் பிறப்பைக் கழற்றினரோ'' (87) என்பவற்றால் 'கழல்' என்னும் பெயரது காரணம் புலப்படாதிராது உண்மைப் புலவர்க்கு. பிறப்பும், கழலா இருளும், கருவி கரணங்களும், பிறவும் ஆகிய எல்லாம் கழன்றால் அன்றிப் பேரின்பம் எய்தாது உயிர்க்கு. திருவுந்தியாரில்

''எட்டுக் கொண்டார்தமைத் தொட்டுக்கொண்டே நின்றார்
விட்டார் உலகம் என்றுந்தீ பற
வீடேவீடாகு மென்றுந்திபற''

என்றதனுரையில் வீடேவீடு (கழல்) என்றதற்குத் திருப்பாதமே புகலிடம் என்றுரைத் தருளினர். முதலாவது வீடு திருப்பாதம் என்றும், அடுத்தது புகலிடம் என்றும் பொருள் பயந்தவாறறிக. அறியவே 'கழல்', 'வீடு' இரண்டும் ஒரு பொருளனவாதல் தெளிவுறும். யான் எனது என்னும் இரு செருக்கும் அறுவதே அடி என்னும் உண்மையை இங்கு நினைதல் வேண்டும். அவ்வடி உயிரில் அவ்விரு செருக்கும் அறப் பரைநின்ற நிலையாகும். ''பரை உயிரில் யான் எனது என்று அறநின்றது அடியாம்'' (உண்மைநெறி), ''ஏது அடி என்றிடில் அடி யான் எனது அறநின்றது தான்'' (ஞான பூசாவிதி). அது (அடி) பெற எல்லாம் கழல வேண்டும். பொறிவாயில் ஐந்தினையும் ''கை கழலக் கைகழலும் நாணாப் பிறப்பிறப்பின் நவை'' (துகளறுபோதம் 12) என்றவாறே பேரின்ப நிலைக்குத் தடையாயுள்ள எல்லாவற்றையும் கழல்வதே கழல், அடி, வீடு என்ற பெயர்களால் குறிக்கப்படும். அடியடைந்தார், வீடடைந்தார், கழலடைந்தார் என்றால் உருவத்தின் அடியில் உள்ள ''பாதம்'' எனப் பெயர் கொண்ட உறுப்பை அடைந்தார் எனக் கோடல் ஞானத்தார்க்குரியதன்று, ஏனையோர்க்கு உரியதே. உள்ளும் புறமும் ஒரு தன்மைக் காட்சியர் ஒரு நீர்மையர். அவர்க்கு அது தக்கதன்று. அடி என்றது உருவ வழிபாட்டிற்கு மட்டும் அது தகும். ஞானியர்க்கு 'யான்' 'எனது' என்னும் இரு செருக்கும் அற்ற அடியே, கழலே, வீடே, அடி என்ற கருத்தில் இயன்ற 'தாளே' மேற்கொள்ள நிற்பது. எல்லாம் வல்ல மெய்ப்பொருள்வேறு அக்கழல்வேறு

அன்று. தாளே மெய்ப்பொருள்,மெய்ப்பொருளேதாள். விடுவதால் வீடு, பெறுவதால் பேறு, எனப்பெயர் எய்தும். கெடுவதால்கேடு, தொடுவதால் தோடு, படுவதால் பாடு, அடுவதால் ஆடு என்பனவும், அன்ன பிற சொற்களும் தமிழ் மரபொட்டி யுளவாவன.

சிவஞானபோதத்து உரையில் திருவடியைக் குறிக்குமிடத்திலே, ''திருவடியாகிய சிவாநந்தம் (மாபாடியம் சூ. 10, அதி. 1 ஏதுவின் உரை) ''அரனடியாகிய அச்சு'' ''திருவடியாகிய சிவாநந்தாநுபூதி'' என்பவற்றை உற்றுணர்தல் உணர்வோர் கடனாகும். விடுதலால் உண்டாய வீடும் (கழலும், அடியும், தாளும், அச்சும்), பெறுதலால் எய்திய பேறும் (சிவபோகமும், சிவாநந்தமும்) முறையே வீடும் பேறும் எனப்படும். பாசவீடு, சிவப்பேறு எனச் சிறப்பிற் சைவம் கொண்டுரைக்கும். ''வீடு கதி பெறுவரே'' என்றது திருஞான சம்பந்தர் திருமொழி. அவ் வீடுபேறு உயிர் மும்மலமும் நீங்கிச் சிவப்பேறெய்தியக்கால், அச்சிவாநுபவம் ஒன்றற்கே உரியதாய் அதை மட்டும் அநுபவிக்கும். அதனால் அதற்கு அது அநுபூதியாகும். சிவாநந்தாநுபூதியே முடிந்த முடிபாய தனிப்பெரும் பொருள். அதனை மாணிக்கவாசகர் ''உம்பர்கட் கரசே'' எனத் தொடங்கும் திருவாசகத்திலே ''சீருடைக் கழலே'' என அழைக்கிறார். இத்துணையும் எழுதியது எது கருதி எனின், ''திருமந்திர மாலை'' யின் தொடக்கமே பிழைபட்டதாக வெளியிட்டு வரப்பெறுவதை உணர்த்துதல் கருதியே. ''திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்குன் சீருடைக் கழல்கள்என்றெண்ணி'' என்ற திருப்பாட்டடியில், பாதத்தைக் குறிப்பதாகவும், அத் திருவாசகத்தில் பாதத்தைக் குறிப்பது பொருந்தாததாகவும் கொண்டு, திருவாசகத்தைத் திருத்தியது உண்மைச் சைவப் பற்றுடையோர் எல்லாரையும் வருத்தியது. எவரும் செய்யத் துணியாதது அத் திருத்தம். திருவுந்தியார் உரையில் (43) ''காயத்துள் மெய்ஞ்ஞானக்கள்'' என்றதற்குத் 'தேகத்து நிற்கிற தேகியான சிவனுடைய சத்திய ஞான மான திருவடித் தாமரையில் உண்டான பரமாநந்தத் தேன் ஆகிய மது' என்றுரைத்தருளிய உண்மையையும் அந்நூல் முடிவில் ''உண்மை என்னும் திருவடி'' என்றதையும் அறிவார் சிவ பரஞ்சுடரை மெய்யுணர்வே, உண்மையே என்று அழைப்பது பொருட்டாகக் கழலே என அழைப்பது எவ்வாற்றானும் குற்றம் ஆகாது. 'ஆனந்தமா (க்) கடலே' எனின் பொருந்தும். 'சீருடைக் கடலே' என்றால், என்ன சீர் உடையதாகக் கடலை அங்குக் குறித்ததாகும்? 'அடியே' என்று திருமுறையில் அழைப்பதை அறிதல் வேண்டும். ''அடியேறு கழலான்'' என்பதும், அதுபோன்ற பிறவும் உருவ வழிபாட்டைக் குறித்தெழுந்தனவே. வீரர் தம் வலக்காலில் கட்டும் ஒரு படையைக் கழல் என்பர். இவற்றையெல்லாம் இங்கு மறுக்கவில்லை. ''கண் பேறே காணக் கழல்'' என்றதன் உரையில் வெற்றிப்பாடு என்றது அருணந்தி தேவநாயனர் திருவுள்ளத்திற்கு வேறானது. புறநானூற்றின் தொடர்க்குப் பொருந்துவதாகும்.

சிவஞானபோதத்திலே ''அரன்கழல் செலும்'' என்ற தொடர்க்கு உண்மைப் பொருள் இக் கட்டுரையில் குறித்ததே ஆகும். 'அடியார்' 'அடிமை' என்பனவும், அடி என்பதன் அடியாகத் தோன்றிய பெயரே. பாதத்தார், பாதத்தின் தன்மை என்று கொள்ளின் ''உண்மை என்னும் திருவடி'', ''திருவடியாகிய சிவாநந்தாநுபூதி'' என்னுமிடத்தில், பாதம் (கால்) எனக் கொள்ளல் இயலுமோ? தாள்தலை (தாடலை), கால்தலை (காறலை) எனத் தமிழில் புணரும் தொடர் உவமம் அடிமுடியைத் தானே உணர்த்தும்? அங்கு இப்பொருள் இயையுமோ? இப்படி வினா எழலாம். இவ்வினாவிற்கு நெடுங் காலத்திற்குமுன் விடையிறுத்தருளினர் திருஞான சம்பந்தக் கண்ணுடைய வள்ளலார். சிவாநந்த மாலை (55—60) பார்க்க.

''அஞ்சு விரலாய்க் குதியாய் அகம்புறமாய்
விஞ்சுநல மாய்ச்சிவந்து மெல்லியரா-தெஞ்சா
துலைமீது வெண்ணெய்போல் உள்ளுருக்கும் என்றன்
தலைமீது வைத்தசிவன் தாள்'' (55)

''உச்சியாய் மென்றசையாய் ஓடாகித் தோலாய்
நாய்
இச்சியா வெண்டலையாய் ஈர்மயிர்பேன்-மொய்ச்
சிரா
வாள்வைத்த கண்ணி மணவாளன் மன்றினடத்
தாள்வைத்த என்றன் றலை'' (56)

இவ்விரு திருவெண்பாவும் சைவசித்தாந்த சமாசப் பதிப்பாக வெளிவந்த சிவப்பிரகாசம் சிந்தனையுரையில், முதலில் மேற்கொள்ளப்பட்டமையும் சிறிது பாடபேதம் கொண்டிருக்கின்றமையும் ஆண்டுக் காண்க. அடி நடு முடி என்னும் இயற்பெயர், உடலின் அடி நடு முடிக்கு ஆகு பெயராகும். திருவடி என்புழி இயற்பெயர். ஏனையவற்றைக் குறிக்கின்றுழி ஆகு பெயர். இருதாள் என்பதும் தொல் மரபேயாயினும், 'யான்' 'எனது' என்னும் இரு செருக்கும் அற்றமை நோக்கி, இரண்டு திருவடி என்றனர். ஞானசத்தி, கிரியாசத்தி என்னும் இரண்டடி என்பதும் சாத்திர மரபே. உண்மை நெறியிலே ''யான் எனதென்றற நின்றதடியாம்'' என அடியையும், ''பார்ப்பிடம் எங்கும் சிவமாய்த் தோன்றலது முகமாம்'' என முகத்தையும், ''உரையிறந்த சுகமதுவேமுடியாகும்'' என முடியையும், உமாபதி தேவநாயனர் உண்மைநெறியில் உபதேசித்தருளியது உணர்க.

இதுகாறும் கூறியவற்றால் திருவடியே கழல், அச்சு, தாள் எனப்படும் உண்மையும், அதுவே சிவாநுபவமும், சிவாநந்தாநுபூதியும் ஆம். எல்லாம் ஒன்றேயாம், பலவாகா. அது தான் மெய்ப்பொருள் என்று தெரிந்து கொள்ளலாம். இனித் திருமந்திர மாலையைச் சூடிச் சிவாநந்தம் எய்துவோம். திருமூலதேவநாயனர் வரலாறு நூலினுள் இருக்கின்றது. அதைப் பின் உணரலாம். அந்நாயனர் இத்திருமுறைத் தொடக்கத்திலே எண்ணியல் அமையப் பாடியருளியது தலைத்திரு மந்திரம்.

''ஒன்றவன் ருளே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன்தான் இருந்தான் உணர்ந் தெட்டே

என்பது தலைச்செய்யுள். ''ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை'' எனத் தொடங்கும் பாடல், திருமந்திரத்தின் முதற் செய்யுள் ஆகாது. சேக்கிழார் பிரானார் ''ஒன்றவன் தாள் என எடுத்து' என்றருளியதால் ஈதே கடவுள் வாழ்த்தாகத் திருமுறை தொடங்கிற்று என்றுணர்க. பெரிய புராணத்திலும் 'ஒன்றவன்றான்' என்றிருப்பது பிழையே. ''ஒன்றவன்றாள்'' என்றே இருத்தற்குரியது அது. திருமந்திரம் எத்தனையோ பதிப்பாக வெளி வந்துள்ளது. அத்தனையுள்ளும் ''தானே'' என்றுதான் உளது. ''தாள்'' என்று இல்லையே? ஏன் நீர் மட்டும் 'தாள்' என வேண்டும்? எனலாம். 'அவன்தான் ஒன்று' என்று தமிழ்த்தொடர் அமையுமோ? 'அவன் தாள் ஒன்று' என்று தானே இருத்தல் வேண்டும் ''அவன்தான் ஒருவன்'' என இல்லையே? என்று இவ்வினு எதிர் வினுவையும் பொருத்தமாகக் கொள்வர் அறிவுடைமையால். 'அவன் தாள் ஒன்று' என்பதே திருமூல நாயனுர் திருவுள்ளத்தில் கொண்டது. இதை நாமாகத் தோற்றிக் கொண்டிலோம். ஷி சமாசப் பதிப்பு (1.11. (1.11.1933) இப்பாடத்தினை அடிக் குறிப்பாகக் காட்டியுள்ளது. திருமந்திரம் முழுவதும் அடிக் குறிப்பில் உண்மைப் பாடமே பெரிதும் உண்டு. இனி அவற்றை அடிப்படையாகக் கொண்டு இயன்ற அளவு முயன்று பொருள் விளக்கம் காணலாம். இத் தலைச் செய்யுட் பொருளையும் அடுத்து வெளிவரும் கட்டுரையில் அறியலாம்.



திருச்செந்தூர் அருள்திரு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிற் சார்பில், ஐந்து லட்ச ரூபாய்ச் செலவில் கட்டப்பட இருக்கும் மகப்பேறு, கண் மருத்துவமனைக் கால்கோள் விழாவில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உரை நிகழ்த்துதல் (19-10-1974).

# தூயநல்லன்பர் துக்காராம்

கவியோகி சுத்தானந்த பாரதியார்

**விசுவாம்பரர் கோயில் கட்டினுர் :**

ஆயிரக்கணக்கான அன்பர் ''ஞானேபா துகோபா'' என்று ஆர்வக் குரலெடுத்துச் செல்லுகின்றனர். ஊண் உறக்கமில்லாமல் இந்திராயணி ஆற்றங்கரையில் வட்டஞ் சுற்றிக் கை கொட்டி யாடுகின்றனர்.

எங்கும் கண்ணன்! எல்லாம் கண்ணன்
இங்கும் கண்ணன்—இதயக் கண்ணன்
நெஞ்சத் துடிப்பும் கண்ணன்
அஞ்சேல் என்னும் அன்புக் கண்ணன்!

ஹரி விட்டலா! ஜய ஹரி விட்டாலா . .என்று பாடுகிருர்கள். தேகு என்னும் அந்தச் சிற்றூரில் மராட்டிய தேசமே கூடிக் கும்மாளம் போடுகிறது. அங்கே ஒரு மாந்தோப்பில் விட்டோபா கோவில் உள்ளது. அதைக் கட்டினவர் விசுவாம்பரர் என்னும் அன்புமணி. அவர் ஏகாதசி தோறும் காலால் நடந்து பண்டரிபுரம் சென்று அங்கே விடோபாவை (கண்ணனை) உருக்கமாகத் தொழுது வருவதுண்டு. முதுமை எய்திக் கை கால் தளர்ந்தும் பண்டரிப் பயணத்தை விடவில்லை. ஒருநாள் பண்டரி நாதர் கனவில் வந்து ''மாந்தோப்பில் இன்ன இடத்தில் என் உருவம் உள்ளது. அதைத் தோண்டி எடுத்துக் கோயில் கட்டி, நாட்டி வணங்குக'' என்று அருளினுர். விசுவாம்பரர் அவ்வாறே செய்தார்.

இவர் மரபில் வந்த போளோபா சிறந்த விடல பக்தர். அவர் கனகாயி என்ற கற்பரசியை மணந்து நிறைமுறையான இல்லறங் காத்து வந்தார். போளோபா துக்காராம் வியாபாரி; சரக்கு விற்பனையில் வந்ததைப் பாத்தூண் மருவினுர். சாதுக்களுக்கு உணவளித்தலைக் குடும்பக் கடமையாகக் கொண்டார். குடும்பம் பெருத்தது; மூன்று புதல்வர் பிறந்தனர். சிவாஜி, துக்காராம், கனேபா. மூவரும் கண்ணன் அன்பிற் கனிந்தனர். துக்காராம் (1598—1650) எண்ணெழுத்துக் கற்றுத் தகப்பனுர் கடையில் அமர்ந்து சரக்கு விற்ருன். கண்ணன் காதல் அவனை உந்தியது. அடிக்கடி பண்டரிபுரம் சென்று விடோபாவை வணங்கி, பக்திப் பாடல்களில் ஈடுபட்டான். அண்ணன் சிவாஜி உலக வாழ்வை வெறுத்து, பைராகிகளுடன் காசிக்குச் சென்று துறவியானுன். அவன் மனைவியும் கவலைபற்றி இறந்து போனுள்.

**சரக்கு விற்ருர் :**

தந்தைக்கு வயதானது. கடையைத் துக்காராமே கவனித்தார். துக்காராமுக்குச் இளம் வயதிலேயே திருமணம் ஆனது ; முதல் மனைவி உருக்குமாயிதாள். இரண்டாவது மனைவி ஆவுலி. உலகியல்பு அறிந்தவள். துக்காராமின் பக்தி பரவசம் அவளுக்குப் பிடிக்கவில்லை. துக்காராம் எப்போதும் ''ஹரிவிடலே ஹரிஹரி கோவிந்த ராமகிருஷ்ண விடலே'' என்று உரக்கப் பாடுவதுண்டு; இரவும் பகலும் கண்ணனைப் பாடிப் பாடி மண்ணுலக வாழ்வை வெறுத்தார். அவரிடம் எருமை மாடு இருந்தது. அதன்மேல் கோணிப் பைகளைப் போட்டு அயலூர் சந்தைகளில் மிளகாய், உப்பு, சர்க்கரை, அரிசி, பருப்பு முதலிய சரக்குகளை வாங்கி வந்து விற்றுப் பிழைத்தார். அடியார் சரக்கு வணிகருடன் இரவில் அயலூருக்குச் செல்லும் போது துக்காராம் உரக்கப் பாடுவார். அவரை அறியாமல் பக்திப் பாடல்கள் உள்ளே எழுந்தன.

ஆத்மாராமா ஆனந்தரமணு
அச்சுதா கேசவா ஹரிநாராயணு!

என்று பாடும்போது மற்ற வணிகர் ''பைத்தியமே, ஏன் கூப்பாடு போடுகிருய்... பிழைக்கத் தெரியாத பித்தனே. உன்னை உதைப்போம், கூச்சலிடாதே'' என்று மிரட்டுவர், கிண்டல் செய்வர். துக்காராமைத் தனியே விட்டும் முன்னுல் விரைவர்.

**கடவுள் காத்தார் :**

ஒரு நள்ளிரவில் கும்மிருட்டில் தனியே சென்ற துக்காராமின் எருமை ஒரு பள்ளத்தில் விழுந்தது. கோணிப் பைகள் சரக்குடன் கவிழ்ந்தன. உதவிக்கு யாரும் இல்லை. அப்படியே அமர்ந்து,

உன்னைத் தவிர என்னைக்காப்பார்
உலகில் யாரையா
அன்னையும் அப்பனும் ஹரியும் நீயே
ஆபத்தில் உதவாயோ . . .

என்று பாடிக் கொண்டே கண்ணீர் விட்டார். மின்னல் தெறித்தது. மேகம் இடித்தது. மின்னல் வெளிச்சத்தில் கண்ணன் உருவம் தோன்றியது. பள்ளத்தில் விழுந்த எருமை திடீர் என்று மேலே வந்தது; சாய்ந்த சரக்கு மூட்டை எருமை மேல் ஏறியது. துக்காராம், ''தோன்ருத் துணையே தொழுதேன் உனையே'' என்று பாடிக் கொண்டே சந்தைக்குச் சென்ருர். மூட்டைகளில் இருந்த மிளகாயை விரித்தார். உலகின் வஞ்சம் கொஞ்சமும் அறியாத சாது, கேட்டவர் கேட்ட விலைக்கு விற்ருர். ஒரு தீயன் ஒரு படி மிளகாய் எடுத்துக் கொண்டு பிறகு பணந் தருவேன் எனச் சென்று மறைந்தான். சிலர் சரியான விலை தரவில்லை. கிடைத்ததைக்

கொண்டு துக்காராம் மீண்டார். படுநட்டம் நடுநட்டம்! மனைவி இடித்துக் காட்டினாள். ''விட்டோபா பைத்தியம் போனாலே உமது வியாபாரம் நடக்கும்'' என்று கடுமையாகப் பேசினாள், ஏசினாள்.

**கலிகாலம் :**

துக்காராமே கலிகாலக் கொடுமையைப் பாடினார்.

''கலிகாலம் என்று நின்
கருணையை மறந்தாயோ
கண்ணா கண்ணா—மணிவண்ணா (கலி)
வலிய இரணியனை—வஞ்சகக் கம்சனை
மமதைத் தசமுகனை—வதைத்த பரசூரனே
(கலி)
நாத்திகக் கிண்டலும் ஆத்திகச் சுரண்டலும்
நலங்கெடுப் போரும்—நரகக் கொடுந்துயரும்
தீர்த்திந்த வுலகினைக் காத்தலுன் கடனன்றோ
தினமணியே துக்கா மனமணியே சரண் (கலி)

என்று பாடிப்பாடி வானை நோக்கிக் கண்ணனைக் கூவினார்.

**மனைவியின் கண்டிப்பு :**

மனைவி ஆவுலி ஊர் சிரிக்கக் கண்டு, எப்படியாவது கணவனைத் திருத்த நினைத்தாள். கடை கடனில் மூழ்கியது; சரக்கு வணிகம் நடக்கவில்லை. வீட்டில் வறுமை. ஆவுலி தனது நகை நட்டுகளையெல்லாம்விற்று, உப்பும், வெல்லமும் மிளகாயும் வாங்கி, எருமைமேல் ஏற்றி ''அடுத்த ஊர்ச் சந்தையில் விற்று ஊதியத்தை அப்படியே கொண்டு வாரும்'' என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டாள். துக்காராம் சரக்கைப் போட்டுக் கொண்டு சந்தையில் விற்று நல்ல லாபத்துடனே திரும்பினார்.

ஆனால் வழியில் ஓர் ஏழை ''ஐயா கடன் கொடுத்தவன் என்னைச் சிறையிடப் போகிறான். என்னைக் காப்பாற்றும் ஐயா, விட்டலபக்தரே, என்னைக் கைவிடாதேயும்'' என்று கதறினான். துக்காராம் மனம் இளகியது. ''ஐயா உமக்கு எவ்வளவு கடன் உள்ளது'' என்று வினவினார். ஏழை ''இருநூற்று ஐம்பது ரூபா, ஐயா தாரும் மானத்தைக் காரும்'' என்றான்.

துக்காராம் தன் பையை அவிழ்த்து ரூ.250 தந்து உதவினார். அத்துடன் விட்டானா ஆள்! ''ஐயா எனக்குப் பெரிய குடும்பம்; சோறு தண்ணீரில்லை. வறுமையால் வாடுகிறோம்'' என்று கதறினான். ''கவலைப் படாதீர், இன்னும் கொஞ்சம் பணம் உள்ளது. அரிசி பருப்பு காய்கறி வாங்கிச் சமைத்து உண்ணும் என்று பையைக் காலி செய்தார். மிச்சம் ஹரிஹரி விட்டலேதான். கணவன் பெருத்த பணமூட்டை கொண்டு வருவான் என்று மனைவி எதிர்பார்த்து வாசலில் வந்து நின்றாள். ''ஹரிவிடலே! ஹரி ஹரிவிடலே'' என்று கணவன் பாடிவந்தான். மனைவி ''என்ன லாபம், என்ன கொண்டு வந்தீர்?'' என்று ஆவலாகக் கேட்டாள்.

ஆத்மலாபம் கொண்டுவந்தேன்
ஐயன் அருளை கொண்டு வந்தேன்

என்று பாடிக் காட்டவே, ''ஐயையோ, நான் தந்த பணம் என்னவானது? சரக்கு விற்றீரா? சும்மா அளந்து விட்டீரா?''

விற்றேன் சரக்கை
பெற்றேன் லாபம்
அற்றோர் மகிழ
அள்ளி விட்டேன்
புண்ணியமே லாபம்—ஹரி
பூரணன் அருள்லாபம்—ஹரி விடலே!

என்று ஆடிப்பாடி ஆவேசம் நடக்கவே, தெரு சிரித்தது; ஊர் கூடிக் கொக்கரித்தது. பைத்தியம் பைத்தியம் என்று ஊரார் தூற்றினர்.

**கழுதைமேல் ஊர்வலம் :**

மனைவி ஊழிக் காளியானாள். உறவினர் துக்காராமுக்கு வெங்காயமாலை போட்டுக் கழுதைமேல் ஏற்றி ஊர் சிரிக்கத் தெருத் தெருவாக நடத்தினர். துக்காராமோ,

நல்லது வந்தாலும் பொல்லது வந்தாலும்
நாராயணா ஹரி நாராயணா
அல்லது வந்தாலும் ஆவது வந்தாலும்
ஹரிஹரி விடலா உன்செயலே

என்று கழுதைமேல் அமர்ந்தும் பாடி வந்தார்.

''துன்பத்தைப் பொறுப்போம்—கோபத்தை
வெறுப்போம்
அன்பினை மறவோம்—ஹரி ஜபம் துறவோம்.

**வறுமை வறுமை :**

இந்தச் சமயம் நாட்டில் மழையில்லை; பயிர் உலர்ந்தது; கடும் பஞ்சத்தால் மக்கள் வாடி வருந்தினர். காசநோய் பிடித்த முதல் மனைவி ருக்மாபாயி பசி பசி என்று இறந்தாள். சுற்றிலும் வறுமைக் கொடுமை. பெற்றோர் இறந்தனர். வீடு இருண்டது. துக்காராம் தனியே ஒரு மலைக்குச் சென்று விட்டோபா தியானத்தில் ஆழ்ந்தார்.

**கட்டுவிட்டது :**

அப்போது தம்பி கனோபா வந்து ''அண்ணா வா வீட்டுக்கு'' என்று அழைத்தான். துக்காராம் வீட்டுக்கு வந்தார். குடும்பப் பத்திரம் சொத்து விபரம் எல்லாம் எடுத்தார். எல்லாம் இரண்டு பாகமாகப் பிரித்தார். ஒரு பாகம் தம்பிக்குத் தந்தார். தமக்குரிய மற்றொரு பாகத்தை இந்திராயணி வெள்ளத்தில் எறிந்தார். வீட்டைத் துறந்தார். மாந்தோப்புக்குள் சென்றார். விட்டோபா கோவிலுட் புகுந்தார். விட்டோபாவை நிலந்தோய விழுந்து வணங்கினார்.

**கோவில் திருப்பணி :**

விட்டது கட்டு—விடுதலை பெற்றேன்
விட்டோபா பக்தியே கற்றேன்

என்று மலைமேல் ஏறித் தியானத்தில் அமர்ந்தார். காடுகளில் தனியே கண்ணனைக் கூவித் திரிந்தார். ஊரில் ஏழையெளியவருக்குத் தொண்டு செய்தார். ஹரி நாம ஜபத்தாலும், கீர்த்தனை

யாலும் அவருக்கு அருட்சக்திகள் கூடின. தமது முன்னோர் எழுப்பிய விட்டோபா கோயில் சிதைவுற்றது; துக்காராம் அங்குமிங்கும் அலைந்து, நாம சங்கீர்த்தனம் செய்து, கட்டிடச் சாமான்களைப் பெற்றுத் தாமே செங்கல்லடுக்கிக் கோயிலைப் புதுப்பித்தார். கும்பாபிஷேகத்து அன்று அன்பர் துணையால் ஆயிரம் பேருக்கு உணவு தந்தார். வழிபாடு சிறப்பாக நடந்தது. துக்காராமர் அன்று ஆடிப்பாடி ஆண்டவன் அருளை மக்களுக்கு விளக்கினர்.

மனைவி ஆவுலி தன் கணவனைப் பித்தனுக்கிய கண்ணன் மேலே கடுஞ் சினம் கொண்டாள். பஞ்சகாலம்; இரண்டு குழந்தைகளுடன் வீட்டை நடத்த வேண்டும். கணவன் விட்டோபா பக்தியால் வீட்டை மறந்தான். காடு மலைகளில் பாடித் திரிந்தான். கவலை. கவலை.

**சோளக் காவல் :**

ஒரு நாள் துக்காராம் ஒரு சோளக் கொல்லையில் தியானித்திருந்தார். கொல்லைக்காரன், ''ஐயா, நீர் இந்தச் சோளக் கொல்லைக்குக் காவல் இரும். புட்கள் வந்தால் இதோ கௌவாங் கல் வீசும். உமக்கு விளைவில் பங்கு தருவோம். இந்தக் கட்டிலில் அமர்ந்து வயலைப் பார்த்திரும்'' என்று சென்றான். பறவைக் கூட்டம் வந்து பயிரைக் கொத்தியுண்டன. துக்காராம் ''நன்றாக உண்ணுங்கள்; உங்களிடமும் பாண்டுரங்கனே உயிர்க்கிறான்'' என்று பார்த்துக் கொண்டிருந்தார். வயல்காரன் வந்து பறவைகள் செய்த வேலையைப் பார்த்தான். துக்காராமைச் சினந்தான். கிராம அதிகாரியிடம் புகார் செய்தான். குடுமி பிடித்திழுத்து அதிகாரி முன்னே நிறுத்தினான். ஆனால் அறுவடையின்போது முன்னிலும் பதின்மடங்கு சோளம் குவிந்தது. எல்லாரும் வியந்து துக்காராமுக்கு ஒரு சாக்குச் சோளம் தந்தனர். அதை அப்படியே சோள ரொட்டியாக்கி மாலடியாருக்கு அமுதிட்டார் அன்பர்.

**ஆவுலி துயரம் :**

மனைவி ஆவுலி வாயாலே சலித்துக் கொண்டாலும், மனத்திலே கணவனிடம் அன்புவைத்து, அடிக்கடி சோறு கொண்டு போனாள். ஒரு நாள் மலைமேல் சோறு கொண்டு போனபோது, வெயில் தாங்கமுடியவில்லை. கால் சுட்டது. அதில் ஒரு முள் ஏறி இரத்தம் வந்தது. ''கடவுளே, இதுதானா உன் கருணை'' என்று நொந்தாள். திருவருளே அங்குத் தோன்றி, முள்ளை எடுத்துவிட்டு, மேலே இட்டுச் சென்று துக்காராம் உண்ணச் செய்து, தண்ணீரும் அளித்ததைக் கண்டு அம்மையாருக்கு ஆண்டவனிடம் நம்பிக்கை வந்தது.

நம்பினபேரை நம்பன்அருளே
நல்லது தந்து காக்குமே

என்று துக்காராம் பாடினார். அன்று முதல் வீட்டுக்கு வந்தே உணவு கொண்டார். பத்தினி மனம் குளிர்ந்தது; வசவும் குறைந்தது. மற்றொருநாள் மனைவி புடவையை ஓரிடம் வைத்து விட்டுக் குளித்துக் கொண்டிருந்தாள். அந்தச் சமயம் ஓர் ஏழைப் பெண் கந்தலுடுத்தி வந்து, ''ஐயா ஒரு புடவை தாருமே'' என்று இரந்தாள். துக்காராம் மனைவியின் ஒரே புடவையை அந்தப் பெண் எடுத்துச் செல்ல விடுத்தார். குளித்து வந்த மனைவி புடவை காணாமல் திகைத்தாள். துக்காராம் திரௌபதி மானம் காத்த கண்ணனை நினைத்தார். ஓர் அழகான பட்டுச் சேலை மனைவி மேல் விழுந்தது. விடலன் அருளை வியந்து சேலையை அணிந்து கணவனை வணங்கினாள் பத்தினி. இப்படி எத்தனையோ சோதனைகளோடு துக்காராம் விடோபாவை அடைக்கலம் புகுந்து இராமாயணம், பாகவதம், பகவத் கீதை முதலிய பதிநூல்களைப் படித்துச் சிந்தித்து அருளன்பே வாழ்வானார்.

**கனோபா சரண் புகுந்தான் :**

எனதியான் என்னும் ஆசையை யடக்கி
இருவிகற் பற்றவர் யாவர்
தனகன வாழ்வின் சாம்பலை யெண்ணிச்
சகவியல் பறிந்தவர் யாவர்
மனதினை வென்ற மாசிலார் யாவர்
மமதையை மாற்றினர் யாவர்
எனதிரு கரத்தால் அவரடி பற்றி
இறைஞ்ச லென் இன்ப மதாமே

என்று தம்பி கனோபா அண்ணலைச் சரண் புகுந்தான். நீலோபா என்ற அன்பன் துக்காராமைக் குருவாக ஏற்றுச் சரண் புகுந்தான். பல அன்பர் கூடினர்.

**அருள் இறங்கியது :**

*1619*-ல் ஆண்டவன் அருள் இறங்கியது. ''ராமகிருஷ்ண ஹரி'' என்ற மந்திரத்தை பாபாஜீ என்ற சாது உபதேசித்தார். இவர் ஞானேசரின் மாணவரான சச்சிதானந்த பாபாவின் வழி வந்தவர். இராமதேவர் துக்காராம் கனவில் வந்து முதுகில் தட்டிக் கொடுத்து, ''பாடு அபங்கம்—பக்தி நெறியை பரப்பு'' என்றார். துக்காராம் வாழ்வில் மறுமலர்ச்சி பொலிந்தது. நல்ல குரலும், இசை அறிவும் கொண்ட மாணவ மணிகள் துக்காராமுடன் அபங்கம் பாடி ஆடிப் பரவச பக்தி பரப்பினர்.

தேகு மக்கள் துக்காராம் இசை விருந்தை ஆர்வமுடன் அருந்தினர். சுற்றியுள்ள சிற்றூர்களிலெல்லாம் அபங்கங்கள் முழங்கின. சாதி மத பேதமில்லாமல் துக்காராம் எல்லாரையும் அரவணைத்து இறையன்பைப் புகட்டினர். அவர் பாடல்கள் எங்கும் பரவின. வயலில் உழுவோர், அரிசி தீட்டுவோர், மாவரைப்போர், ஏற்றம் இரைப்போர், பிச்சைக்காரர் எல்லோரும் துக்காராம் பாடலைப் பாடி மகிழ்ந்தனர். வீட்டுக்கு வீடு விட்டல் ஹரி பக்தி விளங்கியது. பேரும் புகழும் துக்காராமைத் தேடி வந்தன.

**பட்டின் பாழும் பொறாமை :**

ஆனால் புகழ் வரவரப் பொறாமையும் மறுபுறம் பொங்கிக் கொதித்தது. இராமேசபட்டர் என்ற பிராமணப் புலவன், படித்தவன்,

பாவலன். துக்காராம் அபங்கம் பரவப் பரவ அவனது வெறுப்பும் பொறாமையும் விடம்போல் எழுந்தன. துக்காராம் அபங்கம்போல் இவனும் பாடித் தன் பாட்டையே துக்காராம் அப்படி இப்படி மாற்றித் தனதெனப் பாடுவதாகக் குற்றம் பரப்பினான். அது பலிக்கவில்லை. பிறகு துக்காராம் வேத விரோதமாகப் பாடுகிறான் என்று குற்றம் சுமத்தினான். துக்காராம் பாட்டைக் கேட்பது பாபம் என்றும் பிதற்றித் திரிந்தான். சாதிப் பிராமணர்களைக் கூட்டிச் சள்ளை விளைத்தான். ''ஏ துக்கா நீ இனிப் பாடக் கூடாது'' என்றான். துக்காராம் ''ஐயா, நான் வாயைத் திறந்து பாடவில்லை. சரிதானே'' என்று மனந்திறந்து இறைவனைத் தன்னுள்ளே பாடிக் கொண்டார். ஆனால் அவர் பாடிய பாடல்களை எழுதிக் கொண்டு பலர் பாடினர்.

## ஆற்றில் போட்டார் :

இராமேச பட்டர் தமது கூட்டத்துடன் வந்து மற்றொரு சட்டம் போட்டார். ''துக்கா, நீ பாடிய பாட்டெல்லாம் சுருட்டி கல்லைக் கட்டி ஆற்றில் போட்டுவிட வேண்டும்'' என்றான். துக்காராம், ''ஹே விட்டல் ஹரி, என் ஆயுள் காவியங்களை இந்திராணி ஆற்றில் போட்டு விட்டால், அதன் பிறகு நான் ஏன் இருக்க வேண்டும்? ஆற்றங்கரையிலேயே பட்டினியிருந்து உயிர் விடுவேன்'' என்று சோற்றை வெறுத்து ஆற்றுப் பாட்டுடன் மனத்தில் ஹரி விடலே ஜபம் செய்து கொண்டிருந்தார், தூய நல்லன்பர் துக்காராம். அவர் மனைவி ஆவுலியும், மக்களும் பட்டினியிருந்தனர். பொது மக்கள் விட்டல் நாமத்துடன் துக்காராமின் அபங்கங்களைப் பாடினர். பொறாமைச் செருக்கு ஊர் வாயை அடக்க முடியவில்லை. துக்காராமின் மூச்சுத் திணறியது. பதின்மூன்று நாளானது. வியன்பெருங் காட்சி. இந்திராயணி அலைகள் அபங்கம் பாடின. துக்காராமின் அபங்க ஏடுகள், அலைகளில் ஆடிக் கொண்டே கரை சேர்ந்தன. அன்பர் ஆவலாக எடுத்துத் துக்காராம் திருவடியில் வைத்தனர். பட்டன் பொறாமை பட்டென வெடித்தது.

## பட்டு திருந்தினான் :

தன் பண்டிதப் புலமையெல்லாம் பெய்து பரம பக்தனை வைதான். பலரைத் தூண்டி விட்டான். ஒருவர் துக்காராம் மேல் கொதிக்கும் தண்ணீரை ஊற்றிப் புண்படுத்தச் செய்தான். இறுதியில் பட்டுக்கு மேலெல்லாம் அரிப்பெடுத்துப் புண்ணாகி எரிப்பெடுத்தது. ஆளந்தி சென்று கண்ணை மூடித் தியானத்தில் அமர்ந்தான். ஞானேசர் கனவில் வந்து பரம பக்தனை துக்காராமுக்கு நீ செய்த தீமையே இப்படி வந்தது. அவரிடம் சென்று காலில் விழுந்து மன்னிப்புக் கேள் என்றார். புத்தி வந்தது. பட்டு துக்காராம் காலைத் தொட்டுக் கும்பிட்டான். துக்காராம் ஹரிவிடலே என்று அவனை ஆசீர்வதித்தார். தோற் பிணி நீங்கியது. அந்தணன் அடியனாகி அன்பன் பாடல்களை இனிது பாடிப் பரப்பினான்.

## சிவாஜி வணங்கினான் :

துக்காராம் அபங்கங்களைச் சத்திரபதி சிவாஜி கேட்டு மகிழ்ந்தார். அவரைக் குருவாக அடைய விரும்பினார். ஆனால் முதலில் சோதனை செய்தார். தனது மந்திரியிடம் தங்கத் தட்டில் பொன்னணிகளும், மணி மாலைகளும் பட்டுப் பீதாம்பரங்களும் துக்காராமுக்கு அனுப்பினார். அப்போது துக்காராம் விட்டல தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அவர் மனைவி மந்திரியை வரவேற்றுச் சிவாஜியின் காணிக்கைகளைக் கண்டு உள்ளங் குளிர்ந்தாள். ''அம்மா, எல்லாம் சிவாஜி மகாராஜாவின் காணிக்கைகள், அவர் நமது துக்காராம் சுவாமிகளைக் காண வருவார். தாங்கள் இவற்றை அணிந்தால் மகிழ்வார்'' என்றார். ஆவுலி ஆவலாகப் பட்டுத்தி, நகைகளை அணிந்து கண்ணாடி பார்த்துத் தன் அழகை வியந்து கொண்டிருந்தபோது, துக்காராம் உள்ளே வந்தார். கண்டார். கவலை முகம் காட்டினார். ''நான் அழகாயில்லையா, ஏன் உம்மனா மூஞ்சியானீர், எல்லாம் சிவாஜி மகாராஜா காணிக்கை'' என்றாள். தட்டில் பவுன்கள் குவிந்திருந்தன. மந்திரி இவையெல்லாம் உமக்கே என்று தந்து வணங்கினார். துக்காராம் வாய் திறக்கவில்லை. கண் கலங்கினார். ''இவையெல்லாம் எனக்குத் தேவையில்லை.''

''விடல நாமம் ஒன்றே—என்
விலையில்லாத செல்வம்
வேந்தன் அளிக்கும் பொன்னும் மணியும்
வேண்டேன் இவையெல்லாம் . .''

ஆவுலி! கழற்று நகைகளை. அவிழ்த்துப் போடு பட்டுப் பீதாம்பரங்களை. முன்போல உனக்கு நான் அளித்த எளிய புடவை அணிந்து வா என்றார். மனைவி ஏமாற்றத்தை வெளியே காட்டாமல் பொன் மணி யணிகளைக் கழற்றித் தட்டில் வைத்தாள். பட்டுப் பீதாம்பரங்களை அவிழ்த்து மடித்து அதில் வைத்தாள். துக்காராம் பவுன்களைத் தொடவேயில்லை. மந்திரியிடம்''ஐயா எல்லாம் கொண்டு போய்ச்சிவாஜியிடமே தந்துவிடும்'' என்று,

''பொன்னும் மணியும் போகமும் எனக்கேன்?
மின்னும் மாயம் மினுக்குகள் எனக்கேன்?
புன்னகை செய்து பொலிவா யென்னுள்
கண்ணா கருணைக் கடலே சரணம்''

என்று பாடியாடி யின்புற்றபோது, தூண் மறைவில் நின்ற சிவாஜி ஆவேசமாக வந்து துக்காராம் காலில் விழுந்து வணங்கினான்.

## அரசியல் கடமை செய்க :

தரும வீரனே! கரும வீரனே! பாரத தேசம் வாழப் பிறந்த தீரனே நீ வாழ்க வாழ்க! என்று துக்காராம் ஆசீர்வதித்தார்.

சிவாஜி : ''சுவாமி என்னைச் சீடனாக ஏற்க வேண்டும்! தங்கள் சங்கீர்த்தனத்தில் நான் கலந்து கொள்ள வேண்டும். அரசியல் புளித்தது; இனி ஹரிபஜனையும் சேவையுமே செய்வேன்'' என்று உருக்கமாக வேண்டினான்.

துக்காராம் : சிவாஜி வேந்தே, என் கடமை என்னுடன். தங்கள் கடமை தங்களுடன். தங்களுக்குரிய அரசியற் கடமையை விடக் கூடாது. தங்களுக்குக் குருவாகத் தகுதியுள்ளவர் சமர்த்த குரு ராமதாஸ் சுவாமிகளே. அவர் ராமபக்தர், தவயோக சித்தர், நிறைவான துறவி. அவரையே குருவாக ஏற்கவும்.

சிவாஜி : சமர்த்த குருவை ஏற்கிறேன். அதற்கும் தாங்களே வழி துலக்க வேண்டும்.

துக்காராம் : அவ்வாறே செய்வோம். இராமதாசர் தங்களைக் கண்டு பெரிதும் மகிழ்வார். அவர் ஆணைப்படியே அரசியலை நடத்தும். என்னிடம் ஜபமாலை இருக்க வேண்டும்; தங்களிடம் செங்கோல் விளங்க வேண்டும்.

58598

சிவாஜி : சுவாமி தங்கள் நாம சங்கீர்த்தனம் பண்டரிபுரத்தில் நடக்கும்போது நானும் கலந்து கொள்ளவேண்டும்.

துக்காராம் : அவ்வாறே செய்யலாம். ஹரி பஜனையாலே அரசியலுக்கும் அருள் வல்லமை உண்டாகும்.

**பகைவர் சூழ்ந்தனர் :**

ஆளந்தி, பண்டரிபுரம், சஜ்ஜனகட்டம் முதலிய பல இடங்களில் துக்காராமின் அபங்க பஜனைகள் ஆவேசமாக நடந்தன. சிவாஜியும் கேட்டு வந்தான். ஒரு தரம் விட்டோபா கோவிலில் பஜனை நடந்தது. சிவாஜியும் கலந்து கொண்டான். இதையறிந்த முஸ்லிம் சர்தார் கோவிலை வளைத்துக் கொண்டு சிவாஜியைப் பிடித்துச் சிறையிட முன்னின்றான். இதோ ஒற்றன் வருகிறான். படைகள் வருகின்றன. சிவாஜி தன் ஒற்றர் வாயிலாக இதையறிந்து துக்காராமிடம் சொல்லவே, அவர் ''கண்ணா நீயே காவல்; அறத்திற்குக் காவலனை அரசனைக் காப்பாய்'' என்று பாடினார். உடனே கோவில் வாயில் நாற்புறத்தினின்றும் சிவாஜி போல ஒருவர் ஓடுவதாகக் கண்ட முஸ்லிம்கள் துரத்திக் கொண்டு வெகு தூரம் சென்றனர். சிவாஜி தனது வீரருடன் குதிரையேறிப் பூனாவுக்கு விரைந்து தப்பினான்.

**கண்ணன்—காதல் வெறி :**

இவ்வாறு எத்தனையோ நிகழ்ச்சிப் படலங்கள் துக்காராம் வரலாற்றில் நிகழ்ந்தன. இன்பமும் துன்பமும் சோதனையும் சாதனையும் கலந்தே வந்தன. துக்காராமின் ஒரே வேட்கை கண்ணனைக் கண்டு கலந்து போவதே; ஆர்வக் கனவில் எழுந்த அருளிசைப் பாடல்கள் கேட்டன, உருக்கின. துக்காராம் இறுதி நாட்களில் கண்ணன்—காதல் வெறியேறி, தன்னை மறந்து, உலகைத் துறந்து, மாறிப் பிறந்து, கண்ணனை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து உருகி, கண்ணீர் பெருகிப் பெருகிப் பாமழை பொழிந்தார். கண்ணன் தன்னைஆட்கொள்ளாவிட்டால் தற்கொலை செய்து கொள்ளவும் முனைந்தார்.

உன்னடியில் அன்புவைத்தேன்
கண்ண பரமாத்மா
உலகெல்லாம் நீயெனக்குக்
கண்ண பரமாத்மா

என்று துக்காராம் பாடி யாடிக் கண்ணனைக் கூடிக் குழைந்தார். அவரது பக்தியின் சக்தியால் இறந்துபோன ஒரு குழந்தையைக் கூட எழுப்பி அதன் தாயை மகிழ்வித்தார். அவரை அறியாமல் எத்தனையோ அற்புதங்கள் நிகழ்ந்தன.

**ஏகாதசி மோட்சம் :**

*1650* ஆம் ஆண்டு பங்குனி மாதம் வியாழக் கிழமை, ஏகாதசி. அன்பர் குழாம் அவர் பாடல்களை மனங்குழைந்து பாடினர். இந்திராணி ஆற்றங்கரையில் அற்புதம் நிகழ்ந்தது. துக்காராம் ''காத்திருக்கின்றான்—கண்ணன்—நான் கடைத்தேறக் கருணைமுகம் காட்டி அழைக்கின்றான்'' என்று பாடினார். பாட்டுக் கேட்டது. ஆள் மறைந்தார். மேலே மின்னொளி பளிச்சிட்டது. விண்ணில் இசை கேட்டது.

ஆண்டு கொண்டான் என்னை
ஹரி விடலன்
ஹரி விடல ராமகிருஷ்ண ஹரிஎன்றே
வேண்டி முறையிடுமின்—அன்பரெல்லாம்
வேண்டியதைத் தருவான்
வேட்கை தீர வருவான்.

என்ற பாட்டு விண்ணிற் கேட்டது. அவரது ஜாலராவும், ஆசனமும் மேலிருந்து விழுந்தன.

துக்காராம் சாதி சமய வேறுபாடுகள் அறவே நீங்கி அனைவரும் ஒரே அருட்குலமாக அன்பு செய்து ஆண்டவனை அடையும் வழியையே காட்டினார். அவர் கருத்தை இசைத்து முடிப்போம்.

எடுப்பு

அற்புத மாகிய விருந்தே—ஐய
ஹரி விடல நாம மருந்தே
ஆர்வமுடன் அதை அருந்தே
ஆத்மானந்தத்தைப் பொருந்தே (அற்)

தொடுப்பு

கற்கண்டு பாலாடை கட்டி மிட்டாயினும்
கனிரசப் பாகினும் இனி தினிதினி திது (அற்)

முடிப்பு

தின்னத் தின்னச் சுவை இன்னும்இன்னும் தரும்
தேவகான சஞ்சீவி
அன்னையூட்டு கின்ற அமுதினும் இனியது
அருந்திடின் மகிழ்ந்திடும் ஆவி
அமர சித்திவரும் தாவி
ஹரிஓம் ஹரிஓம் ஹரிஓம் எனவே
அற்புதமாகிய விருந்தே

—சுத்தானந்தபாரதி.

தொலைபேசி எண் : 3845

# சேலம் கோட்டை அருள்திரு பெரிய மாரியம்மன் திருக்கோயில்

## சேலம்-1

—:o:—

இருளிடர் அகன்று வாழ்வில் ஏற்றமும் புகழும் சேரும்,
பொருள்மிகும், பிணிகள் ஓடும், போற்று நல் அறங்கள் சூழும்,
இருபெரும் பேறும் கிட்டும், எண்ணங்கள் வெற்றி யாகும்,
அருள்மிகு கோட்டை மாரியம்மனை வழிபட் டோர்க்கே''

சேலமாநகரத்தில் இதயம் போன்ற மையப் பகுதியில் அமைந்திருப்பது இத்திருக் கோயில். இத்திருக்கோயிலை அடுத்துத் தென் பகுதியில் வெளியூர்ப் பேருந்து நிலையமும் நகரப் பேருந்து நிலையமும் இருக்கின்றன. வடபுறமும், கிழபுறமும் பெரும்பெரும் வாணிப நிலையங்கள் கொண்ட கடைவீதிப் பகுதிகளாகும். மேல்புறம் திருமணிமுத்தாறு வடபுற மிருந்து தெற்கு நோக்கி ஓடுகின்றது. ஆக இத்திருக்கோயில் அமைந்துள்ள இடம் எந்த நேரத்திலும் மக்கள் கூட்டம் நிறைந்ததாகும்.

வேண்டிய வரங்களை மெய்யன்பர்களுக்கு அருள்பாலிக்கும் அருட்சக்தியாக விளங்கி வருபவள், சேலம் கோட்டை அருள்திரு பெரிய மாரியம்மன் என்பது தொன்றுதொட்டு இருந்து வரும் நம்பிக்கையாகும். ஆகவே இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் கூட்டம் நாளுக்கு நாள் பெருகி வருவதிலிருந்தும், ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்துவரும் உண்டியல் காணிக்கைகளிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

இத்திருக்கோயிலின் கருவறையைப் புதுப்பித்துக் கல்மண்டபமும், விமானமும் நிர்மா ணிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் இத் திருக்கோயிலுக்கு யானை ஒன்று கூடிய விரைவில் வாங்க இருக்கும் செய்தியை மிக அன்போடு தெரிவித்துக் கொள்கிறோம். பூசை நேரத்தில் ஒலிப்பதற்காக சுமார் 100 கிலோ கிராம் எடையுள்ள பெரிய ''ஆலயமணி'' ஒன்று இத்திருக்கோயிலில் அமைப்பதற்கு உண்டான ஏற்பாடுகள் செய்து வருகிறோம். இத்திருக்கோயிலின் பின்புறமுள்ள திறந்த வெளியில் ரூபா. 88,000/- மதிப்பீட்டில் ஒரு திருமண மண்டபம் கட்டப்பட இருக்கிறது. இத்திருக் கோயிலின் அம்மனுக்கு வெள்ளியில் ஒரு திருத்தேர் சுமார் 11 அடி உயரத்தில் வெளி மண்டபத்தைச் சுற்றி உலா வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது என்பதை யும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்திருக்கோயிலின் சிறப்பான திருப்பணிகளுக்கு மெய்யன்பர்களின் அருள்மிகுந்த ஆதரவும், பொருள் மிகுந்த ஒத்துழைப்பும் என்றென்றும் இருக்க வேண்டும் என்ற அன்பு வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**என். கே. இராமசுவாமி,** பி.ஏ.,
செயல் அலுவலர்.

**பி. கோவிந்தசாமி,** எம்.சி.,
தலைவர், அறங்காவலர்குழு.

**ஏ. ஆர். அரங்கசாமி செட்டியார், ஆர். விஸ்வநாதம்,** எம்.சி.,
அறங்காவலர்கள்.

# காதி கிராப்ட்

அளிக்கிறது சுவையும், வெண்மையும்.




ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.

ஆரோக்யம் தரும் சுத்தமான தேன், கதர்த்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட் ஆடைகள், சுத்தமான எண்ணெய், கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப் பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல பொருட்களையும் வாங்கலாம்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன.




| தொலைபேசி | சென்னை | திருச்சி | கோவை |
|---|---|---|---|
| | 29684 | 3814 | 35051 |
| | 81954 | | |

கதர் கிராமத் தொழில் வாரியம் தமிழ்நாடு


வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.